சுதேசமித்திரன்



30, ஜனவரி '49.........4 அணா





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஸ்ரீ பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக்: பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள். ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம் 30மாத்திரைசீசா1 ரூ.7

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோகவியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகர்ண மூலிகை, பிரதி ஸரஸ்வதி ஸ்தோத்ரம், ஸ்ரீதன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3

ஆனந்த படை நிவாரணி

எல்லா விதமானபடைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது.எங்கும்கிடைக்கும்.கேட்லாக்இனும். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்,

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை கொடுக்கும்
RESTORES MAN HOOD



देवामृतम्
"भीम-वीर"
शाश्वत शक्ति देनेवाला है
MAKES MEN YOUNG

Nectar of Life

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம். மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ தைமீ 17௳ ★ 1949-௵ ஜனவரிமீ 30௳ No. 53

வாழ்க மகாத்மா !

இந்த காந்தி சகாப்தத்தில் ஜனவரி 30-ந் தேதி சரித்திர முக்கியத்வம் பெற்ற நாள். மகாத்மா புகழுடம்பெய்திய தினம் அது. சென்ற வருஷம் இதே தேதியில்தான் அண்ணலின் பிரிவு கேட்டு அகில உலகமும் கதறியழுதது. உலக மக்கள் அமைதியோடு சன்மார்க்கத்தில் முன்னேறுவதற்காக வழி காட்ட வந்த தேவ தூதனாக மகாத்மாவை மக்கள் மதித்ததில் வியப்பென்ன?

அறத்துக்கும், மறத்துக்கும் மூண்ட போரில் ஆத்ம ஒளியோடு சத்திய நெறியில் சாத்விகப் போரிட்டார் மகாத்மா. ஐம்பது ஆண்டுகள் சலியாமல் உழைத்தார். பெரிய சோதனைகளையெல்லாம் எதிர் நோக்கி நின்று அரிய சாதனைகளைச் செய்து காட்டினார். துன்பம் நெருங்கி வந்தபோதும் சோர்ந்து போகாமல் அன்பு மிகுந்த தெய்வத்தை நம்பி தன் பணியைச் செய்தார்; அவ் வழியையே நம்மைப் பின்பற்றவும் சொன்னார்.

கீதை உபதேசத்தின் உட்கருத்தை உணர்ந்த மகாத்மாவின் உயிரைச் சூடு என்ன செய்யும்? குளிர்தான் என்ன செய்யும்? தொண்டொன்றுதான் தமது மூலப்பணியென்று கண்ட மகாத்மாவுக்குச் சோர்வோ, வீழ்ச்சியோ எதுவுமிருந்ததில்லை. எனவே பாரத மக்கள் ஒருமனப்பட்டு அவர் தலைமையில் தவப் போரில் தயங்காமல் ஈடுபட்டனர். அதன் பயன் நமது சுதந்திரம்.

அரசியல், சமூகம் முதலிய துறைகளில் மகாத்மாவின் கவனம் திரும்பாத அம்சம் ஏதுமில்லை. வறுமை நீங்க வகை செய்து கதர் உற்பத்தியைச் சுட்டிக் காட்டினார். கிராமங்கள் செழிக்கக் குடிசைத் தொழிலை வளர்க்க ஏற்பாடு செய்தார். சகோதரபாவம் தழைக்க ஹரிஜன முன்னேற்றத்தில் சிந்தையைத் திருப்பிவிட்டார்.

ஆத்மிக பலத்தாலும், சத்தியம், அஹிம்ஸை என்ற ஆயுதங்களைக் கொண்டும் அற்புதங்களை நிகழச் செய்த அண்ணல் மறைந்த இப்பெரு நாள் மக்களுக்கு உணர்த்தும் படிப்பினை மகத்தானது. வகுப்புத் துவேஷவெறி எப்படி நமது சுகவாழ்வின் ஆணி வேரைக் கல்லி அரித்து விடுமென்பதை எடுத்துக் காட்டி, சகோதர உணர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்தினார் மகாத்மா. அந்தத் தொண்டில் ஈடுபட்ட அவர் அதே வகுப்புவாத வெறிக்கிரையானார். அவரளவில் அவரது தொண்டு பூர்த்தியாயிற்று. நாமியற்ற வேண்டிய தொண்டுதான் இனி. இதைச் சிறக்க நிறைவேற்றி, மகாத்மாவின்லட்சியமாயிருந்த நிர்மாண திட்டத்தை நிறைவேற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் மரியாதை; ஞாபகார்த்தம்.

வாழ்க மகாத்மா !

[1]

காந்தி காந்தி என்று சொல்லிக்
கவலை மாற்று வோம்;—நம்
ஏந்தல் சாந்த வாழ்வை நாளும்
ஏற்றிப் போற்று வோம்.

[2]

உள்ள மார்ந்த கொள்கை ஏந்தி
உயிர் கொடுத்தா ரே!—இந்தக்
கள்ள மில்லாத் தியாகத் தினால்
காலம் வென்றா ரே!

[3]

கருணை வள்ளல் உருவை எண்ணிப்
பெருமை பாடு வோம்—அவர்
திருவதனக் குறுநகையின்
பொருளைத் தேடு வோம்!

[4]

அடிகள் காத்து நின்ற அன்புக்
கொடியுயர்த்து வோம்!—இந்த
மடமை காட்டும் கொடுமை யெல்லாம்
மடியச் செய்கு வோம்!

[5]

அண்ணல் சொன்ன வண்ண மென்றும்
அஹிம்சை பேணினால்—இரு
கண்ணிருந்தும் குருட ராகுங்
காலம் மாறுமே!



★

ராஜ்காட்டில் மகாத்மாஜி தகனக்கிரியை நடந்த இடத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள பளிங்கு மேடை.

★

(நடு)

மகாத்மாஜி தகனமான ராஜ் கட்டத்தில் இத்தகைய போர்டில் எழுத்துக்கள் பொறித்து இடத்தைக் குறிப்பிட்டிருக் கின்றனர்.

இவ்விடங்களைப் பார்க்கும் போது மகாத்மாவின் திவ்விய தோற்றம் நம் மனக்கண் முன் தோன்றுகிறது எனவே அவரது படத்தையும் சேர்த்தே இங்கு வெளியிடு கிறோம்.

(கீழ்)

ராஜ்கட்டத்துக்குச் செல்லும் பிரவேச வாயில்.



"அந்த வெள்ளிக்கிழமையை நினைத்துக்கொண்டேன். இதோ, வந்துள்ள ஞாயிற்றுக் கிழமையையும் நினைத்துக் கொள்கிறேன். நம் நாட்டின் ஞாயிறு மறைந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது என்பதை நினைப்பூட்டுகிறது இந்த ஞாயிறு.''

நினைவுக்குறிப்புகளுக்கு என்று ஏற்பட்ட 'டயரி'யில் இவ்வாறு எழுதியிருந்தேன் நான், இந்த முற்பகல். மறக்கணும் என்றாலும் முடியாதுதான் அந்த நாளை. எனினும் டயரி வைத்திருந்த 'தோஷம்' என்னை எழுதத் தூண்டியது, எழுதினேன்.

"என்ன? இவ்வளவுதானா எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டார் என் கணவர், பிற்பகலில்.

"வேறு எழுத என்ன இருக்கிறது? எழுதவும் இடம் ஏது அந்தத் தாளில்? கொஞ்சம்தான் இடம் இருக்கிறது!'' என்று சொன்னேன் நான்.

டயரி என்றால் சம்பவங்களையும் எழுதவேண்டும். அந்தச்சம்பவங்களால் எழக்கூடிய நினைப்புகள், உணர்ச்சிகள், யோசனைகள், கற்பனைகள் எல்லாம் கொஞ்சமாவது எழுத வேண்டும் — நிஜந்தான். ஆனால், இன்றைக்கு நான் எழுதவில்லை அந்த முறைப்படி.

"இப்படி எழுதுவதில் பிரயோசனமில்லை என்று சொல்லியிருக்கிறேனே!'' என்றார் அவர் மீண்டும்.

"ஆமாம்—ஆனால் இன்றைக்கு என் மனதில் தோன்றுவதை எழுதாவிட்டால் மோசம் ஒன்றுமில்லை என்றுதான் வெறுமனே அப்படி எழுதிவிட்டு நிறுத்திவிட்டேன்!'' என்றேன், எனக்கு வந்த சிரிப்பை அரைகுறையாக அடக்கிக் கொண்டு.

"ஏனோ?'' என்று கேட்டார்.

"ஏனோவா? இன்றைக்கு மனதில் தோன்றுவதையெல்லாம் எழுதிச் சாத்தியப்படாது! கதையாய் நீளும் எழுதினால்!'' என்றேன் நான்.

"ஏன். அந்த நாளைப்பற்றி அவ்வளவு வருத்தம் ஏற்படுகிறது என்பதனாலா?'' என்று அவர் கேட்க முடியவில்லை; நான் பதில் சொன்னபோது சிரித்துக் கொண்டேயல்லவா சொன்னேன்!

"அப்படி இழுக்கடித்து எழுத வேண்டாம்! ஒரே வாக்கியத்தில், உன் மனதில் தோன்றுவதைப் பதித்துவிட வேண்டும்! காந்திஜியின் மறைவைப்பற்றி உனக்கு இன்று என்ன தோன்றுகிறது? அதை எழுதணும்!'' என்றார் அவர் அழுத்தந்திருத்தமாக.

"சரி, தாருங்கள் டயரியை! உங்கள் மனதிலும் குறையிருக்க வேண்டாம், பேச்சைத் தட்டுகிறேன் என்று! காகிதத்திலும் அந்தக் குறையிடம் வேண்டாம்!'' என்றேன். டயரியை வாங்கிக்கொண்டேன்.

"இந்த இடைக்கால ஒரு வருஷமும் பொதுவாக, எனக்கு இன்பம் நல்கிய நல்லாண்டாகவே விளங்கிவிட்டது! இவ்வாறு சொல்லவும், நினைக்கவும் எனக்கே வெட்கமாயிருக்கிறது! ஆனால் காந்திஜி விரும்புவது உண்மையைத்தான்! நானும் உண்மை விளம்புகிறேன்'!

இப்படித்தான் எழுதினேன் இந்த ஜனவரி 30—ம் தேதித் தாளின் பிற்பகுதியிலே.

"அடிபாவி! டயரியை வேறு யாரும் பார்க்கமாட்டார்கள் என்ற துணிச்சலோ?'' என்று கோபத்துடன் சொல்வதுபோல சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்.

"ஏன்—எழுதக்கூடாதா? நிஜந்தானே நான் எழுதினது! இந்த ஒரு வருஷத்தில் பதினோரு மாதத்துக்கும் மேலாக நமக்குச் சந்தோஷமாகத்தான் போச்சு காலம்! ஒரு இரண்டு மூன்று வாரம்தான் ஏதோ கவலை, குழப்பம், ஆரம்பத்தில்! இல்லையா?'' என வினவினேன்.

"நிஜந்தான்!——காந்தி மகானைப்பற்றி எழுதின இந்த இடத்தில்——போலி வருத்தம் வெளிப்படுத்துவதாக வேறு எதுவும் எழுதுவது நியாயமில்லைதான்!'' என்று ஒப்புக்கொண்டார் அவர். அவர் அவ்வாறு மொழிகையில், அவர் குரலிலும் பேச்சிலும் நிதானம், பக்தி, அடக்கம், தொனித்ததை நான் உணர்ந்தேன்.

'இப்படி எழுதத்தோன்றிற்று அப்போதே! எழுத வேண்டாமே என்றுதான் விட்டு விட்டேன். "ஏன் எழுதத்தூண்டினோம்!'' என்று இப்போது வருத்தமாக இருக்கிறதா?'' என்று அவரைக் கேட்டேன்.

"இல்லை——இருக்கட்டும்! எழுத வேண்டியதுதானே! இழிவு என்ன, சந்தோஷமாகக் கழிந்த வருஷம் என்பதில்! சந்தோஷமாகத்தானே இருந்தோம்!'' என்று சொல்லிவிட்டார் அவர் புன்னகை எட்டிப்பார்க்க. என் மனதும் சாந்தி பெற்றது.

மாலையில் நண்பர் ஒருவரைப் பார்க்க அவர் மட்டும் போக வேண்டியிருந்தமையால், நான் வீட்டில் தங்கிவிட்டேன்.

"இந்தமாதிரி மாலை நேரத்தில்தான்!'' என்று என் மனம் எண்ணியது. தனியாளாக நான் மட்டும் இருந்தால், ஏதேதோ யோசனைகள், நினைப்புகள்.

'இப்படி எழுதிவிட்டோம்! எழுதியிருக்கக்கூடாதோ? அவருக்குக்கூட முதலில் எப்படியோ தோன்றியதல்லவா?'' என்று எழுந்தது ஒரு எண்ணம்.

டயரில் இருந்தத்தாளைக் கிழிப்பதா? கிழித்தால் இந்தத் தேதியே இராது! கிழிக்காமல் எழுதினதை அடித்துவிட்டு வேறு எழுத——இடங்கிடையாது தாளில் அடைத்து நிரப்பியாச்சு.

மேஜைமேல் வெள்ளைத் தாள்கள் கிடந்தன. ஒரு யோசனை தட்டிற்று. பேனாவுடன் அமர்ந்தேன் மேஜையருகே. பேனா முனையும் சிந்தனையும் இழைந்து ஓட விட்டேன்.

* * * *

அந்த வெள்ளிக்கிழமை.

புயற்காற்றுக்கு முன்னுல் கிளுகிளுப்புடன் வீசும் மாயக் காற்றிலுங்கூட, களங்கமறியாதவைகளாய், கலப்பற்ற மகிழ்வுடன் தானே அசைந்தாடுகின்றன செடி கொடிகள்?-நாங்களும்—அப்படித்தான், கலப்பற்ற உவகையுடன் ரசித்துக்கொண்டிருந்தோம் இசையை, நாங்கள்!.... யார்? — அவரும் நானுமல்ல! பத்மாவும் நானும்! அவரும் நானும் திருமண மூலம் பிணைபட்டிருக்கவில்லை அப்போது! ஏன்—எங்கள் உள்ளங்கள்கூட அன்பினுல் இணைபடவில்லை அப்போதைக்கு!

மணி இன்னும் ஆறு அடிக்கவில்லை.

''இன்னும் ஐந்து நிமிஷம்தான் இருக்கு! பாட்டு முழுக்கக் கேட்க முடியாதுபோலிருக்கு!'' என்ருள் பத்மா.

''அதென்ன கணக்கோ? ஒரு ஐந்து நிமிஷம் முன்னே பின்னே போனுல்தான் என்ன?.... வரப்போகிறது ஏதோ நல்ல நிகழ்ச்சியா—அதுவுமில்லை! செய்திகள்!'' என்று ஒத்தூதினேன் நான்.

மென்னியைப் பிடிக்கிற மாதிரி குரலிசையை இடைமடக்கி, அஞ்சல் செய்வதை நிறுத்திவிடப் போகிருர்கள் வானெலி நிலையத்தார்—என்பதிலே எங்களுக்கு மாபெரும் அதிருப்தி.

அந்த சமயம் அறையுள் வந்தார் பத்மாவின் கணவர்—செய்திகள் கேட்கணுமென்று வந்தார். வெகு சிரத்தையாக நாற்காலியை வானெலிப் பெட்டியருகு இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

''நமக்குச்செய்திகள் முக்கியமில்லை! ஆனுல் எல்லோருக்கும் அப்படியா?'' என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டோம்

''செய்திகள் வேதனை வேண்டாம் நமக்கு!'' என்று எழுந்து போக எழுந்தேன் ஆனுல் அடுத்த பத்து நிமிஷங்களுக்கு அப்புறம் நல்ல நிகழ்ச்சி இருக்கும், கேட்கலாம் என்று அவள் சொன்னதால் ஒப்பினேன்.

செய்திகள் துவங்கின.

''உஸ். இருங்கோ! நியூஸ் வருகிறது!'' என்று அடக்கி விட்டார் அவர். திரும்பிப் பாராமலே! செய்தி ஆர்வம்!

''நாம் போகலாமே! பேசாமல் நம்மால் இருக்க முடியாது!'' என்றேன் நான் மெல்ல.

''நிஜந்தான்! மௌன விரதம் நம்மாலே முடியாது தான்!... வேண்டவும் வேண்டாம்! வெளியிலே போய் பேசலாம்!'' என்று அவள் குரலை அடக்காமலே பேசிக்கொண்டு எழுந்தாள். கணவன் காதில், அவரைப்பற்றிய—அவருடைய செய்தி ஆர்வத்தைப் பற்றிய—விமரிசனம் விழட்டுமே என்றுதன் அவள் எண்ணம். மனப்போக்கிலே அவருடன் ஒத்துப் போகாவிட்டாலும், அன்பில் குறைந்தவளல்ல, தான், என்று பெருமிதம், நம்பிக்கை!

எடுப்பாகக்கேட்ட அவள் குரலொலியால் அவர் சினந்து கூவுவார் என்று தோன்றியது எனக்கு அந்தக்கணம் ஆனுல்......

''ஏய்....ஏய்!....இருங்கோ!...... என்ன?'' என்று படபடத்து எழுந்தார் ஸ்ரீனிவாசன்.

''என்ன.....காந்தீஜியா......அவரையா?' என துடித்தார் அடுத்த நிமிஷம்.

ஆம், அந்தச்செய்தியேதான்!—நம்புதற்கியலாத அதே செய்திதான்! நாங்கள் வெறுத்த செய்திகளின் சிகரமாகி விளங்கிய அந்தக் கொடுஞ் செய்திதான்!

'காலதேவனின் கட்டளைகளுக்குப் பழக்கப்பட்டவர்களும், கடமைக்குட்பட்டவர்களுமான ரேடியோ நிலையத்தினர், 'கால' தேவனின் இந்தக் கட்டளையைப் பற்றியும் சொன்னுர்கள். குரல் சிலிர்த்தாலும், வாய் கூசினுலும், கடமையை எண்ணி, கேட்போரின் பிரமையையும், சந்தேகத்தையும் போக்கி, நன்கு தடவைகள் சொன்னுர்கள்.

எங்கும் பரபரப்பு—சோகம்.

''என்ன?'' என்று திகைப்புடன் கணவனின் பக்கத்தில ரேடியோ வருகில் நின்று விழித்துக்கொண்டிருந்த பத்மாவிடம், அரைகுறை விடைபெற்று, வீட்டிற்கு ஓடி வந்தேன்.

எனக்கும் அங்கே இருப்பாக இருக்கவில்லை. அப்பாவுக்கும் சொல்லணும் செய்தி என்று ஓடி வந்தேன்.

செய்தி கேட்டு விழித்த அம்மாவை, ''அப்பா எங்கே!'' என்று கேட்டேன்.

''அப்பா எங்கேடி இருக்கா? ஊருக்குப் போயிருக்காளே!'' என்று நினைப்பூட்டினுள் அம்மா. நான் விழித்தேன்.

அப்பாவுக்கு காந்திபக்தி அதிகம். எப்படித் தாங்குவாரோ இந்தச் செய்தியை என்ற கவலையும் சார்ந்தது எங்களை, இப்போது.

அன்று இரவு ஊர்மீள வேண்டிய என் தந்தை, வர இயலவில்லை. எங்கும் நடந்த ஹர்த்தால் முதலியவற்ருல் போன காரியம் சீக்கிரம் முடியவில்லை. இரண்டு மூன்று நாள் கழித்து வந்தார்.

வந்தவர் ஒரு துணுக்கந்தரும் செய்தியுடன் வந்தார். அத்தான் பலராமன் ஏதோ சங்கம் ஒன்றில் சேர்ந்தவனும். மகாத்மாவின் கொலைக்குச் சூழ்ச்சி செய்தவர்கள் இந்த சங்கக்காரர்கள் என்ற ஐயம் எழுந்திருப்பதால், சங்கத்தைச் சாந்தவர்களை அரசாங்கம் கைது செய்கிறது. அத்தானையும் கைதுசெய்ய நேரலாம். இதுதான் விஷயம்.

அத்தான் எங்கேயோ இருந்திருந்தால் எங்களுக்கும் அப்பாவிக்கும் அவனைப்பற்றிய கவலையோ பொறுப்போ ஏற்பட்டிராது. அத்தான் இந்த ஊரிலேயே இருந்தான். ஹாஸ்டலில் தன் பெரியப்பா பிள்ளையுடன் இருந்து வந்தான். கல்லூரி மாணவன்.

அப்பா போயிருந்தது அத்திம்பேரின் ஊருக்குத்தான். பிள்ளையை எச்சரிக்கை செய்து ஜாக்ரதையாக விருக்கும்படி அத்தையும் அத்திம்பேரும் அப்பாவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அத்திம்பேர் கடிதமூலமும் என் தந்தையின் மூலமும் பிள்ளைக்கு எச்சரிக்கையும் புத்திமதியும் விடுத்துவிட்டுத் தாமும் இரண்டொரு நாட்களில் இங்கே வருவதாகக் கூறியிருந்தார்

அப்பா புறப்பட்டார், அத்தானின் ஹாஸ்டலை நோக்கி, பொறுப்பாக. ஊர் வந்த மூன்றுமணி நேரங்களுள். பிற்பகல் மூன்று மணி சுமாருக்குப் புறப்பட்டு விட்டார்.

''அத்தானையும் கைது செய்து விடுவார்களா?'' என்று எனக்கும் மற்றவர்களைப்போல் துணுக்கமாகவும் வருத்தமாகவும் இருந்தாலும்——''முரட்டு அத்தான் தான்!——'' என்று எனக்கு ஒரு ஊர்ஜிதம் மனதில்! அவனைப் பற்றி கவலையோ ஏக்கமோ ஏற்படவில்லை எனக்கு! அப்பா அத்தானைப் பார்க்கக் கிளம்பிப் போனதும், நான் அம்மா இருந்தவிடம் போனேன் ஏதோ சொல்ல; சொல்வதற்கு நாயெழவில்லை.

''அம்மா! நாமெல்லோரும் மூன்று வருஷங்களுக்கு முன்பு

அத்தை வீட்டிற்குப்போனபோது எப்போது பார்த்தாலும் அத்தான் "சங்கத்துக்கு!" 'சங்கத்துக்கு!'' என்று ஓடிக்கொண்டிருந்தானே—அதான் போலிருக்கு இந்த ஆர். எஸ். எஸ்!" என்று மட்டும் சொன்னேன்.

'ஆமாண்டி!... நிஜந்தான்! அதான் போலிருக்கு! உனக்கு நினைவிருக்கே!'' என்றாள் அம்மா, ஆச்சரியமுடன்.

"அத்தானைப்பற்றி இவ்வளவு நினைவு வச்சிருக்கிறவள், பின்னே எதுக்காகத்தான் அப்படி மூஞ்சியை வலிச்சயோ——கல்யாணம் பண்ணிக்கிறயான்னு கேட்டதுக்கு!'' என்று ஒரு புன்னகையுடன் சொன்ன அம்மா 'தெரியும் போலிருக்கு இப்படி நடக்கப்போறது. ஜெயிலுக்குப் போவான்னு!'' என்று தொடர்ந்து தானே கூறிவிட்டுப் பேச்சை முடித்தாள். நான் வந்துவிட்டேன் வாசலுக்கு. ஆனால் மனதில் என்னமோ குடைச்சல்.

"அத்தானைப்பற்றி மறந்துவிட முடியுமா?......'' என்றது என் உள்ளம். அந்த நினைப்பில் காரசாரம்தான்!

அத்தை வீட்டில் இருந்தேன். பெற்றோருடன் போயிருந்தேன் ஒரு நாலு நாளைக்கு.

'என்ன அத்தான் இது! மரக்கத்தியா?'' என்று கேட்டேன் நான். திடுக்கிட்டுப் பார்த்தான் அத்தான்!

"ஏய், என்னது! வைடீ! போடீ, உன் காரியம் பார்த்துண்டு!'' என்று சீறினான் அத்தான். துணுக்கமுற்ற அத்தான்.

"காரியமென்ன இருக்கு வேறே! உன்னுடைய புஸ்தகங்களைப் பார்க்கலாம்னுதான் வந்தேன்!—'' என்று சொன்னேன் அச்சமுடன்,

"அது சரி...ஆனால் இந்த இதையெல்லாம் ஏன் எடுத்தே!......கத்தாதே! உன்னுடைய தம்பி தங்கை வால்கள் விடாதுகள் தெரிஞ்சால்! விளையாடக் கேட்குங்கள்! என்றான் அத்தான் அடங்கிய குரலில்.

"சரி, இதோ போயிடறேன்!—ஏதாவது புஸ்தகம் தாயேன்—இதென்ன புஸ்தகம்?'' என்று அங்கிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்தேன்.

"ஏய்—வை, வை! இது என்ன துணிச்சல்!'' என்று மீண்டும் சீறினான் அத்தான், அறையாத குறையாக.

அறையாத குறையாக நான் வந்துவிட்டேன் அப்பால். அன்று மாலை "சினிமாக்குப் போகலாம்!" என்று அவனே வீட்டார் எல்லோரையும் கிளப்பிவிட்டதையும், சினிமா வைப்பற்றி அவன் வேடிக்கைகள் செய்ததும்தான் எனக்கு ஏதோ கொஞ்சம் உவகை தந்தது அவன் விஷயமாக. மறுநாள், அன்று தான் புறப்பட்டுவிடப் போகிறோம் அங்கிருந்து...அப்படியிருந்தும் அவன் மீண்டும் சீற்றங்காட்டி என்னை அதிரடித்ததுதான் என் மனம் விட்டு அகலவில்லை. அவனுடைய அறையில் சுவர் ஓரமாக இருந்த ஒரு முதியவனின் படத்தைக்காட்டி "யார் அது, அத்தான்?'' என்று வெகு மெதுவாகக்கேட்டேன்.

"உனக்கெதுக்கு டீம்மா?... அதெல்லாம் ரொம்ப முக்கியமோ உனக்கு?'' என்று அதட்டலாகச் சொன்னான் பதில். எதற்கு அவ்வளவு கோபமோ என் கேள்விகளில்? எனக்கு அவன் மீது இருந்தகொஞ்சம் நஞ்சம் நல்லெண்ணமும் போய்விட்டது!

'அப்பா!...மகா முரடு—ஒரே சீற்றம்தான்!'' என்று நினைத்துக்கொண்டேன்.

அத்தையிடம் ஏதோ பேச்சுவாக்கில், "ஏதுக்கு அத்தை—சங்கம், சங்கம்னு பறக்கிறான் அத்தான்?'' என்று கேட்டேன். "அதென்னவோ சங்கப்பித்துப் பிடிச்சிருக்கு! தடிக்கம்பு வச்சிண்டு சண்டையாம், குஸ்தியாம்!—முரட்டுத்தனம் ஏற்கெனவே! வயசுத் துடுக்கு! இப்போ என்னமோ—மஹா முரடாயிருக்கு பிள்ளை!'' என்று என் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்துவிட்டாள் அத்தை.

இன்று அந்த ஊர்ஜிதத்தையும் உறுதிப்படுத்திவிட்டது அப்பா கொணர்ந்த தகவல்!

ஆனால் என் மனதில்—குடைச்சல்? தெரியவில்லை. அன்று மாலை பத்மாவிடம் போனேன், சொன்னேன்.

அப்பா கொணர்ந்த தகவல்தான் சொன்னேன்—வேறு எதுவுமில்லை.

'அத்தான்—பயம்போலிருக்கு! —அழுதிருக்கான்!'' என்றாள் பத்மா. ஒரு லேசான புன்னகையுடன்

"என்ன அழுதானா? எப்போது?'' என்று கேட்டேன் நான்.

'அன்றைக்குத் தான் புருஷாள் எல்லாம் ரேடியோ சன்னிதானத்துலே கூடி காந்திஜி தகனம் வரைக்கும் இருந்துவிட்டு வந்தார்களே—அன்றைக்கு. உன் அத்தான் பலராமனும் வந்திருந்தானும் தன் பெரியப்பா பிள்ளையுடன்—பலராமன்தான் எல்லோரையும் விட ஜாஸ்தி அழுதானும்!—அவர் சொன்னார் வந்து!—பயம் பிடிச்சுடுத்துபோலிருக்கு அன்னிக்கே—'' என்று முடித்தாள் பத்மா.

அவள்பேச்சுக்கேட்டு வருத்தமும் கோபமும் உண்டாயின. ஆனால் மறுபேச்சு பேசி அத்தானுக்கு மானம் காக்க, எனக்கு வகை தெரியவில்லை. வீட்டுக்குச் சீக்கிரமாகவே வந்துவிட்டேன்.

நான் வந்தபிறகும் வெகு நேரமாயிற்று அப்பா வருவதற்கு. "பாவம் ரொம்ப வருத்தப்படுகிறான் பலராமு. என்னவோ—சங்கடமாத்தான் இருக்கு அவனைப் பார்த்தால். தலை மறைவாயிருக்க மாட்டானும். 'எனக்கு வேண்டியதுதான் அவமானமும் தண்டனையும்!'' என்கிறான் பிள்ளையாண்டான்!'' என்று தகவல் கொணர்ந்தார் அப்பா அத்தானைப்பற்றி.

"தண்டனையை ஏற்கப் பிடிவாதமாயிருக்கிறான்!" என்பதனால் "அதே முரட்டுத்தனம்தான்!'' என்று தோன்றவில்லை எனக்கு, இப்போது! "பெருங்குணம்! ஒளிவதையும். குற்றத்திலிருந்து தப்பவும் விரும்பவில்லை நம் அத்தான்!'' என்று தோன்றலாயிற்று என் மனதில்!

"இவ்வளவு நல்ல அத்தானுக்கு என்னவாகிவிடுமோ!'' என்று எனக்குத்தோன்றினதுபோலவே, வீட்டில் அனைவருக்கும் கவலை. ஆனால் அப்பா சமாதானம் சொன்னார்.

'யாரோ ஒரு சில பேர்தான் பொறுப்பாளிகளாய் இருக்கலாம் அதற்கு! இவர்களைச் சாராது! எனினும் கைது செய்வார்கள். கொஞ்ச நாளைக்குள் விடுதலை செய்து விடுவார்கள். பலராமு ஐந்தாறு வருஷங்களாய் சேர்ந்திருக்கிறான்போலிருக்கு! அதனால் எப்படியும் பிடிப்பார்கள். ஆனால் அபாயமில்லை! விடுதலை செய்து விடுவார்கள்!'' என்றார்.

"ஆம், அப்படித்தான் இருக்கலாம்!...'' என்று மனந்தேறினோம். அப்பா சொன்ன ஆறுதலான விஷயத்தை பத்மாவுடன் பகிர்ந்து கொள்ள, மறுநாள் போனேன். அவள் என்னைவிட வயதிலும் பெரியவள்-திருமண

மானவளாதனால் அனுபவங்களிலும் பெரியவள்–ஆனால் அவள் என்னுடன் படித்தவள். போன வருஷம் தான் படிப்பை நிறுத்தினவள்–அதனால் எங்களிடையே நெருங்கிய பழக்கம். அன்பு உண்டு. அவளுடன் பகிர்ந்துகொள்ளப் போவேன், எவ்விஷயமும் சொன்னேன் அத்தானைப்பற்றிய ஆறுதலான தகவலையும்.

* * * *

அப்பா அத்திம்பேரைக் கூட்டிக்கொண்டு, அத்தானின் ஹாஸ்டலுக்குப் புறப்பட்டுப் போனார். வரும்பொழுது, நான் சற்றும் எதிர்பாராத விதமாக அத்தானுடன் வந்தார்கள் இருவரும். அத்தானைக் கண்டதில்லையா நான்?...... மாதத்திற்கு ஒருதடவையாவது பார்த்துக்கொண்டுதானிருந்தேன்–முன்பெல்லாம். இப்போதுதான் ஒரு ஆறுமாத காலமாக அவனைப் பார்க்கவில்லை!.......ஆனால்——— இப்போது அத்தானைப்பார்த்த பிறகு—நானே ஒரு புதியவளாக மாறிவிட்டேன். "முரடு" 'முரட்டுத்தனம்' என்ற நினைப்பில் அத்தான் வரும்போதெல்லாம் நான் அக்கம் பக்கத்துக்குப்போய் விடுவதும்——அவனுடன் பேசாமல் 'உர்'ரென்று வீட்டில் நடமாடுவதுமாக இருப்பேன் அவன் இருக்கக்கூடிய அந்தக்கால் மணியும் அரைமணியும் அப்பாவுடனோ அம்மாவுடனோ பேசிக் கழித்துவிடுவான், போய்விடுவான் அவன் இங்கே வீட்டிறகு வருவதிலும் போவதிலுங்கூட நான் கொஞ்சங்கூட அக்கறையோ ஆசையோ கொண்டதில்லை 'ஏனோதானோ' என்று அவன் விஷயத்தில் நடந்துகொண்டதில் முதல்தரமானதுஎன் நடத்தை!

ஆனால் இன்று, "குற்றவாளி" யாக வந்த அத்தானைக்கண்டு, நானும் "குற்றவாளி" போலவே ஒடுங்கினேன், கவன்றேன், நெட்டுயிர்த்தேன்!

"இங்கே இருக்கவேண்டாம்! ஊருக்கு வந்துவிடு! இல்லை, ஊருக்குவர இஷ்டமில்லாவிட்டால், இங்கே தலைமறைவாய். மாமா, மாமியுடன் இரு!—கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கெஞ்சிக் கொண்டேயிருந்தார் அத்திம்பேர் அத்தான் வாய் திறந்து சொன்ன பதிலெல்லாம், "உஹூம்! என்னால் ஒளிய முடியாது! மாட்டேன்!" என்பதுதான்

அத்தான் என்னையும் அடிக்கடி பார்த்தான். அந்தப்பார்வையில் வெட்கமா?...... தாபமா?...... கோபமா?... ....கெஞ்சுதலா?...... புரியவில்லை என் மனசும் எனக்குப் புரியவில்லை! அவன் மனசா விளங்கும்?

அன்று இரவு ஒன்பது மணியாகிவிட்டது. மச்சில் இருந்தான் அத்தான் கீழே எல்லோரும் இருந்தோம்—அத்தான், வீட்டவர்களின் பார்வையினின்று தப்ப முடியுமா;—அவன் ஓடணும் என்று முயன்றாலும் கீழே இறங்கித்தானே வாசலுக்கு ஓடவேண்டும்! அதனால்தான் மச்சில் அத்தானுக்கு சுதந்திரம் கிடைத்தது!

மச்சுமேல் என் புத்தகம் ஒன்று இருந்தது

"புஸ்தகம் எடுத்துக்கணுமே!" என்றேன் நான், தயங்கி. "ஏன் போய் எடுத்துக்கோயேன்," 'அதென்ன அவ்வளவுபயம், அத்தானைப்பார்த்து?" என்றார் அப்பா.

"அதென்னவோ — இந்தப் பொண்ணு அத்தானுன்னா அவ்வளவு நடுங்குறது!—ஒரு நாளாவது முகங்கொடுத்துப் பேசினதேயில்லை!" என்று முணுமுணுத்தாற்போல், அத்திம்பேர் செவியில் எட்டும்படியாகவே—அப்பாவிடம் 'கோள்' சொல்வதுபோலவே—முணுமுணுத்தாள் அம்மா.

"அதான்— இஷ்டப்பட்டதாக—சம்மதப்படுகிறதாக— எழுதல்லே நீங்கள்!...என்னமோ—முடிச்சு இல்லேபோல்தான் இருக்கு! அதுவும் இப்போ இவன் இப்படியாயிட்டான்!" என்றார் அத்திம்பேர்—குரல் இழுபட.

இந்த அமளியில் மச்சு ஏறினேன் நான்.

"பயத்தினால் அல்ல—கூச்சத்தினால் தயங்கினேன் இப்போது!" என்று சொல்லவில்லை நான்!

மச்சில் என் புத்தக அலமாரியண்டைகாட்சிதந்தான் அத்தான்!

"எனக்குப் புஸ்தகம் எடுத்துக்கணும்!" என்றேன்.

"எடுத்துக்கோயேன்!" என்று விலகி நின்றான் அத்தான்.

நான் எடுத்துக்கொள்ளவேண்டிய புத்தகத்தைக் கையில் எடுத்தேன். பளிச்சென்று ஒரு நினைப்பு வந்தது!

"பச்சை கலர் அட்டை!" என்றேன். எப்படி தைரியம் வந்ததோ சொல்ல! இப்போது வியப்பாயிருக்கிறது!

'கொழுப்பு!" என்பதுபோல் பார்த்தான் அத்தான் என்னை.

"காந்திஜி, பாகிஸ்தானுக்கு வேண்டியிருந்த பண உதவியைச் செய்யணும்னு சொன்னதுதான் பிடிக்கலையாமே, சங்கக்காரர்களுக்கு! அப்பா சொன்னார்!" என்றேன் நான்.

மறுபடியும் ஒரு தினுசாகப் பார்த்தான் அத்தான்.

"சரி...ரொம்ப சரி! நானும் தான் கொலைகாரன்! திருப்தி தானே உனக்கு!" என்றான் அடுத்த நிமிஷம் ஆவேசமாக.

நான் ஒரு தினுசாக அத்தானைப் பார்த்தேன் இப்போது! குடுகுடுவென்று வந்துவிட்டேன்.

அத்தையகத்தில் இருந்தபோது சினிமாவுக்குப் புறப்பட்டபோது. பச்சை நிறப்புடவை உடுத்திக்கொண்டு நான் கிளம்பியபோது "இந்தக் கலர்தானா அகப்பட்டது!" என்று அத்தான் சொன்னான் என்று, உடனே, அவனைத் திருப்தி செய்ய, உடைமாற்றிக்கொண்டு, அரக்கு நிறப் புடவையில் காட்சியளித்தேன்! "பேஷ்!" என்றான் அத்தான்!

இன்று அந்த "பச்சை கலர்!" என்று நான் சொன்னதால் எனக்கு ஏற்பட்டது திருப்தியா, வருத்தமா?—வருத்தம்தான்!

கீழிறங்கி வந்த எனக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. அப்புறம் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இரவு முழுதும் நிம்மதியான நித்திரையில்லை!

"பலராமு!" என்ற பல குரல்களுக்கும் பதில் வராததால் மேலே போய்ப் பார்த்தார்கள் அப்பா...அத்திம்பேர்......எல்லோரும்! நானும் போய்ப்பார்த்தேன்! அத்தானைக் காணோம்.

"எப்படியோ மச்சிலிருந்தே இறங்கி—மச்சுப்படிகள் வழியாக மட்டும் நிச்சயமாக இல்லை!—குதித்தோடி விட்டான்!" என்று நிச்சயம் செய்யப்பட்டது!

"நான் கொலைகாரன்தான்!" என்றானே அத்தான்! வருத்தமும் நான் ஏசுவதுபோலச் சொன்னதும் தாங்காமல், எங்கேயாவது தற்கொலை செய்துகொண்டுவிட்டானோ?"

ஒரு தடவை அழுது விட்டேன்.

"அத்தான் வரட்டும், நல்லபடியாய்! நான் உடனே—" என்று விம்மியது என் அந்தரங்கம்.

கைதுமாகி, விடுதலையுமாகி வந்துவிட்டான் அத்தான், ஓரிரண்டு வாரங்களுள்.

"கடைசிக் கடைசி! சொல்லிவிடு!-தை போயிடுத்து! எப்படியும் இந்த வருஷம் உனக்கும் செய்தாகணும்!-அவன் புருஷன், அவனுக்கு அவசரமில்லேன்னு நினைக்கவும் வகையில்லே-அவனுக்கும் கட்டாயம் நடந்தாகணும் இந்த வருஷம்! ஏதோ-உனக்கு என்ன உத்தேசமோ சொல்லிவிடு!" என்ருள் அம்மா.

கடைசிக் கடைசியாகக் கேட்ட அம்மாவுக்கு, முதல் முதலாக, என் அத்தான் மீது எனக்குத் தோன்றிவிட்ட விருப்பைப் புலப்படுத்தினேன்.

* * * * *

இவ்வளவுதான்-எழுதினேன் என் 'காதற்'கதையை— ஆனுல் முடிக்கும் வகை தெரியவில்லே.

அவர் வருவதற்குள், அழகான முடிவுடன் எழுதிவைக்கவேண்டும் என்று அவா-ஆனுல் இயலவில்லே.

எழுதிய தாள்களை ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு, யோசிக்க உட்கார்ந்தேன்!...இதுவரை நான் எழுதினபோது யோசனைகள் ஏது? ....கற்பனையா?....அனுபவங்களைத்தானே வரைந்தேன்!

"இதுதான் என் காதற்கதை!... ஆனுல் முடிவு கிடையாது இந்தக் கதைக்கு!......எங்கள் காதல் வாழ்வு இன்னும் பல வருஷங்கள் நீடிப்பதாயிறதே!" என்று சமத்காரமாக முடிக்கலாமா?" என்று தோன்றியது.

"மகாத்மா நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் இருப்பார்!" என்று இருந்துவந்த நம்பிக்கைபோல் இதுவும் ஏதாவது—'?

"கூடாது! அப்படி எழுதக் கூடாது!" என்று அந்த யோசனையைக் கைவிட்டேன்.

திடீரென்று நினைவு வந்தது. "மகாத்மாவின் மறைவைப்பற்றி எழுதும்போது..." நல்லாண்டாகவே விளங்கிவிட்டது எங்களுக்கு!" என்று எழுதியது நியாயமல்ல, அழகல்ல—என்னும் ஒரு பச்சாத்தாப உணர்ச்சியினுல்தானே, எழுத ஆரம்பித்தோம் இந்த விஷயம்!

அழகல்லாததை எழுதியதற்குப் பரிஹாரம் தேடும் யோசனையில்தானே, புகுந்தேன் இப்படி எழுதுவதற்கு?

அப்படியானுல், முடிவு எப்படி இருக்கவேண்டும்? யோசித்தேன், தெளிவாகத் தெரியவில்லே.

"மகாத்மா நம்மிடையே இல்லே என்பதால், நமக்கு அவர் உரைத்துப்போன உபதேச மொழிகளில், நாம் அதிகம் சிரத்தை கொள்வோம்!" என்று சொல்கிருர்கள். 'அவர்' கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உள்ளவர் என்ற என் அச்சமும், அவர் விஷயத்தில் என்னே அதிகம் பணிவுடன், அமரிக்கையுடன் நடந்துகொள்ளச்செய்கிறது.காந்திஜியின் லட்சியம்நிறைவேறுவதுபோலவே என் வாழ்க்கை லட்சியம்—இன்ப வாழ்வு — நிறைவேறும்!"

இப்படி எழுதலாமா?

முடிவு செய்ய முடியவில்லே. "முரடன் என்றுதான் இன்னும் உன் எண்ணமா? அதனுல்தானு உன் பணிவு?" என்று அவர் கேட்பாரானுல்? படிக்கவேண்டாம் அவர் என்று எப்படி இருப்பது? அதுவும் முடியாது! என் மனம் போன போக்குகளை அவர் அறியட்டும்—'டயரி'யில் எழுதினதற்குப் பரிஹாரம் தேடணுமென்று நான் எழுதுவதை அவரும் பகிர்ந்து ரசிக்கட்டும்—என்று எழுதியதை, அவர் படிக்கவேண்டாமா? அச்சுக்கு அனுப்பவா எழுதினேன் நான்?...

அவர் குரல் கேட்டது. கதையின் முடிவை எழுதவில்லே நான்; வந்துவிட்டார்.

வந்தவரிடம் கொடுத்தேன் எழுதியதை, "முடிவு எப்படி இருக்கணும்! சொல்லுங்கள்!" என்றேன்.

"கொண்டா பேனு!" என்ருர், கொடுத்தேன்.

"மகாத்மா ஊனும் உடலும் கொண்டு நம்மிடையே இருந்தபோது அவர் நமக்கு அறிவுறுத்திய அறிவுரைகள் சிறந்தவை. ஆனுல், அவர் உடல் நீத்து, உயிர் துறந்து, நாட்டின் ஜோதியாக மாறி, நமக்கு அளிக்கப்போகும் அறிவு விளக்கங்களே அவற்றைவிடச் சிறந்து விளங்கும்!" என்று அன்று அவர் உயிர் துறந்தன்று சொன்னுர்கள்.

ஆனுல், இதோ, எங்கள் இருவரையும் பிணைத்திருக்கும் அன்பு—அந்த மகானின் பிரிவுக்குப் பின்னர் எழுந்ததுதான்! எங்கள் உள்ளங்களிலும், வாழ்க்கையிலும் விளக்கு ஏற்றிய மகானின் ஆவிச்சுடர், நாட்டுக்கும் ஜோதியேதான்!"

இவ்வாறு எழுதி முடித்தார் என் கணவர்.

"என் மனதில் நிஜமாகவே அன்று, அந்த வருத்தத்தில் அப்படித்தான் தோன்றிற்று! எப்படித்தெரிந்தது உங்களுக்கு?" என்று கேட்டேன் மாபெரும் வியப்புடன்.

"எனக்கும் அப்படித்தானே தோன்றிற்று அன்று!" என்று விடைபகர்ந்தார் அவர்.

"அடடா! இது தெரியாமல் போச்சே எனக்கு!" என்று நான் இன்னும் வியப்பெய்தினேன்.

"இந்த ஞாயிறு நினேப்பூட்டத்தான் ஊட்டுகிறது" அன்று ஏற்பட்ட வருத்தத்தை! ஆனுல், காந்திமஹான் எங்களிடையே ஏற்றிவிட்ட இன்ப ஒளி, மிஞ்சிவிடுகிறது, இந்த ஞாயிறு எழுப்பும் சோக தீபத்தை!" என்று எழுதினேன் மீண்டும், டயரியில்.

ஜனவரி 30-ம்தேதி,தாளில்தான் எழுதினேன். ஏது மற்ருெரு தாள்?

வரும்போது அவர் ஒரு டயரி புதிதாக வாங்கி வந்திருந்தார்.

"இப்படி எழுதியிருந்தாயே! என்னமோபோல் இருந்தது! பரிஹாரம் செய்ய, இதில் வேறுதினுசாக எழுதணும் என்று வாங்கிவந்தேன்!" என்று கொடுத்திருந்தார் என்னிடம். நான் அதில் எழுதியிருந்ததைப் படித்தார்.

"அதே அர்த்தம்தான் தொனிக்கிறது இந்தக் குறிப்பும்!" 'சோகத்தை மிஞ்சிவிட்டது இன்பம்!' என்றுதான் எழுதிவிட்டாய்!" என்ருர் அவர்.

"உண்மைதான்வேண்டும் காந்திஜிக்கு!

உங்கள் மனம் புண்படக்கூடாது என்று எழுதினுலும், உண்மைதான் தொனிக்கிறது! என்ன செய்ய?" என்றேன் நான் சிரித்துக்கொண்டே.

"நிஜந்தான்!" என்று ஒப்புக்கொண்டுவிட்டார், அன்பு மிகுதியினுல் கோபங் கொள்ளவில்லே. இரண்டாம் டயரி வாங்கிவிட்ட தோஷத்திற்காக, அவரும் நினைவுக்குறிப்புக்கள் எழுதத்துவங்குவதாகச் சொல்லிவிட்டார். அதில் அவரும் உண்மைகள் தானே எழுதமுடியும்?

காந்திஜி நினைவு

[நெற்குப்பை ராம சுப்பிரமணியன்.]

★

1

உத்தமன் காந்தி யெம்மான்
உயிர்நீத்து ஓராண் டாச்சு!
மெத்தவும் அன்னார் வாழ்வை
மேதினி புகழக் கண்டோம்!
சத்தியம், அஹிம்சை, அன்பு
தரணியில் தழைக்கச் செய்ய
இத்தரை தன்னில் எந்தாய்
ஈன்றெடுத் திட்ட மைந்தன்!

2

அரக்கப லத்தால் இந்த
அவனியோர் சுதந்தி ரத்தைப்
பெறலாமென் றேநி னைத்துப்
பெரிதுமே போர்தொ டுப்பார்!
அருள்நிறை அஹிம்சை யாலே
அதனைநாம் அடையச் செய்தார்!
பெறற்கரும் காந்தி யெம்மான்
பெருமையால் பெருமை கொள்வோம்!

3

ஒற்றுமை வளர்ப்போம்! காந்தி
யுகந்தனை ஓங்கச் செய்வோம்!
பற்றிய சுதந்தி ரத்தைப்
பகலவன் போல்வி ளங்க
முற்றிய அறிவி னாலே
முழுதுமே வளரச் செய்வோம்!
சற்றுமே சோம்ப லில்லாத்
தன்மையால் தழைத்து வாழ்வோம்!



நடுநிசி. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தேன். ஊரில் அமைதி நிலவிற்று. உள்ளத்தில் அமைதியில்லை. தூக்கம் பிடிவாதமாக வர மறுத்தது. என் அறைக்கதவு அசைவது போன்ற சப்தம் கேட்டது. துள்ளி எழுந்தேன் படுக்கையிலிருந்து. ஒரே அமைதி! வீண் பிரமைதான்!

'கிரீச்' எனக் கதவு திறக்கப்படும் சப்தம் நன்றாகக் கேட்டது காதுகளில். இந்த தடவை ஏமாற்றமடைய நான் தயாராக இல்லை. கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

உடல்மீது சில்லென்ற ஸ்பரிசம்! என் உடலெல்லாம் வியர்த்துவிட்டது. வருவித்துக் கொண்ட தைரியத்துடன் எழுந்து உட்கார்ந்தேன் படுக்கையில்! ஆம்! அந்த இருளிலும் ஜோதிமயமான ஒரு உருவம் நின்றுகொண்டுதானிருந்தது!

ஆண்டுகள் பலவற்றைக் கடந்து அனுபவமுத்திரை குத்தப்பட்டிருந்த முகம். போராட்ட வாழ்வைப் பிரதிபலிக்கும் சுருக்கங்கள். தன் முயற்சிகளின் வெற்றியைத் தானே கண்டுவிட்டதால் குடிகொண்டிருந்த புன்னகை. தியாகப்பாதையில் நடந்துசெல்ல ஊன்றுகோலாயிருக்கும் கைத்தடி. சந்தேகமில்லை. என் எதிரே நின்றவர் மகாத்மா காந்திதான்!

* * * * *

அவர் பாதங்களில் விழுந்து வணங்கினேன். பேச எண்ணினேன். பேச்சு வரவில்லை. நாத்தழுதழுத்தது. கண்களிலிருந்து நீர் வழிந்துகொண்டேயிருந்தது. அடிகள் அருகில் நெருங்கிவந்து தன்மேல் துணியால் கண்ணீரைத்துடைத்துக் "குழந்தாய்! ஏன் அழுகிறாய்? என்ன நேர்ந்துவிட்டது உனக்கு?" என்றார்.

நான் ஆச்சரியத்தோடும் பயத்தோடும் கேட்க விரும்பிய கேள்வியைக் கேட்டேன்.

"நீங்கள் இந்த மண்ணுலகினின்றும் மறைந்து விடவில்லையா? ஒரு கொடியோன் உம் பொன்னுடலை பூமியில் கிடத்திவிடவில்லையா?"

அடிகள் புன்னகை செய்தார்.

"நான் உன் எதிரில் நிற்கிறேன். நீ என்னடா வென்றால் 'இறந்துபோய் விட்டாய்' என்கிறாய்.........

'அப்படியென்றால் நீங்கள் கொல்லப்படவில்லையென்று சொல்கிறீர்கள்.........

அடிகள் சிரித்தார்.

'அகில இந்திய ரேடியோவில் கேட்டேனே! குழந்தை முதல் கிழவர் வரை கதறி அழுதார்களே! உங்கள் 'ஞானப்புதல்வர்' நேருவேகூட.........

"இதோ நிற்கிறேன் உன் முன்பாக. இது பொய்யா......"

"அடிகளே, நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்? ராஜகட்டத்தினின்றும் எழுந்து வந்து விட்டீர்களா? அப்படி வந்தாலும் டில்லியில் இருக்க வேண்டிய தாங்கள் இந்த ஏழையின் வீட்டுக்கு ஏன் வந்தீர்கள்?

"நான் இறக்கவேயில்லை யென்கிறேன், நீ என்னடா வென்றால் இல்லாத ஒன்றை நம்பும்படியாக என்னைக் கட்டாயப்படுத்துகிறாய். உன்னோடு மட்டுமல்ல. இந்த நாட்டில் என்மீது உண்மை அன்புள்ள ஒவ்வொருவர் வீட்டுக்கும் வந்துகொண்டுதானிருக்

கிறேன்; பேசிக்கொண்டுமிருக்கிறேன்.

* * * * * *

சிறிது நேர மௌனம்.

விம்மல்களுக்கிடையே அடிகளைப் பார்த்துக் கேட்டேன். "மதம்......மதம்தானே தங்களை எங்களிடமிருந்து பிரித்தது. அதற்குச் சமாதி கட்டி விட்டால்......

"படபடக்காதே குழந்தாய். மதமும் மனிதனும் பின்னிப் பிணைந்தவர்கள். ஒன்றை விட்டு மற்றொன்று தனியே இயங்க முடியாதவை மதமும் மனித இயக்கமும். 'நான் ஒரு ஸநாதன ஹிந்து' என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்......

"ஆமாம்! மதம், மதம் என்று நாட்டின் நல்ல தலைவர்களையெல்லாம் நாங்கள் பலி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதானா?

"ஆத்திரப்படாதே அப்பா! மதம் மனிதன் பூரணத்துவம் பெறுவதற்கான ஒரு முயற்சி. இலட்சியத்தை நோக்கி மனிதன் நடக்கும் பல பாதைகள்தான் பலவாறான மதங்களும். இடையிலே சில அறிவிலிகள் மதத்தின் பெயரால் 'மதவெறி'யைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்த்தார்கள். அதன் விளைவுதான் பார்த்தாயே, நேற்று வரை அண்ணன், தம்பிபோல் இருந்தவர்கள் இன்று ஒருவர் கழுத்தில் மற்றவர் கைவைக்கும் அளவுக்குக் கொடியவர்களானார்கள்.

"ஆமாம்! அவர்களை சுய நினைவுக்குக் கொண்டு வரத்தான் தாங்கள் நவகாளிக் காட்டிலே பாதமலர்கள் நோக நடந்தீர்கள். வழிகாட்டியாயிருந்து மனிதர்களை மனிதர்களாக வாழச் செய்தீர்கள்...ஆனால்...

"அழாதே தம்பி, அது ஆண்மைக்கு இழுக்கு. உயிருடன் வழி காட்ட முடியாத நிலையில்தான் என் உயிரைப் பலிகொடுத்து இலட்சியத்தைக் காக்க முன் வந்தேன். என் உயிருடன் மத வெறி திருப்தியடையட்டும். என் இருதயத்தினின்றும் வழிந்தோடிய உதிரம் இந்நாட்டைப் பரிசுத்தமாக்கட்டும். என் நினைவு இந்திய சமூகத்தினருக்கு கடந்த கால நினைவை எழுப்புமல்லவா? மனிதன் விலங்கான மடமையை நினைவுறுத்துமல்லவா? அது போதும்" அடிகள் நிறுத்தினார்.



சிறிது நேரத்திற்குப் பிறகு மறுபடியும் என்னை நோக்கினார்.

"இளைஞனே! எனக்கு வேலை இருக்கிறது; போகுமுன் உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன், கொடுப்பாயா" என்றார்.

'வரமா' கட்டளையென்று சொல்லுங்கள் பாபுஜி.

"மத வெறிக்குப் பலியான என் பெயரால் இந்துவும் முஸ்லீமும் சீக்கியரும் கிருஸ்துவரும், பார்ஸியரும், மராட்டியரும் ஒன்றுபட்டு வகுப்புவாத அரக்கனுக்கு எதிராக ஒரு பலமான எதிர்ப்புச் சக்தியைத்திரட்ட வேண்டும். இந்த எதிர்ப்பு சக்தி வகுப்புவாத அரக்கனைத் துரத்தித் துரத்தி அடித்து 'சகோதரபாவம்' இந்த நாட்டில் நிலவும் வரை என் ஆன்மா சாந்தியடையாது. அதுவரை உன்போன்ற வாலிபர்கள் உறங்க முடியாது. நிம்மதியாக நான் வந்து தொந்தரவு கொடுத்துக்கொண்டுதானிருப்பேன்."

நான் இடைமறித்தேன்.

"வகுப்புவாதக் கட்சிகள்கூட உங்கள் பெயரை உபயோகிக்கும் அளவுக்கு இன்று மனம் மாறிவிட்டது. நேற்று தங்களைத் திட்டியவர்கள்கூட இன்று அடிகளை 'ஐயோ அவர் அமரராயிற்றே' என்கிறார்கள்" என்றேன்.

"வாய் வீரமும் திண்ணை அரசியலும் ஒழிந்து செயலாற்ற இளைஞர் கூட்டம் என்று முன் வருகிறதோ அன்றுதான் என் ஆன்மா சாந்தியடையும்" என்று தொடர்ந்தார் பாபுஜி.

"அடிகளே, இந்த நாட்டிற்கு விடுதலை தந்த உங்கள் ஆணையாய்ச் சொல்கிறேன். மத வெறியை ஒழிக்க என்னால் இயன்ற எதையும் செய்வேன் இது சத்தியம்."

அடிகள் முகத்தில் எல்லையற்ற இன்பம் குடிகொண்டது.

* * * *

இருள்...இருள்...என் கண்கள் குருடாகி விட்டனவா? என் அறையை ஜோதிமயமாக்கிய அந்த மகா புருஷரெங்கே! எழுந்து கண்களைக் கசக்கினேன்! 'பெட்ரூம்' விளக்கு எரிந்துகொண்டிருந்தது. படுக்கைக்கு நேரேமாட்டியிருந்த அடிகளின் படம் மாலையும் கழுத்துமாய் காட்சி யளித்தது.

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் சென்னையில் இவ்வாரம்போட்டி. இதற்கு முன்னதாக தென் பிராந்தியக் கோஷ்டியோடு மேற்கிந்தியர் ஆடி ஜெயித்தனர். ஆட்டம் ஆரம்பமாகு முன் யார் முதலில் 'பாட்' செய்வது என்பதை ரூபாயைச் சுண்டி, தலையா? பூவா? பார்த்தனர். கோபாலன் ரூபாயைச் சுண்டினர். விழுந்தது பூவா? தலையா? என்று குனிந்து பார்த்தார் மேற்கிந்திய கோஷ்டி காப்டன் கோடார்டு.

அன்புள்ள கீதாவுக்கு !

4

நான் நினைப்பது மாத்திரம் எப்பொழுதும் வீண் போவதில்லை. அத்துடன் உள்ளே ஒன்று வைத்துக் கொண்டு வெளியே ஒன்று பேசும் வழக்கம் எங்கள் வம்சத்திலேயே கிடையாது. நீகூட எத்தனையோ தரம் சொல்லியிருக்கிறாய்; 'முழுப் பூசனிக்காயை அப்படியே சோற்றில் மறைத்துவிட்டு ஒன்றுமே தெரியாது போல கள்ள நடிப்பு நடிக்கும் இந்தக்காலத்தில் இப்படி ஒளிவு மறைவு இல்லாமல் மனதில் உள்ளதை அப்படியே சொல்லிவிடும் நீ எப்படியடியம்மா இந்த மாயாவிக் கும்பல்களிடம் மிகுந்து வரப் போகிறாய்? மோச எண்ணம் இல்லாவிட்டாலும் இந்த மோசக்காரக் கும்பல்களிடம் பழகுவதற்குக் கொஞ்சம் 'சாகஸம்' இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் ஒரே நிமிஷம் 'குதிரை ஏறி விடுவார்கள்' என்று, எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது.

அவ்வளவென்ன. இதோ என் ஓரகத்தி இருக்கிறாள். நெஞ்சிலே விஷம், உதட்டிலே அமிர்தம். என்று சொல்வார்களே, அது அவளுக்குத்தான் பொருந்தும். இந்த அத்தைக்காரி அரை அங்குல கனத்துக்கு ஸ்னோவையும் பவுடரையும் பூசிக்கொண்டு நவநாகரிக கோலத்துடன் வெளியே கிளம்புகிறாளா? அப்பொழுது ஓரகத்தி, உண்மையாகச் சொல்லுகிறேன், நீங்கள் கோபித்துக்கொண்டாலும் கொள்ளுங்கள் அத்தை. இப்படிப்பட்ட ஒரு அழகை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே, அந்த மனுஷனுடைய துரதிருஷ்டத்தைச் சொல்லுங்கள். எவ்வளவு போதாத காலமிருந்தால் இந்த அழகைப் பார்த்த கண்ணால், இதைத் தள்ளிவிட்டு வேறொரு ஜந்துவைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தோன்றியிருக்கும்! ஒருவேளை அவருக்குக் கண்ணில் ஏதாவது பழுது உண்டோ?' என்று சொல்லிவிட்டு இடி இடி என்று சிரிப்பாள். இந்தமாதிரி ஒரு நாள் இன்னொரு சமயம் சொலவாள், 'ஏன் அத்தை! மார்க்கண்டேயன் மாதிரி நீங்கள் வரன் கிரன் ஏதாவது வாங்கிக்கொண்டு வந்துவிட்டீர்களா? இல்லாவிட்டால் முடியுமா பின்னே? உங்களை இப்பொழுது புதிதாய்ப் பார்ப்பவர்கள், உண்மையாகச் சொல்லுகிறேன். பதினெட்டு, தவறினால் இருபது வயது, அதற்கு மேல் ஒரு நாள் அதிகம் மதிப்பார்களா? கேட்டு வேண்டுமானால் பாருங்கள். நான் திருஷ்டி போட்டுவிடுவதாக நினைத்துவிடாதீர்கள். நான் பந்தயம் வேண்டுமானாலும் வைக்கிறேன். உங்களுக்குப் பத்து வயது குறைவாக உள்ளவர்கள் இதேமாதிரி கண்களில் மை இட்டுக்கொள்ளட்டும். நெற்றியில் சிகப்புச் சாந்தினால் திலகம் வைத்துக்கொள்ளட்டும். உள்ளே லேஸ் பாடியை அப்படியே எடுத்துக் காட்டும்படியாக அழகிய மஸ்லின் ஜாக்கெட் போட்டுக்கொள்ளட்டும். எத்தனை சவுரி வேண்டுமானாலும் வைத்துக்கொண்டு தலையைப் பின்னிக்கொள்ளட்டும். கழுத்தே ஒடிந்து போகும்படியாக பூவைத்துக்கொள்ளட்டும். எந்த பிரேமில் வேண்டுமானாலும் மூக்குக்கண்ணாடி போட்டுக்கொள்ளட்டும். இவ்வளவும் இளமையை ஒரு நாளும் காட்டாது. அவ்வளவென்ன? இதோ நான் உங்களுக்குப் பதினாறு வயசு சின்னவள். என்னுடைய கிரமமான வயசுக்குமேல் ஐந்தாறு வயசு அதிகம் மதிக்கிறார்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள்! நீங்கள் ஏதோ வரன்தான் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். இல்லையென்றால் உலகத்திலேயே யாருக்கும் தெரியாத இளமையைப்பெறும் ரகசியம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! என்று. அத்தை அலங்காரப் பிரியை என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டாள். அதற்கு அனுகுணமாக சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவளுக்கு இச்சகமாக ஒரு படலம் பாடிவிட்டு அவளுடைய முழு விசுவாசத்தையும் சம்பாதித்துக்கொண்டுவிடுவாள்.

மாமியாரிடமும் இப்படித்தான் பக்கத்தகத்து மாமி சிகப்பாக இருக்கிறாள். நீலக் கலர் புடவை வாங்கி உடுத்துகிறாள். எல்லோரும், நன்றாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதைப்பார்த்துவிட்டு 'கருப்புத் தோலைப் போட்டுக் கொண்டிருக்கும், இவளும் (மாமியார்)

"..................இப்படிப்பட்ட அழகை அனுபவிக்க..............."

அதே நீலக்கலர் புடவையை வாங்கி உடுத்தினால், கண்களிரண்டையும் கெட்டியாக மூடிக் கொள்ளவேண்டும்; அல்லது அப்பால் வீசி எறிய வேண்டும். கோரம் பார்க்கச் சகிக்காது. இந்த சந்தாப்பத்தில் ஓரகத்தி சொல்வாள். இதை வாங்குகிறீர்களே என்றுதான் முதலில் நினைத்தேன். கருப்பே ஒரு அழகு, காந்தலே ஒரு ருசி என்று சொல்வார்கள். அதற்கு நீலக்கலர் புடவையும் ஒரு அழகுபோலிருக்கிறது. இதுவே எல்லா கருப்பு உடம்புக்கும் நன்றாக இருக்கிறதா? சிலருக்குதான் நன்றாக இருக்கும் போலிருக்கிறது! என்று ஒரு பெரும் புளுகு புளுகுவாள். 'எங்கள் அம்மாவே அடிக்கடி சொல்வது வழக்கமாயிற்றே. அதோ கோடியாத்துக் கோமளம் சிகப்புதான். வெறும் சிகப்புத் தோலைப் போட்டுக் கொண்டிருந்தால் மட்டும் ஆய்விட்டதா? முகத்தில் 'அவிஷு பவிஷு' ஏதாவது துளி இருந்தால்தானே! நம்ம பங்கஜம் (மாமியார்) கருப்புதான். இருந்தாலும் இவளுடைய கண் அழகு ஒன்றுக்கு ஈடாகுமா அதெல்லாம்? நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன். இவளுக்குத்தான் எல்லாருக்கும் முதலில் கலியாணம் ஆகப் போகிறது, என்று சொல்லுவது வழக்கம்,' என்று ஓரகத்தி சொல்வதை மெய் என்று நம்பி பதில் சொல்லுவாள் மாமியார். முகஸ்துதிக்கு மயங்காதவர்கள் யாரடியம்மா இருக்கிறார்கள்! இதேமாதிரிதான் சிறிய மைத்துனியிடமும் அதற்கனுசரணையாக ஏதாவது சொல்லி நல்ல பேர் வாங்கி விடுவாள்.

இதெல்லாம் எதற்காகச் சொன்னேனென்றால், வீட்டில் எல்லோரிடமும் ஓரகத்திக்கு நல்ல பெயர். எனக்குக் கெட்ட பெயர். ஏன்?' கண்ணுக்கு மையையும், 'பப்' ஜாக்கெட்டையும், ஜிமிக்கியையும் இருபத்தி ஐந்து அல்லது முப்பது வயது ஆகிவிட்டால் பெண்கள் மறந்துவிட வேண்டுமென்று தயை தாட்சண்யமில்லாமல் சொல்கிறேனேலியோ, இது அத்தைக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணி விடும். அதனால் என்னைக் கண்டாலே ஆகிறதில்லை அவளுக்கு. இதேமாதிரிதான், மாமியார் வெளியில் கிளம்பும்போது தலை மயிருக்கு (பாதி நரைத்து விட்டது) கருப்புச் சாயம் அடித்துக் கொண்டு கிளம்புவாள், 'இதென்னத்துக்கு அம்மா இந்தக் கூத்தெல்லாம்? அவரவர்கள் அந்தந்த வயதுக்குள்ள லக்ஷணத்துடன் இயற்கைக்கு விரோதமில்லாமல் இருந்தால் அதன் அழகே வேறுதான். மயிர் நரைத்து விட்டால் என்ன? நரைத்த மயிர்தான் கிழவர்களுக்கு ஒருவித அழகையும் கம்பீரத்தையும் கொடுக்கிறது. அதை மாற்றினால் கூத்தில் வேஷம் கட்டிக் கொண்டு வருகிறமாதிரிதான்.' என்று சொல்லிவிடுவேன், அவ்வளவுதான். 'ரமா சுத்த அதிகப்பிரசங்கி, பொறாமைக்காரி' என்ற பட்டங்கள் உடனே சரசரமாக வந்து கொண்டிருக்கும். என்னதான் இருந்தாலும் பெரிய இடத்து விஷயமே வேறுதான் என்று ஓரகத்திக்கு ஒரு பாராட்டும் கூடவே கிடைக்கும். ஹி! ஹி! என்று பல்லை இளித்துக் கொண்டு மனுஷ்யாளுக்குத் தகுந்தமாதிரி கபட நாடகம் போடுகிறாளல்லவா? இந்த வாழ்க்கையே குட்டிச் சுவராகப் போய் விடுவதாக இருந்தாலும் சரி, மனச்சாட்சிக்கு விரோதமாக என்னால் நடந்து கொள்ளவே முடியாதம்மா!

வஸந்தாவின் (சிறிய மைத்துனி) போக்கு பொதுவாக வீட்டில் எல்லோருக்குமே பிடிக்கவில்லை. ஆனால் அதைக் கண்டிக்க வேண்டிய காலத்தில் கண்டிக்காமல் செல்லம் கொடுத்து அசிரத்தையாய் இருந்துவிட்டார்கள். இப்பொழுது வாயைத் திறக்க வகையில்லாமல் விழிக்கிறார்கள்.

ஒன்றுமில்லை, சின்ன விஷயம். இந்த வஸந்தா இருக்கிறதே. அது இந்தியாவிலே, ஒரு ஹிந்து குடும்பத்திலே, அதுவும் ஒரு பிராம்மண குடும்பத்திலே பிறந்ததாகவே நினைக்கவில்லை, இங்கிலாந்திலே பிரபுக்கள் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து முன்பின் தெரியாத இந்த இடத்துக்கு வந்திருப்பதாக நினைப்புபோலிருக்கிறது அதற்கு. நடை, உடை, பாவனையெல்லாம் மேல் நாட்டினரைப் போலவேதான். நம்ம பக்கத்தகத்து 'சமத்து' ஒன்று இருக்குமே, அரை குறை இங்கிலீஷ் படித்துவிட்டு, நம்பள்கி தமிளே சரியா பேசவரமாட்டேன்றான். ஓ, டாம், பூல், இடியட்' என்று பிதற்றிக்கொண்டிருக்குமே, அந்த மாதிரி கொச்சை கொச்சையாகத் தமிழ் பேசிக்கொண்டு, ஆசாரமே இன்னதென்று தெரியாமல் 'கோவில் ரிஷபம்' மாதிரி 'கேட்பார் புடைப்பார்' இல்லாமல் கண்ட இடத்துக்கும் போய்க்கொண்டு, கண்டவர்களுடன் வித்தியாசமே இல்லாமல்பழகிக்கொண்டிருக்கிறது. யாராவது இதைப்பற்றி ஏதாவது சொன்னால், 'அதெல்லாம் கால் கட்டை விரலையே பார்த்துக்கொண்டு, குனிந்த தலையே நிமிராமல், 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா' என்று 'பூதங்கித்தனம்' செய்கிறார்களே அவர்களிடத்தில் போய்ச் சொல்லுங்கள். இதெல்லாம் உள்ளே ஒன்று, வெளியே ஒன்று என்ற கபடமில்லாத, நிஷ்களங்கமான பிரகிருதிகளாக்கும்' என்று உலகத்திலேயே யாருக்குமே ஒன்றுமே தெரியாதது போலப் பதில் சொல்லிவிடும்.

அன்று பக்கத்தகத்து மாமியுடன் ஏதோ வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தேன். வஸந்தாவைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தது. நமக்கென்ன எப்படியாவது தொலைந்து போகட்டுமென்று நான் சொல்லாமலிருந்திருக்கலாம். மனது கேட்கவில்லை. 'என்னதான் காலேஜில் படித்தால் என்ன? கொஞ்சமாவது அடக்க ஒடுக்கம் வேண்டாமோ? அதுகூடத் தொலைந்து போகிறது. பழகுவதில் ஆண், பெண் என்ற வித்தியாஸம் கூடவா இல்லாமல் இருக்க வேண்டும்? பக்கத்துத் தெரு கோபாலனுக்கு என்ன வயசாகிறது? இவளுக்கு என்ன வயசாகிறது? இதேமாதிரி இருந்தால் நாலு பேர் என்ன சொல்ல மாட்டார்கள்? எத்தனை பசங்கள் படிக்கவில்லை? எவ்வளவு அடக்க ஒடுக்கமாக இருக்கிறதுகள்? காலேஜில் படித்துவிட்டாலே பெண்கள்குணமேபோய் விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறதா என்ன?' என்று சொன்னதென்னமோ வாஸ்தவந்தான். சொன்னதிலும் அப்படிப் பிரமாதமான தப்பு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பக்கத்து மாமி இதற்குக் காது, மூக்கு எல்லாம் வைத்து அத்தையுடனும் மாமியாருடனும் சொல்லிவிட்டாள் போலிருக்கிறது. அடியம்மா, அதற்கு இந்த அத்தையும், மாமியாரும் ஒரு 'ஆட்டம்' ஆடினார்கள் பார். என்பாடு நடுநடுங்கிவிட்டது. எது எக்கேடு கெட்டால் நமக்கென்ன? ஏண்டியம்மா சொன்னோம்? என்றுதான் ஆகிவிட்டது.

'கலியாண தடபுடலில் தாலி கட்ட மறந்துவிட்டானும்' என்கிறமாதிரி தெருவில் கார் வந்த விஷயமாய்ச் சொல்லவேண்டியதை விட்டுவிட்டு எதையோ சொல்லிக்கொண்டு வந்துவிட்டேன். நேரமாகிவிட்டது. இந்தக் கோபாலன் யார்? காரில் யார் வந்தார்கள் என்பதைப் பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
ரமா

"......தலைமயிருக்கு கருப்புச்சாயம் அடித்துக்கொண்டு......"



ஆழ்வார்-நாயன்மார் காலத்திலேயே பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் வழக்கம் வருணாசிரம தருமத்தின் பகுதியாகக் கருதப்பட்டது. ஆனால் தொண்டர்கள் ஜாதிக்கும் மேலாகச் சமய உணர்ச்சியை மதித்து, அன்புப் பெருந் தீயில் வேற்றுமைகளைப் பொசுக்கி விட்டனர். இதற்கு ஆழ்வார்-நாயன்மார்களின் வரலாறுகளிலும், வாக்குகளிலும் பல சான்றுகள் காணலாம். தமிழ்நாட்டுப் பெருந் தொண்டர்களெல்லாம் ஒரே ஈசுவர குடும்பம், ஒரே கலைக் குடியரசு, தமிழ் பெரு மக்களின் ஏன், உலகப் பொது மக்களின்-அழியாத பொது உடைமை.

சரித்திர வித்து

சேக்கிழார் காலத்திலோ வருணாசிரம தருமமும் சாதி நெறியும் ஒன்றே என்ற கருத்து உறுதிப்பட்டிருந்தது.

சாதிகள் நெறியில் தப்பா;
தனயரும் மனையில் தப்பா!

என்று நாட்டுச் சிறப்பில் சேக்கிழார் கூறுவதால், சிவநெறி ஒன்றே சாதி நெறிகளுக்கும் மேலானது என்று இவர் கருதியதாக ஊகிக்க வேண்டும். ஆனால் திருநாளைப் போவார் என்ற நந்தனாரின் காலத்திலும் இப்படியே சாதி நெறி ஆக்கம் பெற்றிருந்ததென்று ஊகிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

37

நந்தனார் சரித்திர ஆராய்ச்சி

★

'தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார்,

செம்மையே திருநாளைப்
போவார்க்கும் அடியேன்

என்று தான் நந்தனார் வரலாற்றைச் சுருக்கமாய்க் குறிப்பிடுகிறார் தம் திருத் தொண்டத் தொகையிலே. இவ்வாறு கூறுவதால்,

நன்றும்எழும் காதல்மிக
'நாளைப்போ வேன்' என்பார்

என்றும்,

நாளைப்போ வேன் என்று
நாள்கள்செலத் தரியாது
....

என்றும், சேக்கிழார் பெருமான் தம்'திருநாளைப்போவார் புராணத்தில் கூறியிருக்கிறாரே, அந்தப் பகுதியைத்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நந்தனார் சரித்திர ஸாரமாக வற்புறுத்துகிறாரென்று ஊகஞ்செய்வது தவறாகாது.

பெயருக்குள்ளே ஒரு புதையல்

சிதம்பர பக்தி உள்ளத்திலே பிறந்ததும் வெகு விரைவில்—பீமிஷம் ஒரு வண்ணமும் மேனியுமாக -வளர்ந்தோங்குகிறது. இரவிலும் கண் துயிலவில்லை. 'இப்போது இருட்டு; இரவு விடியும்; நாளைப் போவேன் சிதம்பரத்திற்கு' என்று கருதுகிறார் நந்தனார். விடிந்த பின்போ, கலங்குகிறார் 'எப்படிப் போவேன்! எப்படிக் கோவிலுக்குள் போய்த் தரிசிக்கமுடியும்?' என்று இந்த எண்ணங்கள், மூடு பனி சூரியனை மறைப்பதுபோல் மனத்துணிவை மறைத்துவிடுகின்றன. ஆனால் பக்தி மேலும் மேலும் பொங்குகிறது. பொங்கி வரும் கடலிலே கதிர் வீசியெழும் இளஞ் சூரியன்போல் நம்பிக்கை உதயமாகிறது, மீண்டும் மீண்டும், சோகம் பறந்துவிட ஆலயப் பிரவேசம் தனக்குக் கிடையாது என்பதையும் மறந்துவிடுகிறது உள்ளம். பக்தி — வெறியில் 'நாளைப்போவேன்' என்று துள்ளுகிறார் திருநாளைப்போவார்.

என்ன அற்புதமான—பொருள் புதைந்த-பெயர்! எவ்வளவு பக்தியை, நம்பிக்கையை, உயர்தர ஆசையை, உயர்தர நகைச் சுவையைச் சுட்டிக் காட்டுகிறது இப் பெயர்!

வித்துக்குள் விருட்சம்
அடங்கிய வாறுபோல்
சத்துக்குள் அண்ட
சராசரம்—மைந்தா!

என்று நந்தனார் ஒரு புலைப்பாடிச் சிறுவனை நோக்கிப் போதனை செய்ததாகப் பின்னோர் கதை வளர்த்

திருக்கிருர்கள். அப்படியே நந்தனுர் சரித்திரப் பிரதேசம் முழுமையும் 'திருநாளைப்போவார்' என்ற திருப்பெயரிலே அடங்கிக் கிடக்கிறது எனலாம்.

இத்தகைய பக்தி, உள்ளத்திலே ஊறி ஊறி உதிரத்திலே கலந்து உயிராசையாகப் பரிணமிக்கிறது. இந்த உயிராசைத் தீயில் எந்தப் புலேமைதான்—எந்தப் புலமைதான்—மாறிப் பிறந்து சிவஜோதி காணுமல், பிரிந்து நிற்கமுடியும்?

முளேயோடு கூடிய வித்து

சுந்தரமூர்த்தி சுவாமிக்குப்பின், அவருக்கும் சேக்கிழாருக்குமிடையே, நம்பியாண்டார் நம்பி ஒரு முழுப்பாட்டில் நந்தனுரின் சரித்திர ஸாரத்தைக் கூறியுள்ளார்:

நாவார் புகழ்த்தில்லே அம்பலத்
தான்அருள் பெற்று, நாளேப்
போவான் அவனும் புறத்திருத்
தொண்டன், தன் புன்புலே
போய்,
மூவா யிரவர்கை கூப்ப
முனி ஆயவன்பதிதான்,
மாவார் பொழில்திகழ் ஆதனூர்
என்பர்இம் மண்டலத்தே.

[நாவார்-நாக்கு நிறைந்த. அம்பலத்தான்-சபாபதியாகிய நடராஜா. புறத்திருத்தொண்டன்-கோவிலுக்கு வெளியே இருந்து தரிசனம் செய்யக்கூடிய தொண்டன்; ஆலயப் பிரவேசத்திற்கு உரிமையில்லாதவன். புன்புலே-புன்மையான புலேத்தன்மை. மூவாயிரவர்-தில்லேவாழ் அந்தணர்களான மூவாயிரம் பேர்களும். ஆயவன்-ஆகியவன். பதி-ஊர். மாவார் பொழில் திகழ்-மாஞ்சோலேகள் விளங்கும்.]

நாளேப்போவார் நடராஜாவின் திருவருள் பெற்ருர். அந்த அருளால் அவர் புலேத்தன்மை போய் விட்டது. அதனுல் முனிவரானுர். எப்பேர்ப்பட்ட முனிவர்! தில்லேவாழ் மூவாயிரவரும் கை கூப்பும் முனிவரானுர். பிறப்பால் 'தாழ்ந்தவரெ'ன்று கருதப்பெற்ற ஒருவர் பிறப்பால் சிறப்புற்றது ஆதனூர். நம்பியாண்டார் நம்பியின் நந்தனுர் சரித்திரம் இவ்வளவுதான். இந்த நம்பியைத் 'தமிழ்ச்சைவ உலகின் வேதவியாசர்' என்று போற்றுகிருர்கள்.

அம்பலக்கூத்தன் அருள் ஒன்றே புலேயனுகப் பிறந்த நந்தனுரை மறையவரும் வணங்கும் முனிவராக்கி விடுகிறது என்கிருர் நம்பியாண்டார் நம்பி. சுந்தரமூர்த்தி சுவாமியின் நந்தனுர்—சரித்திர வித்திலும் இவ்வளவுதான் அடங்கி யிருக்கிறதென்று ஊகிக்கலாம். சுந்தரமூர்த்தி சுவாமியின் 'திருத்தொண்டத் தொகை'யில் வித்தைக் கண்ட நாம், நம்பியாண்டார் நம்பியின் 'திருத்தொண்டர் திருவந்தாதி'யில் முளேயோடு கூடிய சரித்திர வித்தைக் காண்கிருேம்.

நம்பிக்கையின் அற்புதத்தையும் அருளின் அற்புதத்தையும் ஒருங்கே காட்டும் இந்தச் சரித்திர விதையிலிருந்து நந்தனுர் சரித்திரம் முளேத்து வளர்ந்து தளிரோடி இலேவீசக் காண்கிருேம், சேக்கிழாரின் பெருமானின் 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெரியபுராணத்திலே.

நெருப்புக் குளித்தல்—உட்பொருள்

'தாழ்குல'த்திலே பிறந்து உயர்ந்த லட்சியத்தை நோக்கி விசேஷ விசுவாசத்தோடு நடந்தவர் நந்தனுர். இவ்வாறு செல்வோருக்குக் கொஞ்சமோ துன்ப வெள்ளம்? ஆனுல் 'எல்லாம் அவன் ஆடும் கூத்து, அவன் காட்டும் நாடகம்' என்ற நம்பிக்கையுடன் இடையூற்றுக்கு இடையூருக எழுந்து போராடிச் செல்வோருக்குத் தோல்வியும் உண்டா?

எங்கும் வெற்றி, என்றும் வெற்றி, எல்லாம் வெற்றி வெற்றிதானே?

துன்பம் என்பது நெருப்பு—சந்தேகம் இல்லே, தொண்டனுக்கும் தான். ஆனுல் இந்த நெருப்பிலே தொண்டன் துணிந்து குதிக்கிருன், குளிக்கிருன். தன் வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள மாசுகளேச் சுட்டெரித்துத் தூவென்று ஊதிவிட்டு ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கவிக்கிரகமாய் வருகிருன் துன்பநெருப்பிலே குளித்துவரும் தூய தொண்டன்! சிவபக்தனுய் இருக்கலாம், விஷ்ணுபக்தனுயிருக்கலாம், கிறிஸ்துபக்தனுயிருக்கலாம்; தேசபக்தனுகவும் இருக்கலாமே!

இத்துன்ப நெருப்பிலேதான் நந்தனுரும் பல்வேறு பக்தமணிகளேப்போல் முங்கி முழுகினுர்; முழுகி எழுந்து மாசிலாமணியாகக்

காட்சி தருகிறார். சாதிக்கட்டுப்பாடுகள் முறுகி முதிர்ந்த பிற்காலத்திலே துன்பநெருப்பு எதார்த்த நெருப்பாகவும் மாறி விடுகிறது, நந்தனார் சரித்திரத்திலே, சூட்சும அருள்-நெருப்பு, விசுவாச நெருப்பு, ஸ்தூல நெருப்பாகவும் ஓங்கி எரிகிறது. புலையரை முனிவராக்க இறையருளால் சோதனையாக வரும் துன்பம் போதாதென்று, பிற்காலத்தார் ‘குழி’ தோண்டி நெருப்பு மூட்டுகிறார். இந்த நெருப்பிலே நம்பிக்கை குறைந்தவர்களைத் திருப்தி செய்யப் புராண நந்தனார் முழுகித் தன்உரு ஒழித்து முனிவடிவம் பெறுகின்றார்!

பொய்தகையும் உருஒழித்துப்
புண்ணியமா முனிவடிவாய்,
மெய்திகழ்வெண் நூல்விளங்க
வேணிமுடி கொண்டெழுந்தார்.

[பொய்தகையும்—பொய் உள்ளடங்கும். வெண்நூல்—வெண்ணிறப் பூணூல், வேணி முடி—சடைமுடி.]
என்று சேக்கிழார் பெருமான் கூறுவதைக் கூர்ந்து பாருங்கள்.

இறையருளால் புலைத்தன்மை போய் முனிவர்தன்மை நந்தனுருக்கு வந்தது என்ற பழைய வரலாறுதான் காலமாகிய வயலில் இப்படிக் கதிர்வீசி வளர்ந்திருக்க வேண்டும். —இல்லையா? இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தால் காந்தியடிகளுக்குப்பிரியமான குஜராத்திப்பாட்டுகளிலே பின்வரும் அடிகளை சற்றுக் கூர்ந்து நோக்குங்கள்:

‘அன்பு நெறியே அக்னிஸ்நானம் தான். கோழை அஞ்சி விலகிப் போகிறான்.’

‘இந்த நெருப்பிலே குதிக்கத் துணிகின்றவன் அந்தமில் இன்பம் அணைகின்றான்.,

சிறிதும் அஞ்சாது இந்த அக்னி ஸ்நானம் செய்தவர் நந்தனார். இப்படி நீராடி (நெருப்பாடி) நிர்மலராகி, அந்தமில் இன்பமாகிய தனிப்பெருங் கூத்தை வந்தணைந்து கண்டவர் நந்தனார் என்பதில் ஐயமும் உண்டோ? இவ்விதமாவே,

அந்தமிலா ஆனந்தப்
பெருங்கூத்தர் அருள்புரிந்தார்.

—இதுதான் ஆதிநந்தனார் சரிதம் என்பது என் கருத்து.



ஜப்பானிய வரவு செலவுத் திட்டம், பெரிய விவாதத்துக்கிலக்காயிருந்த சம்பள நிர்ணய மசோதா இவற்றை ஜப்பான் பார்லிமெண்டு இரவு பூராவாக விவாதித்தது சமீபத்தில். இதனால் களைத்துப்போன மெம்பர்கள் பார்லிமெண்டு ஹாலில் நாற்காலிகளில் படுத்து உறங்கினர்.

பேஸ்லி மிருகக்காட்சிச் சாலையிலுள்ள இந்தக் குரங்கு காலைப் போஜனம் செய்கையில் எடுத்த படம். இதற்கு $2\frac{1}{2}$-வயது. ஸ்பூனை லாகவமாகப் பிடித்துக்கொண்டு ருசி பார்க்கிறார்!

மைத்துனன்



ப. ராதாகிருஷ்ணன்

வாய்க்குள்ளாக ஏதோ முணுமுணுத்தவண்ணம் ஆபீஸ் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான் ராகவன். ஆனால் அவனது மனது மட்டும் எங்கோ ஓடிக்கொண்டிருந்தது. அவனது மூளையில் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் போராடிக்கொண்டிருந்திருக்க வேண்டும். அவனருகில் நாற்காலியிலமர்ந்து மேஜைமேல் காலைப் பரப்பிக்கொண்டு உறக்கத்திலாழ்ந்திருந்த குமாஸ்தா கோபாலய்யரின் குறட்டைகூட அவனது சிந்தனைக் கடலில் குறுக்கிட்டு அணைபோட முடியவில்லை. ஆபீஸ் அறையில் அங்குமிங்கும் அமர்ந்திருந்த இன்னும் சில குமாஸ்தாக்களும் வேலையில் கவனமின்றி அரட்டையடித்துக்கொண்டிருந்தனர். அது அவர்கள் வழக்கம். ஆனால் சுபாவத்திலேயே கடும் உழைப்பாளியான ராகவனின் மனமும் இன்று ஏன் இப்படி வேலையில் ஈடுபடாமல் அலை பாய்கிறது?

ஆபீஸ் கடிகாரம் 'டாண்' என்று மணி ஒன்றடித்தது. அதையே எதிர்பார்த்திருந்த மற்றக் குமாஸ்தாக்களெல்லாம் சட்டென்று பேனாக்களைக் கையிலெடுத்துக்கொண்டு புத்தகங்களில் ஏதோ கிறுக்கத் தொடங்கினர். தூங்கிக்கொண்டிருந்த கோபாலய்யர் உடலில் அந்தக் கடிகார மணியின் நாதம்எத்தகையபுத்துணர்ச்சியை எழுப்பிவிட்டதோ தெரியவில்லை. மறுகணம் துள்ளியெழுந்து வேலையில் மூழ்கினார். இந்த வேடிக்கைகளெல்லாம் சாதாரணமாகத் தினந்தோறும் ராகவன் பார்த்து வருவது தான். 'டிபன்' சாப்பிட வெளியே போவதற்காக மானேஜர் அறையை விட்டு வெளியே வரும் சமயம் அது. அப்பொழுது மட்டும் கொஞ்சம் வேலை செய்வது போல் நடித்துவிட்டால் அவரைத் தொடர்ந்து தாங்களும் டிபனுக்குச் செல்லலாம். இந்த அகடவிகட சாமர்த்தியமெல்லாம் மற்ற குமாஸ்தாக்களுக்குத் தெரிந்திருந்ததுபோல் ராகவனுக்கு ஒன்றும் தெரியாது. எப்போதும் வேலையில் கண்ணும் கருத்துமாயிருப்பவன் அவன்.

அறையினின்றும் வெளிவந்த மானேஜர் ஸ்ரீதரன் நேரே ராகவனருகில் தான் வந்தார். அவர் வருவதைக்கூடக் கவனிக்காமல் சிந்தனையிலாழ்ந்திருந்த ராகவன் தன் தோளின்மீது அவர் கையின் ஸ்பரிசம் பட்டபின்னரே நிமிர்ந்து நோக்கினான். "டிபன் சாப்பிட வருகிறாயா ராகவா?" என்று கேட்டார் ஸ்ரீதரன். சற்று விழித்த ராகவன் "இப்போது எனக்குப் பசியில்லை—நான் சற்று நேரம் பொறுத்து வருகிறேன்" என்று பதிலளித்தான். அவன் மனமறிந்து பொய் சொல்லியறியாதவன், என்றாலும் இதற்கு அவன் மனதில் நடந்துகொண்டிருந்த போராட்டத்தையே தான் காரணமாகச் சொல்ல வேண்டுமேயன்றி, வேறென்ன சொல்வது?

"சரி" என்று போய்விட்டார் மானேஜர் ஸ்ரீதரன். வழக்கம் போல அவரைத் தொடர்ந்து மற்றக் குமாஸ்தாக்களும் வெளியேறினர். அவர்களில் இருவர் தம்முள் பரிகாசமாய் வார்த்தையாடிக்கொண்டுபோனது ராகவனின் காதல் விழாமற் போகவில்லை. "அடேயப்பா! என்ன பரிவு! என்ன இருந்தாலும் சொந்த மைத்துனன் அல்லவா?" என்ற வார்த்தைகள் அவன் மனதில் தைத்தன.

ஆம். உண்மையில் ராகவன் ஸ்ரீதரனின் மைத்துனன்தான். ஸ்ரீதரனின் அருமைத்தங்கை ராஜியைத்தான் ராகவன் மனைவியாகப் பெற்றிருந்தான். அவனைப் போல் அந்த ஆபீஸில் "மானேஜரின் மைத்துனன்" ஆக இருக்கும் அதிர்ஷ்டம் தமக்கு இல்லையே என்பது ராகவனின் நண்பர்களான அந்தக்குமாஸ்தாக்களின் பொறாமை. ஆனால் அந்தப் பெரும் பதவி ராகவனுக்கு எவ்வளவு தூரம் மகிழ்ச்சியும் பெருமையும் அளித்தது என்பது அவர்களில் யாருக்காவது தெரியுமா?

தனக்கும் ஸ்ரீதரனுக்கும் சொந்த வாழ்க்கையில் எவ்வித சம்பந்தமும் இருப்பதையே ராகவன் அடியோடு வெறுத்தான். ஸ்ரீதரன் அவனிடம் என்னதான் பரிவுடனும் ஆதரவுடனும் நடந்துகொள்ள விரும்பினபோதிலும், நடந்துவந்த போதிலும், உத்தியோக முறையில் அவன் மேலதிகாரி—தான் பணியாள் என்ற மனப்பான்மை ராகவன் மனதில் தோன்றிப் புழுப்போல் அரித்து வந்தது. "நம் தலைவிதி சொந்த மைத்துனனிடமே கைகட்டி நிற்க வேண்டியிருக்கிறதே" என்று அவன் அடிக்கடி மனம் புழுங்குவான். அச்சமயம் ஸ்ரீதரனின் அன்பு அவனுக்கு வேம்பாய்க் கசந்தது. தன் மனைவி ராஜியிடம் ராகவனுக்கிருந்த காதலின் வன்மையால்கூட இந்தத் துவேஷ மனப்பான்மையை அகற்றமுடியவில்லை.

ஸ்ரீதரனும் தன் தங்கை ராஜியிடம் அளவற்ற வாஞ்சையுடையவன்தான். ஆனால் நாளுக்குநாள் ராஜியின் கணவனிடம் ஏற்பட்டு வந்த சில மன மாறுதல்கள் அவனது நடத்தையிலும் பிரதிபலிப்

பதைக் கண்டதும் ஸ்ரீதரன் மெதுவாக விஷயங்களை யூகித்துக் கொண்டான். தன் எண்ணங்களை வெளியிடாமலேயே சற்று ஒதுங்கி நிற்கத் தீர்மானித்துக் கொண்டான். நாளடைவில் அவன் தன் தங்கையைப் பார்க்க வருவதே அபூர்வமாயிற்று. இதை ராகவன் பொருட்படுத்தவில்லை. என்றாலும் ஆபீஸில் அவனைச் சந்திக்கும் போது மட்டும் அடிக்கடி தன் தங்கையைப்பற்றி ஸ்ரீதரன் விசாரிக்கத் தவறுவதில்லை.

அதே ஊரில் தன் குடும்பத்துடன் தனியாக வசித்து வந்தான் ஸ்ரீதரன். அவன் மனைவி செல்வர் வீட்டுப் பெண். ராகவன் முதலிலேயே வேலை பார்த்துவந்த அந்த ஆபீஸுக்குத் தன் மாமனாரின் சிபார்சின்பேரில் மானேஜராக நியமிக்கப்பட்டு வந்தவன் ஸ்ரீதரன். அதற்குமுன்பே ராஜிக்கும் ராகவனுக்கும் விவாகமாகியிருந்தது. ராஜி நல்ல அழகி. ராகவன் தன் உயிரையே மனைவி பேரில் வைத்திருந்தான். அதுவரை ஸ்ரீதரனுக்கும் ரககவனுக்குமிடையில் நிலவி வந்த நேசமும் அன்பும் பிறர் கண்டு பொறாமைப்படத் தக்கனவாயிருந்தன. ஆனால் எந்த நிமிஷம் தலைவிதி ஸ்ரீதரனை ராகவனது காரியாலயத்தில் கொண்டு சேர்த்ததோ, அந்த நிமிஷம் முதல் பிடித்தது அனர்த்தம்.

தன் மன்னி போட்டுக்கொண்டிருந்த வைரக் கம்மல்களைப் பார்த்துவிட்ட ராஜி தனக்கும் அதுமாதிரி வேண்டும் என்று தன் கணவனிடம் பிடிவாதம் செய்தாள். தன் வருமானத்தில் ஜீவனம் நடத்துவதே பெரிய பிரச்னையாயிருக்கும்போது ராகவன் வைரத் தோட்டுக்கு எங்கே போவான்? ஆனால் பணம் சம்பாதிப்பதிலுள்ள சிரமமும் பணத்தின் அருமையும் நம் பெண்மணிகளுக்குத் தெரியுமா?

"இன்று, நாளை" என்று சால்ஜாப்பு சொல்லிக்கொண்டே எத்தனை நாள் கடத்தமுடியும்? கடைசியாக "இன்று வைரத்தோடுகளில்லாமல் மனைவியின் முகத்தில் விழிக்கமுடியாது" என்ற நிலைமை வந்துவிட்டது. இதுதான் அன்று ராகவன் மனதில் நிகழ்ந்துகொண்டிருந்த கடும் போராட்டத்

திற்குக் காரணம். கடனாக வேனும் ஸ்ரீதரனிடம் பணம் கேட்டால் தயங்காமல் கொடுத்துவிடுவானென்று ராகவனுக்குத் தெரியும். ஆனால் அவனா ஸ்ரீதரனிடம் கேட்பான்? நேரம் செல்லச்செல்ல அவனது மனக் குழப்பம் அதிகரித்தது.

எல்லோரும் டிபன் சாப்பிட வெளியே சென்றுவிட்டனர். ராகவன் மட்டும் தனிமையில் இருந்தான். சில நிமிஷங்களாக அவன் மனதில் ஒரு தீர்மானம் உருவாகிக் கொண்டிருந்தது. ஆனால் ஒரு புறம் அவன் மனச்சாக்ஷி இடித்துக்கொண்டிருந்தது. தான் செய்ய விரும்புவது மிகக் கேவலமான செய்கை என்று அவனறிவான். ஆனால் அவன் கரங்கள் அத்திருட்டைச் செய்யப் புகுமுன் அவனது மனச்சாக்ஷி குறுக்கிடுவதற்குப் போதிய வலுப்பெறவில்லை. அதற்குள் ஒன்றரை மணியாகிவிட்டது என்பதற்கு அடையாளமாக 'டாண்' என்று ஒரு அரைமணி அடித்தது கடிகாரம். அம்மணியின் ஒலி 'இனித்தாமதிக்க நேரமில்லை' என்று அவனைத் தூண்டுவது போலிருந்தது. வெளியே சென்ற நண்பர்களெல்லாம் இன்னும் சில நிமிஷங்களில் திரும்பிவிடுவர். பின், தான் எண்ணியதை நிறைவேற்ற அவனுக்குச் சந்தர்ப்பம் ஏது?

மெல்ல எழுந்து மானேஜர் ஸ்ரீதரனின் அறைக்குள் நுழைந்தான் ராகவன். அங்கு கோட்ஸ்டாண்டில் தொங்கியது ஸ்ரீதரனின் கோட்டு. அதன் உட்பையில் கையைவிட்டு ஒரு மணிபர்ஸை எடுத்தான்—சரியாக ஐந்து பச்சை நூறுரூபாய் நோட்டுகளிருந்தன அதில். கண்ணிமைக்குமுன் அவை ராகவனின் பைக்கு மாறின. உடனே மணிபர்ஸை மீண்டும் கோட்டுப்பையில் திணித்துவிட்டுப் பூனைபோல் வெளியே வந்தான் ராகவன். முன்போல் தன் மேஜையிலமர்ந்து புஸ்தகங்களைப் புரட்டத் தொடங்கிய ராகவனைப் பார்த்தால் இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்றுதானிருந்தது. தன் திருட்டு வெளியாகி விட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒருபுறம் அவனை வாட்டினாலும் அன்றைக்காவது தன் காதலி விரும்பிய வைரத் தோட்டைஅவளுக்குப்பூட்டி அழகு பார்க்கலாமென்ற ஆசை வந்து அதை மறைத்தது. "பணம் ஏது?" என்று அவள் கேட்டால் ஒரு நண்பனிடம் கடன் வாங்கியதாகச் சொல்லிவிடலாமென்று எண்ணினான்.

அன்று மாலை சற்று முன்னதாகவே ஆபீஸைவிட்டுக் கிளம்பினான் ராகவன். அதைப் பார்த்த மற்ற நண்பர்கள் "அவனுக்கென்னப்பா? மானேஜரின் மைத்துனன்." என்று தம்முள் பேசிக் கொண்டனர். அதைக்கூடப் பொருட்படுத்தாமல் நேரே கடை வீதியை நோக்கி நடந்தான்.

நகை வியாபாரி சேட் ராம்லாலின் கடையில் புகுந்து அவன் வைரக்கம்மல்களிருந்தால் காட்டும்படி கேட்டபொழுது, சேட்ஜீ உள்பட கடை சிப்பந்திகளெல்லோரும் அவனை ஒரு முறை ஏற இறங்க நோக்கினர். இவனா வைரம் வாங்குபவன்?" என்ற அதிசயம் அவர்கள் முகத்தில் பிரதிபலித்தது. ஆனால் அதற்காக நகையை வாங்காமல் திரும்பிப் போய் விடலாமா? பையில் பணம் கனக்கிறதே! ராகவன் உயர்ந்த வைரங்களாலிழைத்த ஒரு ஜதைக் கம்மல்களை வாங்கத்தான் வாங்கினான்

வெகு கம்பீரமாகக் கடையைச் சுற்றிலும் ஒரு முறை நோக்கி விட்டு வீடு திரும்பினன். அவனை ஒரு திருடனென்று யார் சொல்ல முடியும்?

* * * * *

ராஜியின் காதுகளில் அக்கம்மல் களைப்பூட்டி அவளது மலர்ந்த முகத்தைக் கண்டு அகமகிழ்ந்தான் ராகவன். ஆனுல் பூஜைவேளையில் கரடி புகுந்தது போல் இந்தச் சமயத்தில்தான் வாசற்கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. மனதிற்குள் ஏதோ சபித்துக்கொண்டே எழுந்து சென்று கதவைத் திறந்தான். ராஜி உள்ளேயே கண்ணுடியில் தன் அழகைப் பார்ப்பதில் லயித்திருந்தாள். இல்லாவிடில் அவளும் அவனைப் பின்தொடர்ந்திருப்பாள். அவன் அங்ஙனம் செய்யாததே நல்லதாய்ப் போயிற்று.

கதவைத் திறந்த ராகவன் திடுக்கிட்டான். வாசற்படியில் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க நின்றுகொண்டிருந்தான் ஸ்ரீதரன். பணத்தைத் திருடியதுதான் தானென்று அவன் தெரிந்துகொண்டு விட்டானே என்று ராகவன் பயந்ததில் என்ன வியப்பு இருக்கிறது? ஆயிற்று. அடுத்த கணம் அவன் தன்னிடம் பணத்தைப்பற்றிக் கேட்டு விடுவான். தன் தமையன் குரலைக் கேட்டதும் ராஜியும் உள்ளிருந்து ஓடி வந்துவிடுவாள். அவள் காதில் 'பளபள' வென்று டால் வீசும் கம்மல்களைக் கண்டதும் ஸ்ரீதரனின் சந்தேகம் ஊர்ஜிதப்பட்டு விடும். நடந்தவற்றை ராஜியே புரிந்துகொள்ளாமல் போகமாட்டாள். தன் கணவன் திருடனென்று அவளறிந்து விட்டால்—அதுவும் தன் சொந்தத் தமையனிடமிருந்தே திருடியிருக்கிருனென்று அவள் அறிந்து விட்டால்—அப்புறம் அதைவிட வேறு அவமானம் என்ன வேண்டும்? ராகவனின் உடலெங்கும் குப்பென்று வியர்த்து விட்டது.

ஸ்ரீதரனின் கை ராகவனின் தோள்களை இறுகப்பற்றியது. "ராகவா! ஒரு அவசர விஷயம். என்னேடு கொஞ்சம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர முடியுமா?" என்று கேட்டான் அவன். அவன் குரலிலிருந்தே பதற்றத்துக்குக் காரணம் என்னவென்பது ராகவனுக்குத் தெரியாவிட்டாலும் அவன் செய்வது பரிகாசமல்ல என்பது விளங்கிவிட்டது. ஸ்ரீதரன் ஏன் தன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைக்கிருன்? தான்தான் திருடனென்று போலீஸாரிடம் ஒப்புவிப்பதற்கா? தன் சொந்த மைத்துனனையா அவ்விதம் கூசாமல் பெருத்த அவமானத்துக்கும் கஷ்டத்துக்கும் உள்ளாக்க முயற்சிக்கிருன்? ராகவனின் தலை சுற்றியது. என்ருலும் பேசாமல் ஸ்ரீதரனேடு நடந்தான். நாலடி தூரம் நடப்பதற்கு முன் உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாமா?' என்ற எண்ணம் உதித்தது அவனுக்கு. சற்றுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ஸ்ரீதரனை நோக்கிக் கேட்டான் அவன். "ஸ்ரீதரா, என்னை ஏன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகிருய்?" என்று.

"நான் என்ன சொல்வது ராகவா. அநியாயமாய் ரூபாய் ஐந்நூறைப் பறிகொடுத்து விட்டேனடா மணிபர்ஸோடு." என்று அங்கலாய்க்கும் குரலில்சொன்னுன் ஸ்ரீதரன். அந்த 'மணிபர்ஸோடு' என்ற வார்த்தை ராகவனை இன்னும் திடுக்கிடச் செய்தது. அவன் பணத்தைமட்டும்தானே எடுத்திருந்தான்? மணிபர்ஸை மீண்டும் ஸ்ரீதரனின் கோட்டுப் பையிலேயே வைத்துவிட்டானே. பின் எப்படி இந்த ஸ்ரீதரன் மணிபர்ஸோடு பறிகொடுத்தேன் என்று சொல்கிருன்? அவன் திகைப்பு தீருமுன் ஸ்ரீதரனே தொடங்கு சொன்னுன். "ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளாக மணிபர்ஸில் எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குத்தானடா வந்துகொண்டிருந்தேன். அந்த மூலையில் ஒரு சிறிய சந்து இருக்கிறதல்லவா- துரதிர்ஷ்டவசமாய் இன்று அந்தப்பாழும் முனிஸிபாலிடி விளக்குக்கூட எரியவில்லை. நான் அதனருகில் வந்துகொண்டிருந்தபோது, அந்த இருளடைந்த சந்தினுள்ளிருந்து கையில் கத்தியுடன் இரண்டு ஆசாமிகள் வெளிப்பட்டு மணிபர்ஸைக் கொடுக்கும்படி என்னை மிரட்டினர். அதுவோ ஜன சந்தடியற்ற இடம். நான்தான் எவ்வளவு தைரியசாலியென்று உனக்குத் தெரியுமே. வாயைத் திறவாமல் மணிபர்ஸைக் கொடுத்துவிட்டுச் செத்தேன் பிழைத்தேனென்று உன் வீட்டுக்கு ஓடி வந்தேன். இன்னும் தனியே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் 'ரிப்போர்ட்' செய்யக்கூடப் பயமாயிருந்தபடியால்தான் உன்னையும் துணைக்கு அழைத்துக்கொண்டு போகலாமென்று......"

இந்த நெருக்கடியான நிலைமையிலும் ராகவனுக்கு உள்ளூற நகைப்பேற்பட்டது. "ஆமாம், அந்த மணிபர்ஸில் ரூபாய் இருந்தது

என்று உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?'' என்று கேட்டான். "இல்லாமல் எங்கேயடா போகும்? நான் இன்று காலையில் என் பெட்டியிலிருந்து கணக்காக எண்ணியெடுத்துத்தானே பர்ஸில் வைத்துக்கொண்டேன்?'' என்றான் ஸ்ரீதரன். அதுவரை பர்ஸிலிருந்த பணம் முதலிலேயே திருட்டுப் போய்விட்டதென்பதை அவன் உணரவேயில்லை. அவன் திருடர்களிடம் கொடுத்த பர்ஸ் காலி என்பது ராகவனுக்கும் அந்த வழிப்பறிக்காரருக்கும் மட்டும் தானே தெரியும்?

தன்னைப்பொறுத்தவரை ராகவனுக்கு இனி ஒரு பயமுமில்லை. உள்ளூர்ப் போலீஸின் சாமர்த்தியத்தைப் பற்றியும் அவனுக்கு நன்கு தெரியுமாகையால் ஸ்ரீதரனை வழிமறித்த அந்தத் திருடர்கள் பிடிபடுவார்களென்பதில் அவனுக்கு நம்பிக்கையுமில்லை. அப்படியே அவர்கள் பிடிபட்டாலும் கூடத் தாங்கள் ஸ்ரீதரனிடமிருந்து பிடுங்கிய பை காலிதான் என்று அவர்கள் சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்? இப்போது ராகவனின் மூளை நிதானத்துக்கு வந்துவிட்டது. ஸ்ரீதரனின் மேலிருந்த அந்தப் பழைய துவேஷ உணர்ச்சியெல்லாம் அந்த ஒரு கணப்பொழுதில் மறைந்து அதற்குப் பதில் அவன் மனதில் அன்பும் நேசமும் குடிகொண்டன. முறைக்காக வேணும் போட்டு வைக்கலாமென்று வேறொரு கேள்வியைப் போட்டான். "ஏனப்பா ஸ்ரீதர், சுத்தப் பைத்தியக்காரனாக இருக்கிறாயே. இந்த இருட்டு வேளையில் அவ்வளவு பெரிய தொகையை எடுத்துக்கொண்டு தன்னந்தனியாக வெளியே கிளம்பலாமா?'' என்று கடிந்து கொள்ளுவது போல்.

"நான் வந்த காரணம் தெரிந்தால் நீ இப்படிச் சொல்லமாட்டாய் ராகவா. அந்தப் பணத்தை இன்று ராஜியிடம் கொடுக்காவிட்டால், அப்புறம் என் முகத்தை அவள் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டாளென்றுதான் நான் உன் வீட்டுக்குக் கிளம்பினேன்'' என்றான்.

"பணமா? ராஜிக்கா? ஏன்? எதற்கு?'' என்று சரமாரியாகக் கேள்வி போட்டான் ராகவன்.

"ஆமாம்பா ஆமாம். அன்று என் வீட்டுக்கு ராஜியை அழைத்துக்கொண்டு நீ வந்திருந்தாயே. என் மனைவி போட்டுக்கொண்டிருந்த வைரத் தோட்டைப் பார்த்துவிட்டு ராஜி பண்ணின பிடிவாதத்தில் இன்னும் மூன்று மாதத்தில் அவளுக்கும் கட்டாயமாய் ஒரு ஜதை வைரத்தோடு வாங்கித் தருவதாய் ஒப்புக்கொண்டு விட்டேன். இல்லாவிட்டாலும் அவள் உன் பிராணனைத்தான் எடுப்பாளென்று எனக்குத் தெரியாதா? என் தங்கை மூலம் உனக்கு அனாவசியமாகப் பணக் கஷ்டமும் மனக்கஷ்டமும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஆகையினால் நான் சில மாதங்களாகச் சேர்த்து வைத்திருந்த தொகை ரூபாய் ஐந்நூறையும் எடுத்துக்கொண்டு, உன்னையும் ராஜியையும் நகைக் கடைக்கு அழைத்துக்கொண்டு போய் நல்லதாக ஒரு ஜதைக் கம்மல் வாங்கலாமென்றுதான் உன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். மத்தியானமே ஆபீஸில் உன்னிடம் இந்தச் சமாசாரத்தைச் சொல்லவேண்டுமென்று துடியாய்த் துடித்தேன். நாம் பேசுவதை ஒட்டுக் கேட்பதற்கென்றே அங்கிருக்கும் குமாஸ்தாக்களெல்லாம் காதுகளைத் தீட்டிவைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்போது இதை எப்படிச் சொல்லுவதென்று தான் டிபன் சாப்பிடப்போகும் சாக்கில் உன்னை வெளியே அழைத்தேன். நீ வர மறுத்துவிட்டாய். 'சரி. சாயங்காலம் ஆபீஸ்முடிந்து எல்லாரும் வீட்டுக்குப்போகும்போது உன்னுடனேயே வந்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டு போய்விட்டேன். அப்புறம் விசாரித்ததில் வழக்கமாக ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டுக் கிளம்பும் நீ இன்று நாலு மணிக்கே போய்விட்டாயென்று தெரிந்தது. நாளை ஞாயிற்றுக்கிழமையானதால் கொஞ்சம் பாக்கியிருந்த வேலைகளையும் இன்றைக்கே முடித்துக்கொண்டு கிளம்புவதில்தான் இத்தனை நாழியாகி விட்டது. ஆனால் என் தலைவிதி இப்படியாகுமென்று நான் கண்டேனா என்ன?'' என்றான் ஸ்ரீதரன்.

ராகவனின் மனம் இளகியது. ஸ்ரீதரன் சுத்த வெகுளி என்பதை அவன் இப்போதுதான் அறியத் தொடங்கினுன்போலும்! தங்கையின் பேரில் அவன் உயிரையே வைத்திருந்தான்—உலகத்தில் எத்தனை அண்ணன்மார்களுக்குப் பெற்ற தந்தையைவிட, உடன் பிறந்த சகோதரியைவிட மனைவியே முக்யமாகத்தோன்றுகிறது? ஆனுல் ஸ்ரீதரன் எவ்வளவு அன்புடன், தான் சிரமப்பட்டாகிலும் தன் சகோதரியை மகிழ்விக்க எண்ணினுன்! "இவனை நாம் இதுவரை சரியாக அறிந்து கொள்ளாமல் வெறுத்து வந்தோமே" என்று பச்சாதாபப்பட்டான் ராகவன். இன்னும் இவனை ஏமாற்றுவது அவன் மனச்சாக்ஷியை உறுத்தியது. மனதிற்குள் ஒரு கணம் போராடிய பின் உண்மையைச் சொல்லிவிடத் தீர்மானித்தான். ஆனுல் அதைத் 'திடும்' என்று சொல்லிவிடலாமா? மெல்ல 'வாழைப் பழத்தில் ஊசியேற்றுகிற' மாதிரியல்லவா பேசவேண்டும்?

அதற்குள் போலீஸ் ஸ்டேஷன் சமீபத்திலிருந்தது. 'சட்' டென்று ஸ்ரீதரனின் தோளைப்பற்றி நிறுத்தினுன் ராகவன். "ஸ்ரீதரா. என்னைக் கேட்டால் இந்தப் போலீஸில்போய் 'ரிப்போர்ட்' செய்யும் தொல்லையே நமக்கு வேண்டாமென்பேன்." என்றுன்.

"ஏன்? என்ன அப்படிச் சொல்லுகிறுய்?"

"ஏனு? முதலாவது இந்தப் போலீஸ்காரர்களால் அந்தத் திருடர்களைப்பிடிக்க முடியப் போவதில்லை. அப்படி அதிர்ஷ்டவசத்தினுல் அவர்கள் கையில் திருடர்களே வலியவந்து மாட்டிக்கொண்டால்கூட, அவர்களிடமிருந்து ஒரு காலணுக் காசு பெயரப் போவதில்லை. ஏதாவது பெயர்ந்தால்கூட அது நம்மிடமிருந்து பிடுங்கிய பணமாயிருக்காது."

ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்த ஸ்ரீதரனைப் பார்த்து ராகவன் மேலும் சொன்னுன். "ஏனென்றுல் நீ கொடுத்த பர்ஸ் காலி! இப்போது ஏமாந்தது நீயல்ல. அந்தத்திருடர்கள்தான்."

"ஆ! அது எப்படி?" என்று துள்ளிக் குதித்தான் ஸ்ரீதரன்.

"எப்படியென்றுல்...... அந்தத் திருடர்களை நான் முந்திக்கொண்டு விட்டேன். அதுமட்டுமா? ராஜிக்கு வைரத்தோடு வாங்குவதிலும் உன்னை முந்திக்கொண்டுவிட்டேன். முதலில் நீ என் வீட்டுக்கு வா. எல்லாம் விவரமாகச் சொல்லி உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். அதோடு ராஜி காதில் வைரத்தோடு எப்படி ஜொலிக்கிறது என்று பார்த்து விட்டுப் போ" என்று கூறி ஸ்ரீதரனின் கையைப்பற்றித் தரதரவென்று இழுத்துச் சென்றுன் ராகவன்.

* * * *

மறுநாள் ஆபீஸில் இந்த இரு மைத்துனர்களுக்கிடையே நிலவிய அந்நியோன்னியத்தைக்கண்டு அதிசயித்த குமாஸ்தாக்கள் தம் முன் ரகசியமாகக் காதைக் கடித்துக்கொண்டனர். ராகவன் முகம் அதைப்பார்த்ததும் பெருமையால் மலர்ந்தது. "இவர்களெல்லாம் என்னைக் கண்டு பொருமைப்படுகிருர்கள். நியாயம் தானே. நேற்று நான் செய்த பெருங்குற்றத்தையும் மன்னித்து அதை உடனே அறவே மறந்து விட்ட பெருந்தன்மை ஸ்ரீதரனுக்கல்லாமல் வேறு யாருக்கு உண்டு? ஆயிரங்கோடி காலம் தவம் செய்தாலும் அந்தமாதிரியான மைத்துனன் கிடைப்பானு இவர்களுக்கு" என்று எண்ணிக்கொண்டான் அவன்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு
சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.



தாயாருக்கும் மகளுக்கும் வாக்குவாதம் பலமாக இருந்தது. மகளுடைய முகத்தில் துயரமும், கோபமும் பொங்கித் ததும்பின. தாயிடமோ அதற்கு நேர்மாறாக அமைதி காணப்பட்டது. அவளுடைய வார்த்தைகளில் உறுதியும் பச்சாதாபமும் காணப்பட்டன.

"இல்லாத இடத்தில் கொடுத்தால் செய்துதான் ஆகவேண்டும்; நான் கேட்கத்தான் கேட்பேன். உன் வயிற்றில் பிறந்தவர்களில் நாலு பேர் சுகமாக ஆனந்தமாக வாழும்போது நான்மட்டும் ஏன் கஷ்டப்பட வேண்டும்? உன் பிள்ளைகள் ஆளுக்குக் கொஞ்சமாகப் போட்டு என் குடும்பத்தைக் காப்பாற்றத்தான் வேண்டும்." என்று மகள் உரிமையுடன் போராடினாள். தாய் அதை ரஸிக்கவில்லை.

"சியாமளா, நீ இம்மாதிரி கேட்பதற்கு வெட்கப்படவில்லையா? அவரவர் குடும்பம் என்று ஏற்பட்ட பிறகு இன்னொருவர் கையை எதிர்பார்க்கலாமா? நீ புக்ககத்துக்குப் போய் பதினைந்து வருஷங்களாகி விட்டன. இன்னமும் பிறந்த வீட்டார் உன்னைத் தாங்கவேண்டுமென்று நினைப்பது நியாயமா? அது உனக்கே அவமானமாக இல்லையா? அந்தக் காலத்தில் எங்களிடம் வகையில்லை. அதனால்தான் ஏழைக்குக் கொடுத்தோம். அதற்குப் பிராயச்சித்தமாக, உன் அண்ணன்மார்கள் சம்பாதிக்க ஆரம்பித்ததிலிருந்து உங்கள் குடும்பத்துக்கு எவ்வளவோ உதவி செய்தாகிவிட்டது. அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு சாமர்த்தியமாகக் குடித்தனம் பண்ணியிருந்தால், எதற்காக இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? எல்லாரும் நன்றாக இருக்கவேண்டுமென்பது தான் என் பிரார்த்தனை. உனக்கு நகையிலோ, புடவையிலோ ஒரு குறையும் நான் வைக்கவில்லை. என்னசெய்தும் உனக்குத் திருப்தியில்லை. சும்மா கொண்டா, கொண்டா என்றால் எங்கே போகிறது? நீ இங்கே வருகிறபோதெல்லாம் உன் கஷ்டத்தைச் சொல்லி என்னுடன் சண்டை போடுவது தொழிலாய்ப் போய்விட்டது."

தாயின் பேச்சைக் கேட்டதும் மகளுக்குத் துக்கம் தாங்கவில்லை.

"அம்மா! நீ கூட இப்படிப் பேச ஆரம்பித்துவிட்டாயே! அண்ணுக்களுக்குத்தான் என்னைச் சரிப்பு அலுத்துப்போய், என்மீது வெறுப்பு வந்துவிட்டது. நீயும் அப்படி வெறுத்தால் என் கதி என்னவாகிறது? இல்லாக்கொடுமைதானே கேட்கிறேன். உன் குழந்தைகள் ஐந்துபேரும் சுகமாக இருந்தால்தானே, உனக்குச் சந்தோஷமாக இருக்கும். மற்ற எல்லோரும் சௌக்கியமாய் ஒருவித கஷ்டமும் இல்லாமல் இருக்கும்போது, நான் மட்டும் வறுமையிலே அவதிப்படுவது உனக்குச் சந்தோஷமாயிருக்குமா? நீ ஒருத்திதானே எனக்காகப் பரிந்து பேச முடியும்? நீ இருக்கிறவரையில் தானே உன்னோடு சண்டைப் போடப்போகிறேன். உனக்கப்புறம் யாரைப் போய் கேட்கப் போகிறேன்? எனக்கு நீ ஏதாவது வழிபண்ணு. இப்போ அனுப்புற பணம் கொஞ்சங்கூடப் போதவில்லை. இன்னம் கொஞ்சம் சேர்த்து அனுப்ப ஏற்பாடு செய். கடன் வாங்கறதுக்கு இனிமேல் இடமில்லை........"

மகளின் நெஞ்சுருகும் வார்த்தைகளைக் கேட்டு தாயின் மனம் நெகிழ்ந்துவிட்டது.

"உம். ஏதோ நான் இருக்கிறவரையில் செய்துவிடுகிறேன். அப்புறம் உன் தலைவிதிபோல் நடக்கிறது" என்று தாயார் பேச்சை முடித்தாள்.

சியாமளா கண்ணைத் துடைத்துக்கொண்டு, மாடியில் கணவனைக் காணச் சென்றாள்.

2

சியாமளாவுக்குக் கல்யாணமாகி பதினைந்து வருஷங்களாகின்றன. ஆறு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். இன்னமும் அவளுக்குப்பிறந்த வீட்டு ஸகாயம் வேண்டியிருந்தது. அதை நாடுவதற்கு அவள் தயங்குவதும் இல்லை. ஏனெனில் அம்மாதிரி உடன் பிறந்தோரிடம் உதவி கேட்பதை உரிமையாகக் கருதினாள். அவளுடைய சகோதரர்களும் அருமைத் தங்கை என்று அவள் கேட்டதிற்கு மேலாகவே செய்து வந்தார்கள். ஆனால் சிலருடைய ஜாதக விசேஷம் என்ன வந்தாலும் போதாது. எவ்வளவு செய்தாலும் நிறைவு ஏற்படுவதில்லை. அந்த வகையைச் சேர்ந்தவர்கள் தாம் ராஜாமணியும், சியாமளாவும்.

ராஜாமணி, என்று பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலையை ஒப்புக்கொண்டாரோ, அன்றிலிருந்து தரித்திர தேவதை அவர் இல்லத்தில் குடிபுகுந்தாள்.

சியாமளா வரும்போது ஏழையாக வந்தாலும், ஓரிரண்டு வருஷங்

களில் அவள் பிறந்தகம் செல்வத்தில் திளைக்க ஆரம்பித்துவிட்டது. அவளுடைய சகோதரர்கள் நால்வருக்கும் நல்ல வேலையாகி, நிறைய சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். தமது குடியின் வறுமையை அகற்றிய அண்ணன்மார்கள் தங்கைக்கும் தாராளமாக உதவி செய்ய முன் வந்தார்கள்.

ராஜாமணியும், சியாமளாவும் கஷ்டம் நீங்கிவிடும் என்று உவகை கொண்டனர். ஆனால் அது நடைபெறவில்லை. அவர்கள் இல்லத்தில் பிரவேசித்த தரித்திர தேவதையை அசைக்கமுடியவில்லை!

சியாமளாவுக்கு சகோதரர்களிடமும், தாயிடமும் உதவி கேட்பது ஒரு பழக்கமாகிவிட்டது. அவர்கள் என்ன செய்தாலும் அவள் கேட்பதை நிறுத்தவில்லை. நாளடைவில் அண்ணன்மார்களுக்கு சலிப்புத் தட்டத் துவங்கியது. தங்கை பேரில் இருந்த வாத்ஸல்யம் குறைய ஆரம்பித்தது. 'தங்கைக்கு உதவி செய்ய வேண்டும். அவள் சந்தோஷமாக வாழ வேண்டும்' என்ற தயாள நோக்கமெல்லாம் அவர்களை விட்டு மறைந்துவிட்டன.

"தங்கை பணப் பேராசை பிடித்தவள். நம்மிடம் அகப்பட்ட வரையில் சுரண்டப் பார்க்கிறாள்" என்றஅபிப்ராயம்தான் அவர்கள் மனதில் நிலவிற்று. இந்த எண்ணமே நாளா வட்டத்தில் வேரூன்றி, தங்கையைக் கண்டால் வெறுப்புக் கூடத் தட்ட ஆரம்பித்தது.

சியாமளாவுக்கு தமையன்மார்களின் மனப்பாங்கு பிடிபடாமல் இல்லை. ஆனால் அவள் என்ன செய்வாள்? அவள் பணம் சேர்த்து வைத்துக்கொண்டு பிறரிடம் போய் கேட்கவில்லை. தன்னுடைய குடும்ப சம்ரக்ஷணைக்குத்தான் கேட்கிறாள். கணவன் சம்பளம் இருபத்தி ஆறேமுக்கால் ரூபாயில் எப்படி எட்டு ஜீவன்கள் காலந்தள்ள முடியும்?' அண்ணன்கள் ஆயிரம், இரண்டாயிரமென்றுசம்பாதிக்கிறார்களே! அதில் ஆளுக்கு இருபத்தி ஐந்து ரூபாய் அனுப்பினால்கூட என் குழந்தைகளும், நானும் காலந்தள்ளி விடுவோமே' என்பதுதான் அவள் எண்ணம். ஆனால் அண்ணன்கள்தான் சகோதரியை வேறுவிதமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்களே!

தாயார் ஒருத்தியிடம்தான் தன் குறைகளை எல்லாம் சொல்லி வாதாட முடிந்தது. அவளுக்குக் கூட பிள்ளைகளின் மனப்பாங்கின் வாடை அடித்திருந்தது. பெற்ற உள்ளம் ஆதலால் அங்கே வெறுப்புக்கு இடமேற்படவில்லை. இவ்வளவு உதவி அளித்தும், மகளும், மாப்பிள்ளையும் கஷ்டத்தினின்று மீளமுடியவில்லையே என்ற அங்கலாய்ப்பு அவளுக்கு இருந்தது. தன் காலத்துக்குப் பிறகு பெண்ணை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள் என்று உறுதியாக அவள் நினைத்தாள். அதை மகளிடமும் சொன்னாள். ஆனால் பிரயோஜனம்?

3

ராஜாமணி எங்கேயோ கவனமாக இருந்தபடியால், சியாமளா வந்ததைக் கவனிக்கவில்லை.

"என்ன யோசனை பலமாக இருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே சியாமளா அவர் பக்கத்தில் உட்கார்ந்தாள். இவ்வளவு வறுமையில் வாடினாலும், அவர்கள் அந்நியோன்ய தம்பதிகளாகவே இருந்தார்கள். சியாமளா தன் கணவனிடம் ஒரு நாள் கூட நிஷ்டூரமாகப் பேசியதுகிடையாது. பிறந்தகத்திலிருந்து பணம் பணமாக வந்தபோதிலும் கணவனிடம் உதாசீனமாகவோ, மரியாதைக்குறைவாகவோ நடந்துகொண்டதில்லை. அண்ணாக்கள் ஆயிரமாயிரமாக சம்பாதித்தபோதிலும் அவள் ஏழை உபாத்தியாயரின் பத்தினியாகவே அடக்கமே அணிகலனாக நடந்து வந்தாள். குடும்ப சௌஜன்யம் மட்டும் இல்லாமல் இருந்தால், ராஜாமணி என்றோ அதோகதியாகியிருப்பாள்.

சியாமளாவின் குரலைக் கேட்டதும், ராஜாமணி தமது யோசனைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு அவள் பக்கம் திரும்பினார்.

"என்ன சொல்கிறாள் அம்மா?" என்று சாவதானமாகக் கேட்டார்.

"வழக்கம் போலத்தான் ஒரு போராட்டம். பிறகு சம்மதம். நம்ம பிழைப்பே அப்படியாகிவிட்டது. அந்தக் காலத்தில் இருந்த நிலைமையை யார் நினைத்துப் பார்க்கிறார்கள்? இந்தத் தடவை அம்மாவுக்கே சலிப்புத் தட்டிவிட்டது. உம்; அவளும்தான் என்ன செய்வாள்? அவள் கையிலா வைத்துக்கொண்டிருக்கிறாள்? அவளுக்கும் அண்ணாக்கள் கொடுப்பதுதானே?"

"நீயே எல்லாம் சொல்லிக்கொள்கிறாய். தொலையட்டும். நாளை ஸ்கூல் திறக்கிறார்கள். நான் இன்று இரவு போகலாமென்று பார்க்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?"

"இன்னம் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வரலாமென்று பார்க்கிறேன்."

"உன் னிஷ்டம். உன் அம்மா..."

"அம்மா என்ன சொல்லக் கிடக்கு? பிறந்த வீட்டில் இருக்கக் கூட எனக்கு உரிமை கிடையாதா, என்ன?"

"நீதான் இந்த உரிமையெல்லாம் கொண்



டாடுகிருய். அதற்கு ஒருவரும் மதிப்பு வைத்ததாக எனக்குத் தெரியவில்லை.'' என்ருர் சிரித்துக் கொண்டே.

"இதாவது சொல்லத் தெரிகிறதே!'' என்று கூறிவிட்டு அவள் அவ்விடத்தை விட்டு அகன்ருள்.

ராஜாமணி சிந்தனை மூட்டையை பழையபடி அவிழ்த்தார்.

கோடை விடுமுறைக்கு குடும்ப சகிதம் வருஷா வருஷம் ராஜாமணி மாமியார் வீட்டை முற்றுகை இடுவார். அப்போதுதான் சியாமளா தன் உரிமைக் கோரிக்கைகளையெல்லாம் பிரேரேரிப்பாள். குடும்பப் பொருளாதார நிலையை சீர்திருத்த மான்யம் கேட்பாள். அதற்காக தாயுடன் போராடுவாள்.

இந்த வருஷாந்திர நிகழ்ச்சி அந்த வருஷம் தீவிரமாக இருந்தது. அவளுடைய மானியக் கோரிக்கைக்கு, முதலில் தாயிடமிருந்துகூட எதிர்ப்பை கண்டபோது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதனால்தான் தாய் வீட்டில் கொஞ்சகாலம் தங்கிப் போகலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

4

இரவு பதினேறு மணி வண்டிக்குத்தான் ராஜாமணி புறப்படத் தீர்மானித்திருந்தார்.

எட்டுமணிக் கெல்லாம், அவரும், அவருடைய கடைசி மைத்துனனும் சாப்பிட உட்கார்ந்தார்கள். ராஜாமணி தம்முடைய மாமியாரிடம் ஸகஜமாகப் பேசுவார். சாப்பிடுகையில் தாம் ஊருக்குப் போவதைப்பற்றி பிரஸ்தாபித்தார்.

"ஏன், சியாமளாவுக்கு என்னவாம்? குழந்தைகளுக்கு படிப்புக் கெட்டுப் போய்விடாதா?'' என்ருள் மாமியார்.

"ஆமாம், அதுகள் படித்துத்தான் வாரிக் கொட்டப் போறதுகள்! இன்னம் ஒரு மாஸம் கழித்துத்தான் படிக்கட்டுமே!'' என்ருள் சியாமளா.

மைத்துனனுக்கு கோபம் வந்துவிட்டது. அவன் சியாமளா தன் வீட்டுக்கு வருவதையே விரும்பாதவன்.

"நீதான் இங்கே இருந்து என்னத்தைப் புரட்டப் போகிருய்? குழந்தைகள் படிப்பேர்டு மட்டுமா, உன் அகத்துக்காரர் எதற்கு அநாவசியமாக ஹோட்டலில் சாப்பிடுகிறது? குழந்தை பிறக்கிற சமயங்களில்தான் தீராது, இருந்தாக வேண்டும். இப்போ என்ன? என்று கடுமையாகச் சொன்ஞன்.

"உன் சாப்பாட்டை சாப்பிட உட்காருகிருளே என்று வயிறு எரிகிறதாக்கும்? உனக்கு இங்கே இருக்க எப்படி உரிமை இருக்கோ அதுபோல எனக்கும் உண்டு. அம்மா இருக்கிறவரையில் இதே வீட்டில் எனக்குப்பாத்யதை உண்டு. நான் வருவேன். இருப்பேன், போவேன். இதையெல்லாம் ஒருத்தரும் கேட்கமுடியாது'' என்று ஆத்திரத்துடன் ஓங்கிப் பேசிஞள்.

வார்த்தைகள் மேலும் தடிப்பதை தாயாரோ, ராஜாமணியோ விரும்பவில்லை.

"பேசாமல் இருடா ராமு உனக்கேன் பாடு'' என்று தாயார் மகனை கண்டித்துவிட்டு மகளிடம்,

"சியாமளா! இப்போ நீ இங்கிருந்து என்ன ஆக வேண்டும்? பேசாமல் அவருடன் கூடப்போ'' என்று கூறிஞள்.

ராஜாமணி மனைவியை இரக்கமாக பார்த்தார். அந்தப் பார்வையில் அவமானத்தின் சாயை நன்கு தெரிந்தது. இருந்தாலும் அவர் வாயைத் திறக்கமுடியுமா? எப்போ பிறர் கையை எதிர்பார்க்க ஆரம்பித்தாரோ அன்றிலிருந்து மான, அவமானமெல்லாவற்றையும் தூரக் கட்டி வைத்துவிட்டார்.

சியாமளாவுக்கோ துக்கம் பொங்கியது.

"எல்லாரும் என்னை விரட்டி அடியுங்கள். நான் ஏழைதானே! நீங்கள் எல்லாம் பணத்திலே புரளுகிறவர்கள். உங்கள் வீட்டில் ஏழை எப்படி இருக்கமுடியும்? நான் தொலைகிறேன். நீங்கள் மனம் குளிர இருங்கள்'' என்று நிஷ்டூரமாக கொட்டிஞள்.

தாயும், மகனும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டனர்.

சியாமளாவும் அன்றிரவே கணவனுடன் கிளம்பிவிட்டாள்.

"அம்மா! இனிமேல் இந்த வீட்டில் நான் காலடி வைக்கமாட்டேன்'' என்று கூறும்போது துக்கம் தொண்டையை அடைத்தது.

"சீ அசடே ஏதாவது உளருதே. உன்னை யார் வர வேண்டாமென்ருர்கள். நான் இருக்கிறவரையில் நீ எப்பவும் வரலாம்'' என்று தாய் சமாதானப்படுத்திஞள்.

"ஊஹூம்! அந்த பேச்சுக்கே இனிமேல் இடமில்லை. நீயே என்னைபோ என்று சொன்னபிறகு நான் ஏன் வருகிறேன்? உனக்கு மகள் என்று ஏதாவது கொஞ்ச நஞ்சம் பிரியம் இருந்தால்கூட நீ கொஞ்சம் பணம் அனுப்பி உதவி செய். அதைத் தவிர நான் எதுவும் எதிர்பார்க்கவில்லை.''





"ஐயோ பணமே! சரி அனுப்புகிறேன். எல்லாம் நான் இருக்கிற வரையில்......"

இதற்குள் வாசலில் வண்டி வரவே, சியாமளா புறப்பட்டு விட்டாள். அம்மாவை ஒரு தடவை நமஸ்காரம் செய்தாள். அப்பொழுது அவள் கண்களில் நீர் பெருகியது. தாயும் அழுது விட்டாள். என்ன இருந்தாலும் ஒரே மகளாயிற்றே! குழந்தைகள் எல்லாம் பாட்டியிடம் சொல்லிக் கொண்டு வண்டியில் ஏறிக்கொண்டனர். ராஜாமணியும் சொல்லிக் கொண்டார். சியாமளாவின் அண்ணாராமுகூட இருந்தான்.

"இனிமேல் இந்த ஏழையின் தொந்திரவு உனக்கு இராது." என்று அவனிடம் கூறியபோது, அவன் அவளை சுட்டுவிடுவது போல் பார்த்தான்!

தாயும் மகளும் சந்தித்தது அது தான் கடைசித்தடவை. அவள் தான் சொன்னபடி அந்த வீட்டுக்குப் பிறகு வரவேயில்லை. அவள் சென்ற மூன்றே மாதத்தில் தாய் இறந்துவிட்டாள். அதற்கு பதினைந்து நாட்களுக்குமுன் சியாமளாவுக்கு ஆயிரம் ரூபாய் பணம் வந்தது. தன் அந்தியகால சேமிப்பை மகளுக்கு அனுப்பி விட்டு தாய் இவ்வுலகத்தைவிட்டு மறைந்தாள்.

தாயாரின் அந்திமக் கிரியைக்குக்கூட அவள் போக முடியவில்லை. அப்போது ராஜாமணி படுத்த படுக்கையாகக் கிடந்தார். தாயாரிடமிருந்துவந்த ஆயிரம் ரூபாயையும் கரைத்துக்கொண்டு தான் ராஜாமணியின் நோய் போயிற்று.

5

உடன் பிறந்தவர்கள் ......நல்ல ஸ்திதியில் இருந்தும் சியாமளா திக்கற்றவளாகத்தான் போனாள். தாயார் இருந்தவரை நடத்திய உரிமைப் போராட்டமெல்லாம் இப்போ செல்லுபடியாகாது என்று அவளுக்கு நன்கு தெரியும். ஆதாலால் தன் சகோதரர்கள் எவரையும் அவள் உதவிக்கு அண்டவில்லை. மூத்த சகோதரன் மட்டும் கேட்காமலே ஏதோ சொற்பமாக பணம் அனுப்பி வந்தான். யானைப் பசிக்கு சோளப்பொரி எந்த மூலை?

ராஜாமணி நோய்வாய்ப்பட்ட பிறகு மிகவும் பலஹீனமடைந்து விட்டார். போஷணை போதாமையால் குன்றிய சக்தியை மீட்க வகையில்லாமல் போய்விட்டது நாளாக நாளாக குடும்பம் நடப்பது வெகு சிரமமாய் போய்விட்டது. கடன் வாங்கக்கூட வகையில்லை.

தாய் இறந்த பிறகு சியாமளாவின் குடித்தனப் பாங்கே மாறி விட்டது. தாராளக்கை சிக்கனக் கையாக மாறியது. அம்மா இருந்தால் எப்படியும் சமயம் என்றால் விட்டுக்கொடுக்கமாட்டாள் என்ற தைரியத்தில் வறுமையிலும் தாராளமாகச் செலவு செய்து வந்தாள். ஆனால் இப்போதோ எல்லாவற்றையும் குறைத்து விட்டாள். எவ்வளவுதான் செட்டுங் கட்டுமாக இருந்தும் அவளால் சமாளிக்க முடியவில்லை.

இத்தனை கஷ்டத்திலும் நகை நட்டுகளை அவள் விற்றதில்லை. இப்போது அந்த கதியும் வந்து விட்டது. ஆம்; மூத்த பெண்ணுக்கு திடீரென்று டைபாயிடு ஜுரம் கண்டுவிட்டது. வைத்தியச் செலவுக்கு எங்கே போவது?

"சியாமளா, இத்தனை நாள் உன் நகைகளுக்கு ஆபத்து வரவில்லை. இப்போ அதற்கும் சனியன் பிடித்துவிட்டது" என்று கூறி ராஜாமணி கண்ணீர் விட்டார்.

"சமயத்துக்கு இல்லாத நகை எதற்கு? எப்படியாவது குழந்தை பிழைத்தால் சரி!" என்று பற்றுதல் இல்லாமல் பேசினாள்.

நகை போனதுதான் மிச்சம். பெண் பிழைக்கவில்லை.

ராஜாமணி பெண்ணை கொளுத்தி விட்டு வரும்போது சியாமளா உள்ளே யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தாள்: "கல்யாணத்தையும் பண்ணிக்கொண்டு போகாமல் இருந்தாளே! இந்த மட்டில் அந்த செலவையாவது மிச்சம் வைத்தாள்!"

இரண்டு வருஷங்கள் கழிந்தன. ராஜாமணியின் குடும்பத்தில் இப்போது மிஞ்சியவர்கள் மூன்றே பேர்தான். மூத்த பெண்ணை பின்பற்றி அதே டைபாயிடு ஜுரத்தினால் நாலு குழந்தைகள் ஒன்றின்

பின் ஒன்ருக மறைந்து விட்டன. துக்கப்பட்டுபட்டு சியாமளாவின் மனம் வைரம் பாய்ந்து விட்டது. ராஜாமணியோ சித்தப் பிரமை பிடித்தவர்போல் இருந்தார். அவர் ஒரு வருடனும் பேசுவதில்லை. பள்ளிக்கூடத்திலும் அவரை யாரும் எதுவும் சொல்வதில்லை.

சியாமளா தனது சகோதரர்களுக்கு, குடும்ப நிலையைப் பற்றியோ, குழந்தைகள் இறந்ததைப் பற்றியோ ஒரு வரிகூட எழுதியதில்லை. கடைசி சகோதரன் ராமுவும் தாயார் இறந்த பிறகு வடக்கே போய்விட்டபடியால், அவளுக்குப் பக்கத்தில் எவரும் இல்லை.

* * * *

ஒரு நாள் காலை மூத்த சகோதரன் திடீரென்று வந்து சேர்ந்தான். அவன்தான் சியாமளாவிடம் கொஞ்சம் வாஞ்சை உடையவன். உத்தியோக சிக்கல்கள் ஜாஸ்தி. அதனுல் அவன் லீவே எடுக்க முடிவதில்லை. அவனுக்கு சகோதரியின் உண்மை நிலை தெரியாது. மற்ற சகோதரர்கள் சொல்வதை நம்பிக் கொண்டு பேசாமல் இருந்து விட்டான்.

தாயார் இறப்பதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன்னுல் சகோதரியைப் பார்த்தவன் இப்போது தான் மறுபடியும் பார்க்க வந்திருக்கிருன்.

சியாமளாவின் வறுமைக் கோலத்தையும், அவள் அழகு குன்றி, உடம்பு மெலிந்து துரும்பாக போயிருப்பதையும் பார்க்கப் பார்க்க அவனுல் தாங்க முடியவில்லை.

சியாமளா, என்ன கோலமிது. உன்னுடைய கஷ்டங்களை எனக்கு எழுதக்கூடாதா? அதற்குக்கூட உரிமையில்லையா?'' என்றுமனம் கசிந்து கேட்டான்.

"ஏழைக்கு வாழ்க்கைப்பட்டவளுக்கு உரிமை ஏது? என்னுடைய உரிமையெல்லாம் அம்மாவோடு போய்விட்டது! அவள் இருக்கிறவரைதான் பிடுங்கிக் கொண்டிருந்தேன். அதற்கப்புறம் யாரிடம் கேட்பது. நீங்களெல்லாம் பெரிய அந்தஸ்துடையவர்கள். உங்களுக்கெல்லாம் ஏழை சகோதரியைப்பற்றி என்னகவலை? அவள் இருக்கிருளா போய்விட்டாளா என்று கேட்கக்கூட உங்களால் முடியவில்லை. ஏதோ ஜீவனும்சம் அனுப்புவதுபோல் நீயாவது கொஞ்சம் பணம் அனுப்பிக்கொண்டிருந்தாய். மற்றவர்கள் எனக்கு ஸ்நானம் செய்துவிட்டார்கள்.''

"சியாமளா, நீ ஏன் இப்படிப் பேசுகிருய்? நீ என்ருவது ஒரு வரி எனக்கு எழுதியதுண்டா? உன் நிலைமை எனக்குத் தெரியாமல் எப்படி நான் உதவி செய்ய முடியும்?''

"அம்மா இருக்கிறபோதே உனக்கு என் நிலைமையை படித்துப் படித்து எழுதியாய்விட்டது. அதற்கு நீ என்ன மதிப்பு வைத்தாய்? அம்மா வார்த்தைகளையே காதில் போட்டுக்கொள்ளாதவன், நான் சொல்வதைத்தானு கேட்டுவிடப்போகிருய்? போனதைப் பற்றி என்ன ? இவ்வளவு நாள் கழித்தாவது வந்தாயே. அதுவே போதும்!''

"எங்கே உன் குழந்தைகள்?''

சியாமளா அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு வறண்ட குரலில் சொன்னுள்: "அம்மா, அப்பா படும் கஷ்டத்தைப் பார்த்து, அவர்களை இன்னும் சிரமப்படுத்துவானே என்று போய்விட்டன. வம்சம் விளங்க ஒருத்தன் இருக்கான்.''

"அடி பாவி! ஐந்து குழந்தைகளுமா போய் விட்டன. ஐந்தையுமா கொன்று விட்டாய்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

"நான் கொல்லவில்லை. ஈவு இரக்கமற்ற சகோதரர்கள் நான்கு பேர் இருக்கிறீர்களே, நீங்கள்தான் கொன்றீர்கள். உடன் பிறந்தவளை கஷ்டப்படவிட்டு நீங்கள் சுகமாய் வாழ வேண்டுமென்று நினைத்தீர்களே. அந்த நினைப்பே என் குழந்தைகளை பொசுக்கி விட்டது. அவைகள் போனவரையில் நல்லது. இருந்தால் ஒரு வேளை மானம் கெட்டு உங்களிடம் உதவிக்கு வந்தாலும் வந்திருப்பேன்.''

சியாமளாவின் ஒவ்வொரு சொல்லும் சகோதரனை துளைத்தன. குற்றம் யார்மேல் என்று அவனுல் கூற முடியவில்லை.

"போனதெல்லாம் போகட்டும். இனிமேல் கஷ்டப்படவேண்டாம். என்னுடன் வந்துவிடுங்கள். மாப்பிள்ளை உத்தியோகம் பார்த்தது போதும்.''

"இனிமேல் எதற்காக நாங்கள் வரவேண்டும்? வேண்டவே வேண்டாம். என்னுல் ஒருத்தருக்கும் ஒரு கஷ்டமும் வரவேண்டாம். நீங்கள் எல்லாரும் சௌக்கியமாக இருந்தால் அதுவே எனக்குப்பரம திருப்தி. இந்த மட்டில் வந்து பார்த்தாயே, சந்தோஷம்.''

"சியாமளா, வீணுகப் பிடிவாதம் பிடிக்காதே. பட்ட துன்பம் போதும். என்னுடன் வந்து விடு'' என்று மன்ருடினுன்.

சியாமளா கொஞ்சங்கூட பிடி கொடுக்கவில்லை.

ராஜாமணியைக் கேட்டுப் பார்த்தான்.

"உன் தங்கைக்கே இஷ்டமில்லாதபோது நான் என்ன சொல்லக் கிடக்கு?'' என்று கூறி விட்டார்.

"நீங்கள்தான் வரமாட்டேன் என்கிறீர்கள். குழந்தையையாவது அனுப்புங்களேன்'' என்று கேட்டான்.

"அவனை அனுப்புகிறேன். ஆனுல் இப்போது இல்லை........''

"பின் எப்போது?''

"இரண்டு வருஷத்தில்......''

"அது என்ன கணக்கு?''

அவள் கண்களில் திடீரென்று ஒருவித பிரகாசம் தோன்றியது.

"இரண்டு வருஷத்தில் நாங்களும் போய்விடுவோம்...பிறகு...''

"சியாமளா!'' என்று அவன் கத்தினுன்.

அதைத் தொடர்ந்து அந்த வீட்டில் ஒரு பயங்கர அமைதி நிலவியது.

---★---



15

பெருச்சாளி பிடித்தலும், காக்காய் பிடித்தலும்

(ஒரு புது வருஷ ஸங்கல்பம்)

★

'தை மாதப் பிறப்பை எதிர் நோக்கி வீடுகளை வெள்ளை அடித்தார்கள். ஒட்டடை அடித்துச் சுத்தம் செய்தார்கள். ஆனால் உள்ளத்தைச் சுத்தம் செய்துகொண்டார்களா? என்ன பண்டிகை வேண்டியிருக்கிறது, பண்டிகை கழிந்து பதினைந்து நாளும் ஆகிவிட்டது. கிடைத்த பலன்தான் என்ன? கள்ளக்கடை வியாபாரம் நடந்துகொண்டுதான், வருகிறது வழக்கம் போலே, ஜோராக. ஆண்டாண்டுதோறும் சூரியனைத் தொழுது பொங்கல் இடுகிறார்கள்; உள்ளத்திலே ஒரு வெளிச்சமும் காணோம் — ஒரே இருட்டு!' என்று முணு முணுத்தாள் கமலா.

முகம் திருந்தி அகமும் திருந்தவே

ஸரோஜாவோ கலகலெனச் சிரித்து, 'ஏன் இவள், வீட்டில் பால் பொங்கியும், உள்ளம் பொங்காமல் இப்படி அவஸ்தைப்படுகிறாள்?' என்று என்னை நோக்கிக் கேட்டாள்.

நான்தானா அவஸ்தைப்படுகிறேன்? கொள்ளை லாபம் அடிப்பவர் தவிர எல்லாரும் அவஸ்தைப்படுகிறார்கள்' என்றாள் கமலா.

நான் சொன்னேன்: 'பொங்கலில் புறப் பொங்கலும் உண்டு, அகப்பொங்கலும் உண்டு. இரண்டும் அவசியமானவை. உள்ளம் பொங்காமல் பால் பொங்குவதால் மட்டும் ஒரு பயனும் இல்லை. நம் இதயத்தின் ஆழத்திலே பாலைப் பொங்கவிட்டுச் சூரிய பூஜை கொண்டாடுவதுதான் உண்மையான பொங்கல்விழா. இது நம் தமிழ் மக்களுக்குச் சிறப்பாக உரிய திருநாள். இதைத் 'தமிழ்த் திருநாள்' என்றும், 'தமிழர் திருநாள்' என்றும் கொண்டாடுகிறார்கள் இந்நாளிலே. மிகவும் நல்லது. ஆனால் சிலர் இத்தகைய கொண்டாட்டங்களிலும் அநாவசியமும் அன்புக் குறைவுமான வார்த்தைகளைப் பேசிவிடுகிறார்கள். மகிழ்ச்சி பொங்குவதற்குப் பதில் சில உள்ளங்களில் குரோதமும் விரோதமும் பொங்குகின்றன; அதிருப்தி பொங்குகிறது. இப்போது நமது கமலாதான் இப்படியெல்லாம் ஏன் குறைப்பட்டுக்கொள்ள வேணும்? இதனால் கள்ளக்கடை ஒழிந்துபோகுமா? தெரிந்தால் பிடித்துக்கொடுக்க வேண்டியதுதான். சும்மா சும்மா வருத்தப்படுவதால் என்ன பயன்? குறை கூறுவதால் பயன் என்ன?

இது கேட்ட கமலா, 'நான் மற்றவர்களைமட்டுமா குறை சொல்லுகிறேன்? என் குறையையும் சேர்த்துத்தான் கண்டனம் செய்கிறேன். நாடு இன்று இருக்கும் நிலையில் நாம் வருத்தப்படாமல் இருக்கமுடியுமா?' என்றாள்.

வருத்தம் எதற்கு? கண்டனம் எதற்கு? கண்டனத்தால் கண்ட பலன் எல்லாம் நெற்றி சுருங்குவதும், முகம் ஒளி குன்றி அழகு குன்றுவதும்தான்!' என்றேன். நான் சொன்னதைக் கமலா அவ்வளவாக ரஸிக்கவில்லை.

'ஆமாம், அப்படிக் கொஞ்சம் கோரமாகத்தான் இருந்தது கமலாவின் கமல முகம், வந்ததும் முணுமுணுக்கத் தொடங்கினாளே அப்போது!' என்றாள் ஸரோஜாவும்.

'சும்மா சொல்லுகிறாய்: அப்படி ஒன்றும் இல்லை: எனக்குள்ள லட்சணம் எப்போதும்தான் எனக்கு இருக்கிறது. முகம் முகமாகத்தான் இருக்கும்,—அது எப்படி இல்லாத மலர்ச்சியைப் பெற்றுவிடும்? தாமரைதான் தாமரைபோல் மலரமுடியும். பெயர் கமலம் என்றிருந்தால் முகமும் கமலமாகிவிடுமா?' என்றாள் கமலா சிறிது கோபத்துடன்.

'இப்போது உன்கோபமுகத்தை நீயே கண்ணாடியில் கண்டுகொள். நீயே உன் முகத்தைக் கண்டு பயப்படுவாய்!' என்று ஸரோஜா சொல்லிக்கொண்டே ஒரு கண்ணாடியைக் கமலாவின் முகத்திற்கு எதிரே காட்டினாள்,

கமலா என்ன நினைத்தாளோ? மேலும் கோபித்துக்கொள்வாளோ என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே ஸரோஜாவின் விகடச் செய்கையால் கமலாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

'அதுதான் சரி; இப்போதுமுகம் தனக்கு உரிய மலர்ச்சியைப் பெற்றுவிட்டது, லட்சணத்தையும் பெற்றுவிட்டது பார். இனி நான் உள்ளதைச் சொல்லும்போது அல்லது உள்ளது காட்டும்போது

இப்படியே மகிழ்ந்து போக வேணும்' என்றாள் ஸரோஜா.

'மறுபடியும் கமலாவுக்கு ஒரு வேளை கோபம் வந்துவிடலாகாதே' என்ற எண்ணத்துடன் நான் சம்பாஷணையைப் பொதுவான வழியில் திருப்பிவிட விரும்பினேன். 'பொங்கல் விழாவில் மனப்பொங்கல்தான் முக்கியம். அதாவது முணுமுணுப்பில்லாமல், பலனைக் குறித்த கவலையில்லாமல், அகமகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் நம்முடைய கடமைகளைச் செய்வதாக உறுதிகொண்டு உத்ஸாகமாய் இருக்க வேண்டும். மற்றவர்களைத் திருத்துவது என்ற கொள்கையைச் சிறிது தளரவிட்டு, முதலில் நாம்தான் முகம் திருந்தி அகமும் திருந்திப் பார்க்கலாமே என்று உத்ஸாகமாய் எண்ணமிடவேண்டும்' என்றேன்.

அரசியல் வாதியும் கள்ளக்கடை வியாபாரியும்

என்னுடைய விருப்பம் நிறைவேறியது. கமலாவும் சிறிதும் பிணக்கமின்றி எங்களுடன் சம்பாஷணையில் கலந்துகொண்டாள்; உத்ஸாகமாகவே கலந்துகொண்டாள். 'உலகத்தைத் திருத்துவது தானே அரசியல் வாதிகளின் வேலை? அந்த வேலை முழுமையும் நாம் அவர்களையே நம்பி அவர்களுக்கே விட்டுவிடலாமென்கிறாய். நம்மைத் திருத்திக்கொள்வது தவிர வேறு வேலையே வேண்டாம் என்கிறாய். அரசியல்வாதிகளே கள்ளமார்க்கெட்காரர்களையும் திருத்திவிடுவார்கள் என்கிறாயா?' என்று கேட்டாள் கமலா உத்ஸாகமாகவே.

'சமீபத்தில் ஸர். ஸி. வி. ராமன் செய்த பிரசங்கத்தை நீ பார்க்கவில்லையா?' என்று கேட்டாள் ஸரோஜா, கமலாவை நோக்கி.

'பிரசங்கத்தைப் பார்க்கிறதா? அது எப்படியோ? கள்ளமார்க்கெட்டையே பார்க்க முடியவில்லையே!'

ஸர். ஸி. வி. ராமனின் பிரசங்கத்திற்கு நீ போகவில்லையென்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அதைப் பத்திரிகையில் பார்த்தாயா என்றேன். நீயோ அதை வைத்துக்கொண்டே ஒரு ஹாஸ்யம் செய்யப் பார்க்கிறாய்' என்றாள் ஸரோஜா.

'சரி; அரசியல் வாதியைக் குறித்து நமது விஞ்ஞானி ஏதாவது பேசியிருக்கிறாரோ ?

'தாராளமாய்ப் பேசியிருக்கிறார், அரசியல்வாதி என்பவர் தம்மைத் தவிர மற்றவர்களையெல்லாம் சீர் திருத்துவதில் நம்பிக்கையுள்ளவர் என்கிறார் ஸர். ஸி. வி. ராமன்' என்றாள் ஸரோஜா.

' கள்ளமார்க்கெட்டுக்காரர்களையும் அரசியல் வாதி திருத்திவிடுவாரோ?' என்று கேட்டாள் கமலா.

'நாமே திருத்திவிடலாம் என்று எண்ணித்தான் ஒரு வேளை கள்ளக்கடை வியாபாரிகளை அரசியல்வாதிகள் காட்டிக் கொடுப்பதில்லையோ, என்னவோ?' என்றாள் ஸரோஜா.

'நீங்கள் சொல்வதைக் கேட்டால், கள்ளக்கடைப் பெருச்சாளிகளை அரசியல் வாதிகள் அறிந்திருக்கிறார்கள் என்றல்லவா ஏற்படுகிறது? வீணான அபவாதம் இது. இந்தமாதிரி அநாவசியமாக அபவாதம் பேசுவதும் சரியன்று' என்றேன் நான்.

அதற்குக் கமலா, 'எல்லா அரசியல்வாதிகளையும் சந்தேகிக்கிறோமா, என்ன? யாரோ சிற்சிலர் கள்ளக்கடை ஆசாமிகளைத் தெரிந்தும் தெரியாதவர்போல் கண்மூடி மௌனிகளாய் இருக்கிறார்களாம். ஊர்வாயை மூட உலைமூடி உண்டா? ஆனால் ஊர்ப் பேச்சு ஊர் வம்பாகவும் இருக்கக் கூடும். நான் என்ன கண்டேன்?' என்றாள்.

"நானும்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இனிமேல் அரசாங்கத்தார் அரசியல் வாதிகளின் விஷயத்தில் கண்டிப்பாக இருக்கப் போகிறார்களாமே. சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்களோ, நிர்வாகப் பதவிகளில் உள்ள காங்கிரஸ்காரர்களோ, ஏற்றுமதி-இறக்குமதி "பெர்மிட்டு"கள், ஜவுளிக்கடை "லைஸென்சு"கள், சர்க்கார் கண்ட்ராக்டுகள் ஆகியவற்றைப் பெற முடியாதாம். தங்கள் பெயருக்கும் பெற முடியாதாம். ஆகவே இது வரையில் நடைபெற்று வந்த வியாபாரக் கோளாறுகள் இனிமேல் அப்படியெல்லாம் நடக்க முடியுமா என்பது சந்தேகம்தான். இனிமேலாவது காங்கிரஸ்-அரசியல் வாதிகள் மீது ஊரார் அபவாதம் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன்' என்றாள் ஸரோஜா.

'அப்படியானால் கள்ள மார்க்கெட்டுப் பெருச்சாளிகளை இனிமேலாவது கூசாமல் பேசாமல் அரசியல் வாதிகள் பிடித்துக் கொடுக்கலாமே' என்றாள் கமலா.

'அரசியல் வாதிகளால் பேசாமல் ஒரு காரியம் செய்ய முடியுமா? சிந்தனை செய்யாமல் இருக்க முடியும்; செயல் செய்யாமலும் இருக்கமுடியும் ; ஆனால் பேச்சுப் பேசாமல்இருக்க முடியுமா? ஒருவனை நோக்கி, "மூச்சு விடாமல் இரு" என்று சொல்வதுபோலத்தான் அரசியல் வாதியை நோக்கிப் "பேச்சுப் பேசாமல் இருக்க வேணும்" என்றுவேண்டிக்கொள்வதும்! கூசாமல் செய்ய முடிந்தாலும் பேசாமல் ஏதாவது செய்ய முடியுமா, தங்களைத் தவிர உலகத்தையெல்லாம் திருத்தப் போகிறவர்களுக்கு?' என்றாள் ஸரோஜா.

நான் சொன்னேன்: 'பொதுவாக அரசியல் வாதிகளைக் குறித்துத்தான் ஸர். ஸி. வி. ராமன் ஹாஸ்யமாகப் பேசினார். நீங்களோ நமது காங்கிரஸ் அரசியல் வாதிகளையே அரசியல் வாதிகள் என்று குறிப்பிட்டுப் பேசுகிறீர்கள். நடக்கிறது காங்கிரஸ் சர்க்கார் : இந்தச் சர்க்காருக்கு உதவுவது காங்கிரஸ்காரர்களின் கடமையென்று சொல்லத் தேவை இல்லை. எனினும் புதிய ராஷ்டிரபதி டாக்டர் பட்டாபி சீதாராமையா, கள்ளமார்க்கெட்டு வியாபாரத்தை ஒழிக்க அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது காங்கிரஸ்காரர்களின் முக்கியமான கடமை யென்பதாகத்தம் விருப்பத்தைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்.'

'ஆகவே, இதுவரையில் காங்கிரஸ் அரசியல் வாதிகள் கள்ள வியாபாரிகளைக் காட்டிக் கொடுத்துத் தண்டனைக்கு உட்படுத்தவேண்டிய தங்கள் கடமையைச் சரியாகச் செய்யவில்லையென்று தானே ஏற்படுகிறது?' என்று கேட்டாள் கமலா.

'இந்தக் கடமை மிகவும் கஷ்டமான வேலை. கள்ளமார்க்கெட்டில் பணம் வெள்ளம்போல வரும்; எனவே தண்ணீரை வாரி இறைப்பதுபோல் அந்தப் பணக்காரர்கள் பணத்தை வாரிஇறைத்து ஆசைகாட்டி ஏமாற்றுவார்கள்: உயர்ந்த நாணயம் உள்ளவர்களையும் அதிக நாணயங்களை ஓசைப்படுத்தித் தங்கள் வழியில்திருப்பிக்கொள்ள முயல்வார்கள். இதையெல்லாம் புதிய ராஷ்டிரபதியே ஒப்புக்கொள்கிருர். ஆகவே ஒழுக்கமும் லட்சியமும் உள்ள காங்கிரஸ்காரர்கள் தளராத ஊக்கத்துடன் கள்ளமார்க்கெட்டுப் பெருச்சாளிகளைப் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்பது டாக்டர் பட்டாபியின் வேண்டுகோள்' என்றேன் நான்.

சமீபத்தில் சென்னையில் ராஷ்டிரபதி பட்டாபி பாடா ரேடியோ உருப்புக்களை ஒன்றுசேர்க்கும் இலாகாவுக்குச் சென்றிருந்தார்.

'ஓஹோ' பெருச்சாளி பிடிப்பது அவ்வளவு கஷ்டமான காரியமா?' என்று கேட்டாள் கமலா.

பெருச்சாளியும் காக்காயும்

சாதாரணப் பெருச்சாளிகளைப் பிடிப்பதே லேசான காரியமல்ல. வீட்டையறுக்கும் பெருச்சாளிகளின் விஷயமே இப்படியென்ருல், நாட்டையறுக்கும் கள்ளமார்க்கெட்டுப் பெருச்சாளிகளின் நிலையை என்னென்பது? இவர்கள் லஞ்ச வலை மட்டுமா விரிக்கிருர்கள்? வேறு வஞ்ச வலைகளும் விரித்துக் காக்காய் பிடிக்கவும் தெரிந்தவர்கள்!' என்ருள் ஸரோஜா.

'பெருச்சாளிகளுக்குக் காக்காய் பிடிக்கவும் தெரியுமோ?' என்று கேட்டாள் கமலா.

'வாழ்க்கையின் முக்கியமான துறைகளில் எல்லாம் கள்ளக்கடை போட்டுக் கொழுக்கத் தெரிந்தவர்களுக்கு லஞ்ச வலை வீசவும் தெரியும்; காக்காய் பிடித்துக் காரிய சித்தி அடையவும் தெரியும். லஞ்ச வலையில் விழாதவர்களும் காக்காய் பிடிக்கிறவர்களுக்கு வசமாகி விடுகிருர்கள். லஞ்ச வலையில் விழாமல் இருப்பதற்கு ஒழுக்கம் வேண்டும். காக்காய் பிடிக்கிறவர்களிடம் பிடிபடாமலிருக்க ஒழுக்கத்தோடு அறிவுத்திறமையும் வேண்டும்' என்றேன் நான்.

'அப்படியானுல், உள்ளத்தைச் சுத்தம் செய்துகொள்வதற்குப் பெருச்சாளி பிடித்துக்கொடுப்பதும், காக்காய் பிடிக்காமல் இருப்பதும் ஆகிய இந்த இரண்டு காரியங்களுமே போதும்போல் இருக்கிறது!' என்ருள் கமலா.

'ஆம்; "பெருச்சாளி, பிடித்துக் கொடுப்போம்; காக்காய் பிடிக்க மாட்டோம்!" என்பதையே இந்தப் புது வருஷ ஸங்கல்பமாகச் செய்துகொள்ளலாம். காங்கிரஸ்காரர்மட்டுமல்ல, நாம் எல்லோரும்தான். அப்படியானுல் உள்ளமும் வெள்ளையடித்ததுபோல் சுத்தமாகும். சூரிய வெளிச்சம் உள்ளத்திற்குள்ளும் வீசுவதுபோல் நாம் ஒளிகண்டு களிகூர்ந்திருப்போம். இந்த வருஷப் பொங்கலின் பலன் கைமேல் கிடைத்துவிடும். இந்த வருஷம் நாம் செய்த சூரிய பூஜையும் வீணுகாது' என்றேன் நான்.

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

12

மரணத்தினும் கொடியது பழி.

★

மரணத்தால் உடல் அழிகிறது. அழிந்தாலும்மூலப் பொருள் அழிவதில்லை. உருவமே அழிகிறது. அதை மூலப் பொருளுக்கு ஏற்படும் மாறுதல் அல்லது விகாரம் என்றே கொள்ள வேண்டும். அநாதியான மூலப்பொருள் எப்பொழுதும் இல்லாமல் போவதில்லை. என்று கண்ணன் உலக இயல்பிலிருந்து உதாரணங்கள் காட்டி உபதேசித்தார் அல்லவா? அதை அர்ஜுனன் சிந்திக்கவாரம்பித்தான். மனதில் ஒரு முடிவு உண்டாகவில்லை. கலக்கமும் நீங்கவில்லை. சாமானியரால் உணரமுடியாத ஜீவாத்ம தத்துவம்போலவே சரீரங்களுக்குக் காரணமான பிரகிருதி தத்துவமும் அர்ஜுனனுக்குக் கிரகிக்க அரியதாயிருந்தது. ஓரளவு கிரகிக்க முடிந்தாலும் சோகத்தையும் பயத்தையும் விட்டு உடனே கொலைக் கிடமான போரை மேற்கொள்ள முடியவில்லை.

அதையறிந்துகொண்டு கண்ணன் மேலும் கூறுகிருர். அர்ஜுனா! வேதங்களில் கூறிய சாதனங்களைப் பயின்று ஈச்வரன் அருளால் அறிய வேண்டிய ஆத்மா, பிரகிருதி இவைகளின் தத்துவத்தை நீ உடனே தெரிந்து கொள்ளமாட்டாமைக்கு வருந்த வேண்டாம். உள்ளபடி பூரணமாக உணர்ந்தவர் மிக மிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும். ஆத்மாவை ஒருவன் ஆச்சரிய வஸ்துப் போலப் பார்க்கிருன். மற்ருெருவன் ஆத்மாவை அறியாமலே ஆச்சரிய வஸ்துப் போலப் பேசுகிருன். மற்ருெருவன் ஆச்சரிய வஸ்துப்போலக் கேட்கிருன். பார்த்துப் பேசிக் கேட்ட போதிலும் அவர்களில் ஒருவனும் ஆத்மாவை உள்ளபடி அறியவே இல்லை. ஒவ்வொருவரும் தத்துவ விசாரம் செய்து தெளிவுற்ற பின்னரே ஒரு செயலை மேற்கொள்வது என்று கொண்டால் சமூகமே சீர்குலைந்துவிடும், தத்துவ விசாரம் செய்து தெளிவு பெறுவது எல்லோருக்கும் சாத்தியமும் இல்லை. தன் மனம் தெளியவில்லை என்று ஒருவன் செயலை மேற்கொள்ளாது சோம்பியிருத்தலும் கூடாது.

உனது குலத்தையும், அதனுல் உனக்கு ஏற்பட்ட கடமையையும் நீ ஆலோசித்தால் கொலையை எண்ணி யுத்தத்தில் நீ பின் வாங்கமாட்டாய். க்ஷத்திரியனுக்கு யுத்தத்தைக்காட்டிலும் சிறந்த தர்மமில்லை; கடமையுமில்லை: புகழைத் தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. போலீஸ் அதிகாரிகளுக்குக் குற்றவாளிகளைக் கண்டு தண்டனைக்குள்ளாக்குவதைவிடச் சிறந்த கடமை இல்லை. குற்றம் ருஜுவானவனைத் தண்டிப்பதைவிட நீதிபதிக்குச் சிறந்ததொரு கடமையும் இல்லை. யுத்தத்தையோ, தண்டிப்பதையோ பிறர் மேற்கொள்வது ஹிம்ஸையாகும். அதனுல் அது அவர்களுக்குப் பாவச் செயலுமாகும். க்ஷத்திரியனுக்கு யுத்தத்தை மேற்கொள்வதும் நீதிபதிக்கு தண்டனை (பிறருக்கு) விதிப்பதும் தர்மமாகும். கடமையுமாகும். அஹிம்ஸா தர்மத்தை மிக மிகச் சிறந்ததொன்ருக விதிக்கும் வேதம் அக்னிஷ்டோமாதி யாகங்களில் பசு ஹிம்சையை தர்மமாக விதிப்பதுபோல் க்ஷத்திரியனுக்கு யுத்தத்தில் கொலை முதலிய பாதகங்களை தர்மமாகவே விதிக்கும்போது நீ ஏன் பின் வாங்கவேண்டும்? மருந்தே சுவைக்கிடமான சிறந்த உணவுமானுல் எந்த நோயாளி அதை உட்கொள்ளப் பின் வாங்குவான் ?'

தானே வருமிந்தத்
தன்ம சமரத்தை
வானேறும் வாயி லென
மதித்துத்—தேன் ஏறும்
தார்மன்னர், பார்த்தனே!
தாங்கள் சுகமுடனே
சீர்மன்ன ஏறுவர்காண்
சென்று.

(இ-ள்) பார்த்தனே!-அர்ஜுனா!. தானே வரும் இந்த தன்ம சமரத்தை—தானுகவே வந்திருக்கும் இந்தத் தருமப்போரை, வான் ஏறும் வாயில் என மதித்து—சுவர்க்கத்திற்குச் செல்லும் வழி என்று எண்ணி, தேன் ஏறும் தார் மன்னர் தாங்கள்—வண்டு மொய்க்கும் மாலை அணிந்த அரசர்கள், சுகமுடனே—மகிழ்ச்சியோடு, சீர் மன்ன—(தங்கள்) புகழ் நிலை பெற, சென்று ஏறுவர்—(விரும்பிச்) சென்று ஏற்பார், காண்—(இவ்வுண்மையை) நீ அறிந்து கொள்.

3 2
யத்ருச்சயா சோபபந்நம்
3 3
ஸ்வர்கத்வாரம் அபாவ்ருதம்
2 2
ஸுகிந: க்ஷத்ரியா: பார்த
4 3 4 3
லபந்தே யுத்த மீத்ருசம்.

(இ-ள்) பார்த—அர்ஜுன! யத்ருச்சயா—முயற்சியில்லாமல் உபபந்நம்—வந்ததும், அபாவ்ருதம் திறந்திருக்கிறதுமான, ஸ்வர்கத்வாரம்—சுவர்க்க வழியாயிருக்கின்ற, ஈத்ருசம் யுத்தம்—இந்த விதமான போரை, சுகிந:—பாக்யவான்களான, க்ஷத்ரியா:—க்ஷத்திரியர்கள், லபந்தே—அடைகிருர்கள்.

அல்பமான பலனைப் பெறத் தேவதைகளின் பிரீதிக்கிடமான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அதன் பொருட்டு எவ்வளவோ திரவியமும் சாமான்களும் திரட்டவேண்டும். செயலாற்றும்பொழுது தவறுகள் நேராதிருக்க எவ்வளவோ முயற்சிகள் செய்யவேண்டும். அல்ப பலன்களுக்கு எத்தனை முயற்சிகள்! 'இதற்கு மேலான பலன் எதுவும் இல்லை' என்னும்படியான முக்தி அல்லது பேரின்பம் அதை எய்துவிக்க க்ஷத்திரியனுக்குச் சாதனமாயிருக்கின்ற யுத்தம் சுயதர்மமாயிருப்பதாலும் கும்பிடப் போக வேண்டிய தெய்வம் தேடி வந்தது போல் மோக்ஷசாதனமான யுத்தம் தானே வந்திருப்பதாலும், மன்னர் 'சுகமுடனே ஏறுவர்' என்றார் பந்தத்திற்கிடமான சம்சாரத்தினும் முக்தி நிலையே உயர்ந்தது. போரில் இறப்பது முக்திக்குச் சாதனம். ஆதலால் போர் மரணம் உயர்ந்த முக்தி நிலையை உயிருக்குக் கொடுக்கும் என்ற உறுதிபற்றி, போரில் மாண்டோர் உயர்வர் என்பது தோன்ற 'ஏறுவர்' என்றார். மரணத்தால் இம்மையில் புகழ் உண்டாகும் ஆதலால் 'சீர் மன்ன ஏறுவர்' எனப்பட்டது.

மறுமையில் நற்கதியும் வேண்டாம். இம்மையில் புகழும் வேண்டாம். இவ்விரண்டிற்கும் தானே க்ஷத்திரியனுக்குச் சுயதர்மமான இப் போர் சாதனமாயிருக்கிறது. நற்கதி,புகழ் இரண்டையும் வேண்டாதவர் எதற்காக இப் போரை மேற்கொள்ள வேண்டும்? என்று அர்ஜுனன் ஆலோசிக்கக் கண்ணன் 'பாவமும் பழியும் உண்டாகுமே' என்று மேலும் கூறுகிறார்.

நீ இத் தருும சமரத்தை
[நின்று இயலாய்
ஆயில் புகழ் உன் அறம்விட்டுப்-
[போயிற்றால்
பாவந் தனை அடைதி பாரெல்லா
நின்று இசைக்கும்
ஏவம் தனையே எழுந்து.

(இ-ள்) நீ—, இ தருும சமரத்தை-இவ்விதமான தர்மப் போரை நின்று இயலாய் ஆயில்-பின் வாங்காமல் செய்யாவிட்டால் உன் புகழ் அறம் விட்டுப் போயிற்று-உனது கீர்த்தியும் தர்ம பலனும் அழிந்து போகும், பாவம் தனை அடைதி-பாவத்தை அடைவாய், பார் எல்லாம்-உலகினர் எல்லாரும், ஏவம் தனையே எழுந்து நின்று இசைக்கும்-பழியையே குதூகலத்துடன் இடைவிடாமல் பேசுவார்கள். (ஆல்-அசை.)

2 4
அத சேத்வம் தர்ம்ய மிமம்
3
ஸங்க்ராமம் நகரிஷ்யஸி
4
ததஸ்ஸ்வதர்மம் கீர்(த்)திஞ்ச
ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி.

(இ-ள்) அத-இல்லாவிட்டால், த்வம்-நீ, தர்ம்யம்-நியாயமாய்க் கிடைத்த, இமம் ஸங்க்ராமம்-இந்த யுத்தத்தை, நகரிஷ்யஸி-சேத்-செய்யாவிட்டால், தத:-அதனால், ஸ்வதர்மம்-தன் தருமத்தையும், கீர்த்திஞ்ச-புகழையும், ஹித்வா-விட்டு, பாபம்-பாபத்தை, அவாப்ஸ்யஸி-அடையப் போகிறாய்.

'வந்த போரை அரசர் கைவிட்டால் புகழும் புண்ணியமும் அழிந்தே தீரும்' என்ற உறுதி தோன்ற எதிர் காலத்தை 'அறம் விட்டுப் போயிற்று' என்று நிகழ் காலமாகக் கூறினார். வடமொழி மூலச் சுலோகத்தில் 'கீர்த்தி' என்று வந்த சொல் தமிழ்ப் பாடலில் 'புகழ்' என்று கொள்ளப்பட்டது. இச் சொல்லுக்குச் சங்கரர் அருமையாக உரை எழுதியது உற்று நோக்கத்தக்கது. மகாதேவன் ஒரு காலத்தில் வேடனாய் வந்து, அர்ஜுனனோடு போர் தொடுத்தார். பின் வாங்காமல் அர்ஜுனன் போர்செய்து பரமசிவனையும் வியக்கச் செய்து வெற்றி கொண்டான். பரிசாகப் பரம சிவனிடம் அஸ்திரங்களும் பெற்று அன்று முதல் அர்ஜுனன் என்றும் இல்லாத புகழ்கொண்டு விளங்குவதானான். அந்தப் புகழே இங்கு கண்ணனால் சுட்டிக் காட்டப்பட்டதாக உரை எழுதியுள்ளார்.

பிற அரசர்களுக்கும் வீரர்களுக்கும் பெறமுடியாத சிறந்த புகழையும் அர்ஜுனன் தன் ஆசார்யர்களின் மரணத்தை விலக்குவதற்காக, தான் இழக்கத் தயாராயிருந்தான் ஆனால். 'போரைக் கைவிடுவதால் உலகினர் தன்னைப் பழி கூறுவர்' என்று கண்ணன் சொல்லியதன் காரணத்தை அறிந்துகொள்ளமாட்டாமல் தயங்கினான். அதனால் கண்ணன் மேலும் கூறுகிறார்.

கொண்டாட்டு உற்றார்க்குக்
கொடிதுபழி சாம்அதனில்;
கண்டார்கள் அச்சத்தால்
காதமரில்—திண்டாடி
மீண்டாய் எனநினைப்பர்;
மேலாம் வியப்புறு நீ
வேண்டாத நோய்மையுறேல்
மிக்கு.

(இ-ள்) கொண்டாட்டு உற்றார்க்கு—கௌரவிக்கப்பட்டவர்களுக்கு, சாம் அதனில் பழி கொடிது—மரணத்தைவிடப் பழியே கொடியது, கண்டார்கள்—பார்த்தவர்கள், காதமரில் அச்சத்தால் திண்டாடி மீண்டாய் என நினைப்பர்—(அரசர்) விரும்பும் யுத்தத்தில் பயத்தால் கலங்கிப் பின் வாங்கினாய் என்று நினைப்பார்கள், மேலாம் வியப்பு உறு நீ—மிக உயர்ந்த நிலையை அடைய வேண்டிய நீ, மிக்கு வேண்டாத நோய்மை உறேல்—முழுதும் விரும்பத்தகாத பழியை அடையாதே.

4
ஸம்பாவிதஸ்யசாகீர்(த்)தி:
மரணாத் அதிரிச்யதே.

(இ-ள்) ஸம்பாவிதஸ்யச—(எல்லா) கௌரவங்களும் கிடைத்திருக்கிற ஒருவனுக்கு, அகீர்(த்)தி:—பழியானது, மரணாத்—மரணத்தைக் காட்டிலும், அதிரிச்யதே—அதிகக் கொடியது.

ஆசார்யர், பாட்டன்மார் முதலியோரிடம் அர்ஜுனனுக்கு அளவு கடந்த பக்தி இருந்தது. அவர்களைக் கொலை செய்யாதிருக்கும் பொருட்டு மறுமையில் சுவர்க்கத்தையும் இம்மையில் புகழையும் இழக்கத் துணிந்து போரைக் கைவிடலாம். கைவிட்டால் உலகினர் அத்தகைய மனப்பண்பை அறிந்துகொள்வார்களா? வசை கூறக் காத்துக்கொண்டிருக்கும் பகைவர்களும் மஹாரதர்களுமான கர்ணன் துரியோதனதியர் 'அர்ஜுனன் போர் செய்ய வந்தும் பயத்தால் புறங்காட்டி ஓடினன்,' என்று உடனே தூற்றவாரம்பிப்பார்கள். புகழும் கௌரவமுமே துணையாக வாழ்ந்தவர்களுக்கு இத்தகைய பழி மரணத்தினும் கொடிதாயிருக்கும். இருந்து பழி ஏற்பதைவிட இறப்பது நல்லது. ஆதலால் போரைச் செய் என்பது உபதேசம்.

நாமொன்று நினைக்க——!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ. பிஎல்.

"சரிதான்! இப்போது புரிகிறது ஆசாரி ஏன் எங்களைக் கண்டதும் கொல்லை வழியே கம்பி நீட்டப் பார்த்தார் என்பது! உன் பெயர் என்ன ஐயா!''

"கதிர்வேல் ஆசாரி''

"நீர் இருப்பது?''

"இந்தத் தெருதான்''

"அழகிரிசாமிக்கு ரொம்ப வேண்டியவர்போலிருக்கிறது?''

"அவங்க வீட்டிற்கு நகை செய்வது, நகை இனங்கள் நல்லதாய் வந்தால் வாங்கிக் கொடுப்பது, ஏதாவது மாற்றக்கூடியது இருந்தால் அதை விற்றுக் கொடுப்பது—எல்லாம் என் பொறுப்பு''

"ஓஹோ! புரிந்துகொண்டேன், இந்த இனத்தை விற்றுக் கொடுக்கும் பொறுப்பைச் சமீபத்தில் ஏற்றுக்கொண்டீராக்கும்?''

ஆசாரி பதில் கூறாமல் அழகிரியை நோக்கினான்.

"அவரை ஏன் பார்க்கிறீர்? அவர் உமக்குச் செய்ய வேண்டிய சிபார்சைச் சற்று முன்னதாகவே செய்துவிட்டார். உம்மைப் பரிசோதனை போடக்கூடாதென்று அவர் ஆத்திரத்துடன் குறுக்கிட்ட போதே சாமான் உம்மிடம்தான் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். சரி நான் கேட்டதற்குப் பதில் சொல்லும்—ஏய் 460!''

734-ம், 460-ம், ஆசாரிக்கு இரண்டு பக்கங்களிலும் பிராக்கெட்டு போட்டதுபோல் நின்று கொண்டார்கள்.

ஆசாரி மருண்டார்.

அழகிரி ஆத்திரத்துடன் பேசலானான்—"இன்ஸ்பெக்டர் ஸார்! உலகத்தில் வைரப் பித்தான்கள் எவ்வளவோ! பத்தரிடம் வெவ்வேறு இனங்கள் வந்துகொண்டிருக்கும். உங்கள் கேஸுக்கும் இந்தப் பித்தான்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை.''

"அதைத்தான் பத்தர் சொல்லட்டுமே! நீர் சொல்லிக் கொடுத்தாலும் அவர் சொல்லமாட்டேன் என்கிறாரே!''

ராமநாதன் பேசினான்—"என் பித்தான் ஸெட்டில் ஒவ்வொரு இனத்திலும் பின்னே வி. ஆர் என்று என் பெயர் வரையப்பட்டிருக்கும். அந்த அடையாளத்தைப் பாருங்கள்.''

இன்ஸ்பெக்டர் அந்த ஸெட்டில் ஒவ்வொரு இனமாகப் புரட்டிப் பார்த்து மேற்படி இனிஷியல்கள் இருப்பதை அழகிரியிடம் காண்பித்தார்.

பொரியின் விசை அசைக்கப்பட்டு படீரென்று கதவு மூடிக் கொள்ளும்போது உள்ளே மாட்டிக்கொண்ட எலி அடையும் திகில் போல் ஒரு திகில் அழகிரியைப் பற்றிக் கொண்டது. அவன் கதிர்வேல் ஆசாரியைக் கண்ணால் துளைத்து விடுபவன்போல் பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் பேசினார்—"ஓய்! உம் பார்வையினால் அவரைப் பயமுறுத்தாதேயும். அவர் பொய் சொல்ல அஞ்சுபவர்போல் தெரிகிறது.''

"ஏன் சொல்லட்டுமே நிஜத்தை! என்னிடமிருந்தா இந்த சாமான்களை அவர் வாங்கிக் கொண்டார்?'' என்றான் அழகிரி படபடப்புடன்.

"சொல்லும் ஐயா! பத்தரே! நிஜத்தைச் சொல்லலாமென்று முதலாளி அனுமதிக்கிறார். நீர் ஏன் தயங்குகிறீர்?''

பத்தர் மிரள மிரள விழித்துக்கொண்டு மௌனம் சாதிக்கிறார்.

"என்னிடமிருந்து இந்த சாமான்களைப் பெற்றிருந்தால் இவ்வளவு நீங்கள் விரட்டுவதற்கு பதில் சொல்லாமலிருப்பாரா அவர்?'' என்றான் அழகிரி.

"ஓய்! என்னங்காணும்! பொழுது போக்குகிறீர்? திருட்டுசொத்து உம்மிடமிருக்கிறது. அதற்குச் சொல்ல வேண்டியவர் நீர். யார் உம்மிடம் இதைக்கொடுத்தது? அல்லது நீரே திருடினீரா? பதில் சொல்லும் நாழியாகிறது'' என்று இன்ஸ்பெக்டர் கோபித்துக்கொண்டார்.

"என் தொழில் திருடுகிற தொழிலல்ல என்றான் ஆசாரி''

"அப்படியானால் திருட்டுச்சொத்துக்களை வாங்கிக்கொள்வதும் விற்றுக்கொடுப்பதும் உம் தொழிலா?''

"நகைகளை வாங்கிக் கொடுப்பதும் விற்றுக்கொடுப்பதும்தான் என் தொழில். அவை திருட்டுச் சொத்துக்கள் என்று என்னால் எப்படிக்கண்டு பிடிக்கமுடியும்

அழகிரிசாமி ஐயாவைப்போல் ஒரு கண்யமான பிரபு ஒரு சாமானை என்னிடம் கொடுத்தால் அது திருட்டுச் சொத்து என்று நான் சந்தேகப்பட முடியுமா?''

"அப்படியானல். உமக்கு விஷயம் தெரியாமல் நீர் இந்த இனங்களை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டதாகச் சொல்லுகிறீரா?''

"அவுங்க அப்படித் திருட்டுச் சொத்தை என்னிடம் கொண்டு வருகிறவங்களும் இல்லீங்க.நானும் அப்படி சந்தேகப்பட்ட இனத்தை வாங்கக்கூடியவனும் இல்லீங்க''

உம் தொழில் நாணயத்தைப் பற்றி இப்போது ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை ஐயா! இந்தக் கேஸ் சம்பந்தப்பட்ட வரையில் கேட்கிறேன். அழகிரிசாமி பெரிய மனுஷனாச்சே! அவர் எவ்வளவோ ஆயிரம், பதினாயிரம் பொறும்படியான நகைகளை வாங்குகிறவராச்சே! இதை அற்ப இனத்தை எங்கே திருடியிருக்கப் போகிறார், என்று நம்பி இதை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு விட்டீர். அப்படித்தானே! இந்தத் திருட்டுச் சொத்து உம் கைக்கு வந்தது அழகிரிசாமி மூலமாய்த் தான் அல்லவா? இதற்கு நேரிடையான பதில் சொல்லும். குட்டை குழப்பாதேயும்—''

ஆசாரி தலைகுனிந்து அழகிரியைக் கடைக்கண்ணால்பார்க்கிறார்.

"ஓய் ஆசாரி! அவர் தலைகுனிய வேண்டியகாலம் வந்து விட்டது. நீர் தைரியமாய்ச் சொல்லும். எப்போது உம்மிடம் இந்தஇனங்களை அவர் கொடுத்தார்? என்ன செய்யச் சொல்லிக்கொடுத்தார்! விவரமாய்ச் சொல்லும் இவ்வளவு தூரம் வெளியிட்ட பிறகு ஒளிப்பதில் பயனில்லை ஹூம். நேரமாகிறது...''

ஆசாரி மறுபடி மென்றுவிழுங்கினாரே ஒழிய வாய்திறந்து பேசவில்லை.

"ஓய்! ஆசாரி; வெகுநாள் சினேகமும் தாக்ஷிண்யமும் உள்ள ஒருவரைக் காட்டிக்கொடுக்கவாவது என்று நீர் யோசிப்பது சகஜம்தான். ஆனால், பாரும்! அந்த நண்பர் உம்மை ஒரு சங்கடத்தில் மாட்டிவைக்கத் தயங்கவில்லையே! இப்போது இந்தத்திருட்டுச் சொத்துக்கு ஜவாப்பு நீர் அல்லவா சொல்லியாகவேண்டும். அல்லது பழைய கதைப் புஸ்தகங்களில் நாம் வாசித்திருப்பதுபோல் திருட்டுக்குற்றத்தை நீரே ஏற்றுக்கொண்டு நண்பரைக் காப்பாற்றுவதானாலும் காப்பாற்றும்—''

அழகிரி பேசினன்—"இன்ஸ்பெக்டர் ஸார்—'' நீங்கள் அவர் பேரில் திணிக்கும் சாட்சியத்தை அவர் ஏற்றுக்கொள்ள மனம் துணியவில்லை என்பது ருஜுவாக வில்லையா? இன்னும் ஏன் சிரமப் படுகிறீர்கள்?''

இன்ஸ்பெக்டர் கண் சிவந்தது. மீசை துடித்தது–"உமக்கல்லவா பயப்படுகிறார்—இவர் — நெஞ்சில் இருப்பதை வெளியில் சொல்ல முடியாமல்—நீர் அப்படி அவரை மிரட்டி வைத்திருக்கிறீர் போலும். இப்போது என்ன ருஜுவாகிறது பாரும். ஏய் 734! அடேய் 460!—''

மேற்படி இரண்டு போலீஸ்காரர்களும் கதிர்வேல் ஆசாரியை பக்கத்து ரூமுக்கு இழுத்துச் சென்றனர்.

அடுத்த நிமிஷம் அங்கிருந்து ஐயா சொல்லிவிடுகிறேன். ஐயா! சொல்லிவிடுகிறேன்'' என்ற சத்தம் கிளம்பியது.

பின்னர் 734-ம் 460-ம் உடல் நடுக்கமுற்றுக் கண்ணீர் உதிர்க்கும் கதிர்வேல் ஆசாரியை வெளியே இழுத்து வந்தார்கள்.

"என்ன ஆசாரி. கேட்டவுடன் உண்மையை ஒளிக்காமல் சொல்லிவிட்டால் எவ்வளவு கௌரவமாய் போய்விடும்''

"இல்லீங்க! என்னை அடிக்கச் சொல்லாதிங்க! நான் செத்துப் போய் விடுவேனுங்க! சீக்காய் கிடந்து ஆறுமாசம் ரொம்பக் கஷ்டப்படடேனுங்க! இன்னும் உடம்பு தேறலீங்க!......''

"நல்லது ஆசாரி! உம்மை ஏன் அடிக்கப்போகிறோம்? மேலும், எங்களுக்குப் பிள்ளை பெண்டாட்டி இல்லையா? நாளைக்கு நகை நட்டு வாங்கவேணுமானல் உம்மிடம் தானே வருவோம் நீர்தீர்க்காயுஸ்ஸாயிருக்க வேண்டுமென்றுதான் எங்கள் விருப்பம். இந்தக் கேஸில் ஒழுங்காக சாக்ஷி சொல்லிவிடும். சிரஞ்சீவியாக இரும்——''

"என்ன சொல்லவேணுங்க?''

"இந்தத்திருட்டு சாமானை உம்மிடம் கொடுத்தது யார்?''

"இது திருட்டுச்சாமான்என்றும் மற்றொன்று என்றும் எனக்குத் தெரியாதுங்க, என்னங்க நான் சொல்றது; அழகிரிசாமி அய்யா தான் என்னிடம் காண்பித்தார். அவுங்கவிஷயத்திலே எப்படி நான் சந்தேகப்படுகிறதுங்க?''

"நியாயம்தான் ஆசாரி! எத்தனை நாள் முன் இவைகளை உம்மிடம் காண்பித்தார்?''

"நாலைந்து நாளுக்கு முன் காண்பித்தாருங்க!''

"காண்பித்து என்ன சொன்னார்?''

"இவை எனக்குத் தேவையில்லை நல்ல விலை வந்தால் கொடுத்துவிடலாமென்று உத்தேசம் என்றார்''

"சரி நீர் என்ன சொன்னீர்?''

"அதுக்கு விலை மதிப்புப்போடச் சொன்னாருங்க, நான் மதிப்புப் போட்டேன்''

"எவ்வளவு என்று?''

"ரூபாய் ஆயிரத்துக்கு மதிச்சேனுங்க.''

'அப்படியா சரி, மேலே என்ன நடந்தது?''

"இவைகளை வாங்கி வைத்துக் கொண்டேனுங்க.'' விலை வந்தால் விற்றுத் தருவதாய்ச் சொன்னேன்.''

"ஆனால் விற்கவில்லையோ?''

"நினைத்த மாத்திரத்தில் ஒன்றும் வித்துப்போய் விடாதுங்க, கிராக்கி வந்தால்தானே?''

"கிராக்கி வரவில்லையாக்கும்?"

"ஆமாங்க"

"அதைத்திருப்பிக் கொடுக்கத்தான் இன்று காலையில் வந்திரோ!"

"ஐயா ஊருக்குப் போவதாயும் அந்த இனங்களை எடுத்து வரும்படியும் எனக்கு ஆள் வந்துதுங்க."

"ஐயா என்ன செய்யச்சொன்னுர்?"

"இவைகளின் கற்களைப் பெயர்த்து வேறு இனங்களாகக் கட்டி சீக்கிரத்தில் முடித்து விடும்படி சொன்னுருங்க."

"என்ன வேறு இனம்?"

"மூக்குப்பொட்டு, மோதிரம், கிளாவர், ஏதாவது ஸாத்தியமானதை அதில் உள்ள தங்கத்தைக் கொண்டே செய்து முடித்து வீட்டில் பெண்டுகளிடம் கொடுக்கும்படிக்கும் கூலி அவர்களிடம் வாங்கிக்கொள்ளும்படிக்கும் சொன்னுருங்க."

"எதற்காக இந்த இனங்களை அழித்துவிட்டு வேறு இனங்களாக இவ்வளவு அவசரத்தில் மாற்றிவிடும்படி அவர் உம்மிடம் சொன்னுர்?"

"அது எனக்குத் தெரியாதுங்க. நான் கூலி கொடுத்தால் சொன்னபடி செய்ய வேண்டியவன் தானே! அதற்குமேல் உன் வர்த்தமானத்தை நான் ஏன் விசாரிக்கிறேனுங்க."

"இவைகளில் எழுத்து வெட்டியிருப்பது அவருக்குத் தெரியுமோ?"

"அதை நான் எப்படிச் சொல்ல முடியுங்க."

"நீர் அறிவீர் அல்லவா!"

"தெரியுங்க."

"அதை அறிந்தும் நீர் சந்தேகப் படவில்லையா!"

புதிய தொடர் கதை

"சொப்பன வாழ்க்கை"

('ஆர்வி.')

★

......அந்தப் பெண் மௌனமாக ஜன்னலைப் பார்த்துக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள்.........வயசு இருபதுக்கு ஒன்றிரண்டு குறைவாக இருக்கலாம். சிவந்த மேனி...... பெங்களூரிலிருந்து நாளைக்கே கடிதம் வரும். வரட்டுமே!...... நான் கொஞ்சம் தணிவாகப் போயிருக்கலாமோ? அதை எண்ணி என்ன பிரயோசனம் இனிமேல்......நடந்தது நடந்து விட்டது......சுசீயின் எண்ணக் குவியல்களிலிருந்து ஒரு பகுதி... சிருங்கார ரஸம் தோய்ந்த **"சொப்பன வாழ்க்கை"** தொடர் கதை அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.

"இல்லீங்க. எழுத்துள்ள இனங்கள் சாதாரணமாய் வருகிறது உண்டுங்க."

"பேஷ். ஆசாரி. இதையெல்லாம் முதலிலேயே சொல்லியிருந்தால் உம்மை சிரமப்படுத்த நேரிட்டிருக்காது."

"எல்லாம்என் காலவித்யாஸங்க. நான் இவ்வளவு நாள் இப்படி ஒரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டது கிடையாதுங்க. பச்சைக் குழந்தை கிட்டே ஒடிந்த நகையைக் கொடுத்தனுப்புவாங்க மஹராஜங்க. நிறுத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாங்க. இம்மி அளவு பிசகாமல் நானும் வேலைசெய்து நாணயஸ்தன் என்று பெயர் வாங்கியிருக்கிறேனுங்க. இன்னிக்கு நேத்திக்கு நான் தொழில் பண்ணலீங்க. முப்பது வருஷமாச்சுங்க. நெட்டாலில் பதினைந்து வருஷம் இருந்தேனுங்க" ஆசாரியின் பூர்வசரித்திரங்களைக் காதில் வாங்க இன்ஸ்பெக்டருக்கு அவகாசமில்லை. "மிஸ்டர் அழகிரி! உம்மை அரெஸ்டு செய்திருக்கிறேன்", என்ற வார்த்தைகளை அவர் உறுதியுடன் உச்சரித்தார்.

உடனே இரண்டு கான்ஸ்டேபிள்கள் அழகிரியைக் கைதி செய்தார்கள்.

அழகிரியும்கதிர்வேல் ஆசாரியும் காப்புக்கள் அணிந்துகொண்டு போலீஸ் படை சூழ வெளியே புறப்பட்டார்கள். ஸ்திரீகளின் அழுகைக் குரல் லேசாய் உள்ளேயிருந்து காதில் பட்டது.

பொன்னுசாமி பிள்ளை இன்ஸ்பெக்டரிடம் ஏதோ, பேச நெருங்கினர். இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு வந்து பேசிக்கொள்ளும்" என்று அவரை உதறித் தள்ளி விட்டு முன் சென்றுர்.

தெருவில் வரவேற்புக்கூட்டம் தயாராகவிருந்தது. கைதிகள் தங்கள் ரக்ஷகர்களுடன் தனித்தனியே வண்டிகளில் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டனர்.

இன்ஸ்பெக்டரும் ராமனுதனும் காரில் ஏறிக்கொண்டனர்.

அழகிரி வண்டியில் போய்க் கொண்டிருந்தபோது அவன் சிந்தனைகள் முதல் கட்டத்துக் குழப்பம் சற்று தெளிந்ததும் வர்த்தமானங்களின் உட்புறத்தை ஆராய்ந்து அறியத் திறமையைப் பெற்றன 'கதிர்வேல் ஆசாரி எதிர் கக்ஷிக்குக் கை ஆள் ஆக மாறின மர்மம் என்ன?" காரணம் அழகிரிக்குப் புலப்படாமலில்லை. கதிர்வேல் ஆசாரி, பல இந்தியத் தொழிலாளிகளைப்போல் தென் ஆப்ரிகாவில் நேடாலுக்குப் பணம் சம்பாதிக்கப் போய் பதினைந்து வருஷம் நல்ல வருமானத்துடன் இருந்த பின் திடீரென்று காட்டுத் தீ போல் பற்றிக் கொண்ட ஒரு உள் நாட்டுக்கலகத்தில் வீடுவாசல் சொத்துக்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு உயிர் தப்பினுல் போதும் என்று ஒளி மறைவாய் ஓடி வரும்போது தொழில் முறைமையில் தன் கையில் சிக்கிய சில உயர்ந்த வைரக்கல்களை சாமர்த்தியமாகத் தின்பண்டங்களில் ஒளித்து எடுத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தான். அவன் வந்தது முதல் பல பிரமுகர்களால் உயர்ந்த வேலைக்காரன் என்று மதிக்கப்பட்டு ஆதரவளிக்கப்பட்டு வந்தான். அழகிரிக்கும் ஆசாரிக்கும் கொஞ்ச காலத்தில் நட்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

தொழில் முறையிலும் அழகிரியால் ஆசாரி அடிக்கடி பயனடைந்து வந்தான். ஆசாரிதான் நெடாவிலிருந்து கொண்டுவந்த வைரங்களை அழகிரியிடம் ஒரு சமயம் காண்பித்து நண்பனாய்ப் பழகிய நம்பிக்கையினால் அவைகளின் வரலாற்றையும் வெளியிட்டான். அந்த அரிய ரத்னங்களைப் பார்த்ததும், அவைகளின் மர்மமான வரலாற்றை அறிந்ததும் அழகிரியின் பேராசை அவனுடைய துர்புத்தியை ஏவிவிட ஆரம்பித்தது. அதுமுதல் அழகிரி அவ்வரிய ரத்னங்களை லகுவாக ஆசாரியிடமிருந்து தட்டி அடித்துக்கொண்டுவிடப் பல சூழ்ச்சிகள் செய்யத் துவக்கினான். போலீஸுக்குத் தெரிந்தால் மோசம் வந்துவிடும் என்று ரகசியமாய் ஆசாரியைப்பயமுறுத்தினான். விலைக்கு யாரோ கேட்பதாயும் அவைகளைத் தன்னிடம் கொடுத்து வைத்திருந்தால் தக்க லாபத்திற்கு விற்றுத்தருவதாயும் ஆசை காட்டிப்பார்த்தான். ஆசாரி தான் அவ்வரிய கற்களின் ரகசியத்தை வெளிவிட்டது முட்டாள்தனமென்று தெரிந்துகொண்டு அவைகளை அழகிரியிடம் கொடுக்காமல் சால்ஜாப்புக்கள் சொல்லிக் காலம் கடத்தி வந்தான். அழகிரி அதனால் கோபமடையாமல் ஆசாரியிடம் நாளுக்கு நாள் அதிக நட்பும் அனுதாபமும் காட்டி ஆசாரிக்கு அவ்வப்போது பெரும் செலவுகளுக்குக் கடன் கொடுத்து உதவி வந்தான். ஒரு சமயம் தெய்வாதீனமாய் ஆசாரி ஆறுமாதகாலம் சிக்காய்ப்படுத்தபோது அவனுக்கு வைத்தியம் பார்க்கவும் குடும்பச் செலவுகளை நிர்வகிக்கவும் அழகிரி மிகுந்த சிரத்தையுடன் முன்வந்து பரிபூர்ணமாக சேவை செய்தான். ஆசாரி உடல் நலம் எய்திய பின் அழகிரி தான் செலவு செய்த தொகைகளை ஒன்றுக்கு இரண்டாக பில் போட்டுக் கொடுத்து ஆசாரியிடம் வசூல் செய்ய யத்தனம் செய்தான். அத்துடன் பழய கடன் பத்திரங்களையும் தீர்த்து விடுமாறு ஆசாரியை நிர்ப்பந்திக்கலானான். ஆசாரி பெரிய குடும்பி. உத்சாகமாய்ச் செலவு செய்து பந்துமித்ரர்களுடன் சுகவாழ்க்கை நடத்துபவன். அவனுக்கு எவ்வளவு வருமானமிருந்தாலும் மிச்சம் கிடையாது. இதையெல்லாம் அழகிரி அறிந்தவனாகையால் திடீரென்று ஒரே சமயத்தில் பல பட்டரையான கடன்களை ஒன்று சேர்த்து ஆசாரியைப் பணம் கொடுக்கும்படி நெருக்கிக்கொண்டு வந்தான். ஆசாரியின்பேரில் இரண்டொரு நடவடிக்கைகளையும் தொடர ஆரம்பித்தான். ஆசாரியின் வீட்டிற்குப்பக்கத்து வீட்டுக்காரர்களை ஏவி விட்டு எல்லைப் பொழி, அனுபோகம் முதலிய சில்லரை விவகாரங்களில் மாட்டி வைக்க ஏற்பாடு செய்தான். இப்படியிருந்தும் துர்பலனான, ஏழையான ஆசாரி பொறுமையை மேற்கொண்டு அழகிரியிடம் விரோதத்தை வெளிக்காண்பிக்காமல் படிமானத்துடனும் மரியாதையுடனுமே பழகி வந்தான். அழகிரி, ஆசாரியின் இறுதி நிலைவரை தீவிர முயற்சி எடுத்துக்கொண்டால் நேடால் வைரங்கள் வெளிவந்துதான் ஆகவேண்டுமென்று எதிர்பார்த்திருந்தான். ஆனால் ஆசாரி பல பெரிய மனுஷ்யர்களின் தயவையும் ஆதரவையும் பெற்றவன் என்பதை அழகிரி மறந்துவிட்டான். ஆசாரி தன் கஷ்ட நிலைமையைப்பற்றித்தான் வேலை செய்யும் பெரிய இடங்களில் பிரலபிக்காமலில்லை. நகை செய்யும் தொழிலாளிக்கு எந்த வீட்டிலும் அந்தப்புரத்தில் சலுகை ஏற்படுவது சகஜம். அந்தப்புரத்திற்கு அதிகாரமுறையற்ற ரீதியில் குடும்ப ஆட்சியில் பூராப் பங்கு உண்டு என்பது யாரும் அறிந்த விஷயமே. கதிர்வேல் ஆசாரியின் இழைப்புக் கலையினால் பிரகாசிக்கும் நவரத்னாபரணங்களை ஆவலுடன் அணியும் ஐச்வரியவதிகளில் அட்வொகேட் முகுந்தராஜ அய்யங்காரின் ஆலயத்தரசியும் ஒருத்தி. நேடால் வைரங்கள் அம்மகிளா ரத்னத்தின் ஒவ்வொருஆபரணங்களிலும் சுடர்போல் சோதியுடன் திகழ்ந்தன.

வெங்கிடசுப்பையர் தன் காலேஜ் நண்பனான அட்வோகேட் ஐயங்கார் அவர்களைச் சேம்பரில் கன்ஸல்டு செய்த தினத்தன்று மாலையிலேயே கதிர்வேல் ஆசாரிக்கு அட்வொகேட் அவர்கள் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது.

அழகிரி கதிர்வேல் ஆசாரி கடைசியாகத் தன்னைக் காலை வாரிவிடச் சதி செய்து விட்டான் என்பதை ஊகித்தறிந்தான்.

(தொடரும்)

காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணையில் கலக்கவும்

M.P.& E.ன்
ஸாண்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (கூஷிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதராஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

கதா மோகன ரஞ்சிதம்
3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபாற் செலவு பிரத்யேகம்.
மானேஜர்:-'சுதேசமித்திரன்' புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை.

(மேல்)

சிப்பர் பீல்டு யானைக் குழாத்திலுள்ள 2½-வயதுள்ள குட்டி யானை இது. இதற்கு மாலை வேளை உடுப்புபோட்டு இரவில் நடக்கும் கிளப்புக்கு அழைத்துச்சென்றனர். அங்கு இந்த யானை 'திராட்சை ரஸம்' ருசி பார்க்கிறது!

(கீழ்)

மாலை நேர உடையணிந்த குட்டி யானை, கிளப்புக்குப் போகும்போது 'ஸலாம்' செய்கிறது.



அழகுக்கும்
ஆனந்தத்திற்கும்
உமா
ஆபரணங்களையே
உபயோகியுங்கள்.

•

தங்கத்தகடு சுற்றப்பெற்று செய்யப்பட்டது.

10 வருஷம் உத்திரவாதம்

அளவுக்கு தகுந்த ஆர்டர்கள் செய்யப்படும்

800-வித ஆபரணங்களுக்கு கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

நகைகளுக்கு வி. பி. பி. பார்ஸல் சார்ஜ் 0—15—0 பிரத்யேகம்

•

உமா கோல்டு
கவரிங் ஒர்க்ஸ்
உமா மஹால்,
மசூலிபட்டணம்.
Tel : "UMA"
Masulipatam



ஊர்..........................

தேதி..........................

To
M/s. JOTHI FABRICS,
KOTTAR : TRAVANCORE.

அன்புடையீர்!

தங்கள் சொந்த கைத்தறியில் தயார் செய்து 24 ரூபாய் மதிப்புள்ள கண்ணைக்கவரும் வர்ணங்களில் நல்ல ரகமாகவும் மெல்லிய தரமான 6 கெஜம் பட்டு புடவை தீபாவளி பரிசாக போஸ்டு & பாக்கிங் செலவு இல்லாமல் 12 ரூபாய்க்கு நம் ஊரில் இன்னும் அநேக புடவைகள் வந்த வண்ணமாக இருப்பதால் அதே மாதிரியில்...... கலர் 6 கெஜம் புடவை ஒன்று அனுப்புவதுடன் புது வருட காலண்டர் பதிவுசெய்த மெல்லிய கைகுட்டை ஒன்று இனமாக புடவையுடன் சேர்த்து அனுப்பக் கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

பெயர்..........................

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

விநோத கதா மஞ்சரி
விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)
சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?
இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ரூ. 500 இனும்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் நீர் விருபபும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர் அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனும்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. 12.

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. 18.

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

உங்கள் எதிர்காலம்



பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக்கு ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. வி.பி.தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாலி, திருவல்லிக்கேணி, MADRAS 5

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

ஆனந்த குஸுமாகர லேகியம்

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம், க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும், உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி, பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம், விவரமான காட்லாக் இனம்,

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு - Post Box No. 27. — மதுரை.

புண்ணாகி வலிக்கும் காலா?

உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி; புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணாகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணாகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.



Zam-Buk

சமனமூட்டி, குணமாக்கும் கிருமிநாச மருந்து.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்.

Lovely long hair

100 % மருந்து பூர்வமானது: வாசனையுள்ளது. மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்.

விஜயா கெமிகல் & டாய்லட் ஒர்க்ஸ்,
15, கிளெமன்ஸ் ரோட்,
(ராக்ஸிக்குப் பின்புறம்.)
புரசைவாக்கம், மதராஸ் 7.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ.5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ.35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

A. B. C. Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார் :—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—6. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115. நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9. ஜடாமுனி கோவில் தெரு. மதுரை.

மதனமஞ்சரி

மாத்திரைகள்.
தேக புஷ்டியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி, ரத்த விருத்தியும், தேக புஷ்டியும் அளிப்பது. டப்பா விலை ரூ. 1—4—0.

ரமணவிலாசினி
வாழ்க்கையை நன்கு அனுபவிக்க டப்பி ரூ. 1—4—0.

கர்ப்பாமிருத சூர்ணம்
ஸ்திரீகளின் நோய்களை நீக்கி, புத்திர சந்தானம் பெற உதவியளிக்கும் ஔஷதம். டின் விலை ரூ. 2-8-0.

இனம்
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிகளும் வழி.
வைத்திய வித்தை
மதன மஞ்ஜரி பார்மஸி,
184 சைனா பஜார், மதராஸ்.

சேலம் : மாடர்ன் ஸ்டோர்ஸ், முதல் அக்ரஹாரம்.
கோயமுத்தூர் :
T. S. கருப்புசாமிசெட்டியார் ஸன்ஸ்

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P. S.

பெருங்காயம் — பாதம் எண்ணெய் - அம்லா ஹேர் ஆயில் — வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் — ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து—பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்—ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் — இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதராஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.



அம்ருதா
ரத்த சுத்தி திராவகம்

தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸ்ரீ ராம ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம் இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் தடுக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

Printed and Published by S. Chakrajani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.